# உதயன்


27

www.onlineuthayan.com

32 பக்கங்கள் சுடர் 28 கதிர் 070 வள்ளுவர் ஆண்டு 2043 கார்த்திகை 21 வியாழக்கிழமை (06/12/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 25.00


## பயங்கரவாதப் பொலிஸாரால் குடாநாட்டில் இரண்டே நாள்களில் 13 பேர் திடீர்க் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 6

யாழ். குடாநாட்டில் கடந்த இரு தினங்களாக பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸாரால் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். 19 வயது முதல் 55 வயது வரையான 13 பேர் இதுவரை கைது செய்யப்பட்டிருக்கின்றனர் என்று 'உதயன்' பத்திரிகைக்கு நம்பகரமாகத் தெரியவந்தது. இந்த எண்ணிக்கை இன்னும் அதிகம் என்று கூறப்படுகின்றபோதும் அதனை உறுதிப்படுத்தமுடியவில்லை.

கைது செய்யப்பட்டவர்களில் 7 பேரின் உறவினர்கள் அது பற்றி மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்திற்குத் தெரியப்படுத்தி இருக்கின்றனர். இவர்கள் கோப்பாய், சாவகச்சேரி, பருத்தித்துறை ஆகிய பொலிஸ் பிரிவுகளுக்கு உட்பட்டவர்கள்.

நேற்றுமுன்தினம் இரவோடு இரவாக இவர்கள் கைது செய்யப்பட்டு வவுனியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்கள். இவர்கள் சென்ற வாகனத்தில் 14 பேர் இருந்துள்ளனர் என்று ஒரு தகவல் 'உதயன்' பத்திரிகைக்குக் கிடைத்தது. எனினும் அதனை

பார்க்க பக்கம் 4

## அனைவரின் அடிப்படை உரிமைகளும் இலங்கையில் உறுதிப்பட வேண்டும்

### ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்து

மாணவர்கள், ஊடகவியலாளர்கள், எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் உள்ளிட்ட இந்த நாட்டு மக்கள் அனைவரினதும் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். இவற்றை இலங்கை அரசு செய்யும் என நாம் நம்புகிறோம்.

கொழும்பு, டிசெம்பர் 6

இலங்கை மக்கள் அனைவரினதும் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று இலங்கை அரசிடம் ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

நீதித்துறை விவகாரம், மனித உரிமைகள் உள்ளிட்ட இலங்கையின் அண்மைக்கால நிலைமை தொடர்பில் தாம் அக்கறை செலுத்தத் தொடங்கியுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் உள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான அலுவலகம் இது தொடர்பாக நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அந்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

பார்க்க பக்கம் 4

## முறிகண்டியில் பஸ் மோதி பொலிஸ் சாவு

யாழ்ப்பாணம், டிசெ.6

முல்லைத்தீவு பழைய முறிகண்டி ஏ-9 வீதியில் இடம்பெற்ற வீதிவிபத்தில் பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவர் உயிரிழந்துள்ளார். அவரை மோதிவிட்டுத் தப்பிய பஸ் புளியங்குளத்தில் வைத்துப் பிடிக்கப்பட்டது.

மாங்குளம் பொலிஸ் நிலையத்தின் வீதிப் போக்குவரத்துப் பிரிவில் கடமை புரியும் மாத்தளையைச் சேர்ந்த ஈ.டபிள்யு.ஜி.எம்.பி. எகொடவத்த (வயது-26) என்ற பொலிஸ் கொன்ஸ்டபிளே உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு மாங்குளம் பொலிஸ் நிலையத்தின் வீதிப்போக்குவரத்துப் பொலிஸ் பிரிவில் கடமை புரிந்தவரையே பஸ் மோதியது. ''நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 9 மணியளவில் கடமையின் நிமித்தம் திருமுறிகண்டி நோக்கி இவர் பயணித்துக் கொண்டிருந்தார். அந்த நேரத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த தனியார் பஸ் ஒன்று அவரை மோதி விட்டுத் தப்பிச்சென்றது. குறித்த பஸ் வவுனியா புளியங்குளம் பகுதியில் வைத்

பார்க்க பக்கம் 4

## யாழ். மாணவர் கைது தொடர்பில் உரிய நடவடிக்கைகள் உடன் தேவை

### சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்து

கொழும்பு, டிசெ.6

கைதுசெய்யப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களை உடனடியாக விடுவிக்குமாறு உள்நாட்டில் மாத்திரமன்றி வெளிநாடுகளிலிருந்தும் இலங்கை அரசுக்கு அழுத்தங்கள் குவிந்து வருகின்றன.

இந்த நிலையில் மாணவர்களை விடுவிக்க அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்தியுள்ளது.

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரினால் கடந்த முதலாம் திகதி நான்கு பல்கலைக்கழக மாணவர்கள்

பார்க்க பக்கம் 4

## கிணற்றிலிருந்து சிறுமியின் சடலம் மீட்பு

வவுனியா, டிசெ. 6.

வவுனியா சிவபுரம் பகுதியில் கிணறு ஒன்றில் இருந்து 14 வயதுச் சிறுமியின் சடலம் நேற்றுப் புதன்கிழமை காலை மீட்கப்பட்டுள்ளது.

வவுனியா சிவபுரம் பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட அன்பழகன் டுலோஜினியே (வயது-17) உயி

பார்க்க பக்கம் 4

## கொல்லப்பட்ட ஊடகர்களுக்கு நாடாளுமன்றத்தில் அஞ்சலி

### 'உதயன்' பணியாளர்கள் உட்பட

கொழும்பு, டிசெ.6

இதுவரை கொல்லப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்களுக்கு நாடாளுமன்றத்தில் நேற்றுத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினரால் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இறுதிக்கட்ட போர் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் பகுதிக்குள் சுதந்திர ஊடகவியலாளர்களை அனுமதித்திருந்தால், மனித படுகொலைகளின் எண்ணிக்கையைக் குறைத்திருக்கலாம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு ஆற்றல்படுத்தப்

பார்க்க பக்கம் 4



கைது செய்யப்பட்ட யாழ்.பல்கலைக்கழக மாணவர்களை விடுவிக்கக் கோரி போராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் பேராதனை கலஹா சந்தியில் நேற்று நண்பகல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## ரயிலில் மோதி சிறுவர்கள் இருவர் பரிதாபச் சாவு

கொழும்பு, டிசெ.6

வவுனியாவில் இருந்து மாத்தறை நோக்கி பயணித்த அதிவேக ரயிலில் மோதுண்டு இரு சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்து ஹபராதுவ - தல்பே இதிகஹவத்தை பாதுகாப்பற்ற ரயில் கடவையில் நேற்று பிற்பகல் 01.35மணி அளவில்

பார்க்க பக்கம் 4

## 'உதயன்' பத்திரிகைக்கு எதிராக மட்டும் 28 வருடங்களில் 20 வன்முறைகள்

### நாடாளுமன்றில் நேற்று சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ.6

'உதயன்' பத்திரிகைக்கு எதிராக தொடர்ந்தும் அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன என்றும் கடந்த முப்பது வருடங்களுக்குள் அப்பத்திரிகைக்கு எதிராக 20 வன்முறைச் சம்பவங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் நேற்று நாடாளுமன்றில் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு ஆற்றல்படுத்தப்

பார்க்க பக்கம் 4

## நீதித்துறையின் சுயாதீனத்தை ஒழித்து நாட்டை இராணுவமயமாக்க முயற்சி

### நாட்டை ஐக்கியப்படுத்தும் இயக்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ.6

நாட்டின் நீதித்துறை கட்டமைப்பைச் சீர்குலைத்து அதன் சுயாதீனத்தை இல்லாதொழிப்பதன் ஊடாக நாட்டை இராணுவமயப்படுத்த அரசு முயற்சிக்கின்றது என்று, அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்தும் இயக்கம் குற்றம் சாட்டியுள்ளது.

நீதியரசரைப் பதவியிலிருந்து நீக்குவதற்கு அரசு கொடுக்கும் அழுத்தங்களுக்கு அடிபணியாமல் அதனை எதிர்த்துப் போராட வேண்டும் என்று பிரதம நீதி

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடைக்காடு இளைஞருக்கு இறப்பை ஏற்படுத்திய

# கொலை வழக்கில் ஐவருக்கு 36 வருடங்களுக்கு மேல் சிறை

### ஜூரி சபை முன்பான விசாரணையில் தீர்ப்பு

யாழ்ப்பாணம், டிசெ.6

அச்சுவேலி, இடைக்காட்டில் தர்மராசா சிவானந்தனின் இறப்புக்குக் காரணமாக இருந்த மூவருக்கு 36 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது.

மேல் நீதிமன்ற ஆணையாளர் ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் திறந்த நீதிமன்றில் ஜூரி சபையினர் முன்பாக இந்த வழக்கு விசாரிக்கப்பட்டுவந்தது. நேற்று ஜூரி சபையினர் வழக்குத் தொடர்பான தமது தீர்ப்பை ஆணையாளரிடம் அறிவித்தனர். அந்தத் தீர்ப்பின் பிரகாரம் குற்றங்களுக்கான தண்டனையை ஆணையாளர் அறிவித்தார்.

2005 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 3 ஆம் திகதி தர்மராசா சிவானந்தன் (வயது-28) கொல்லப்பட்டார். அந்தச் சம்பவத்தில் வேறு நான்கு பேருக்கு காயங்கள் ஏற்படுத்தப்பட்டன. இதுதொடர்பில் 11 குற்றச்சாட்டுக்கள் எதிரிகள் 5 பேர் மீதும் சுமத்தப்பட்டன.

இந்த வழக்கை ஜூரி சபையினர் முன்பாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ள விரும்புவதாக எதிர்த்தரப்பு சட்டத்தரணி ஸ்ரீகாந்தா மேல் நீதிமன்ற ஆணையாளரிடம் கோரியிருந்தார். அதனைப் பரிசீலித்த ஆணையாளர் அனுமதியளித்தார். 7 பேர் கொண்ட ஜூரி சபை முன்பாகவிசாரணைநடைபெற்றது.

வழக்கில் முதலாவது எதிரியாக செல்லத்துரை பகீரதனும், இரண்டாவது எதிரியாக செல்லத்துரை சிறியும், மூன்றாவது எதிரியாக இராசையா பகீரதனும், நான்காவது எதிரியாக சோமசுந்தரம் கலிஸ்ரோவும், ஐந்தாவது எதிரியாக துரை தனவந்தனும் நிறுத்தப்பட்டனர். இவர்கள் அனைவரும் அச்சுவேலியைச் சேர்ந்தவர்கள்.

இவர்களில் மூன்றாம், நான்காம், ஐந்தாம் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்களில் 2குற்றச்சாட்டுக்களில் இருந்து மட்டும் அவர்கள் ஜூரிகளால் விடுவிக்கப்பட்டனர். ஏனைய 9 குற்றச்சாட்டுக்களிலும் மூவரும் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டனர். அவர்களுக்கு 36 வருடங்கள் 6 மாதங்கள் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

முதலாவது எதிரியான செ.பகீரதன் நான்கு குற்றச்சாட்டுக்களில் நிரபராதியாக இனங்காணப்பட்டார். ஏனைய 7 குற்றச்சாட்டுக்களிலும் குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டார். அவருக்கு 34 வருடங்கள் 6 மாதங்கள் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இரண்டாவது எதிரியான செ.சிறி 5 குற்றச்சாட்டுக்களில் நிரபராதி என அறிவிக்கப்பட்டார். ஏனைய 6 குற்றச்சாட்டுக்களிலும் குற்றவாளியாக இனங்காணப் பட்டதனால் நீதிமன்று அவருக்கு 33 வருடங்கள் 6 மாதங்கள் கடூழியச் சிறைத்தண்டனை விதித்தது.

ஐந்து குற்றவாளிகளும் சிவானந்தனுக்கு கொலையல்லாத இறப்பை விளைவித்த குற்றச்சாட்டுக்காக தலா 15 வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அதனை ஏககாலத்தில் அனுபவிக்க வேண்டும் என்றும் மன்று உத்தரவிட்டது. ஏனைய குற்றச்சாட்டுகளுக்கான தண்டனைகளை ஒன்றன்பின் ஒன்றாக அனுபவிக்க வேண்டும் என்றும் நீதிமன்று உத்தரவிட்டது.

கொலையல்லாத இறப்பை விளைவித்த குற்றத்துக்காக தலா 20 ஆயிரம் ரூபா வீதம் குற்றப்பணம் செலுத்தவும் 5 குற்றவாளிகளுக்கும் மன்று உத்தரவிட்டது. தவறின் 6 மாதகால சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது.

வழக்குத் தொடுநர் சார்பில் அரச சட்டவாதி செல்வி. நிசாந்தி ரட்ணம், மூத்த அரச சட்டவாதி எஸ்.குசைதாசன் ஆகியோர் சாட்சிகளை நெறிப்படுத்தினர். எதிரிகள் சார்பில் சட்டத்தரணி சர்மினி விக்னேஸ்வரனின் அனுசரணையுடன் சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா, எஸ்.வரதராஜா ஆகியோர் முற்பட்டனர். எனினும் அவர்களின் வாதங்களை நிராகரித்த ஜூரி சபை எதிரிகளை குற்றவாளிகளாக இனங்கண்டது. (உ-4)

## குற்றப்பிரேரணையை பக்கச்சார்பின்றி கையாளும் ஒழுங்கு இங்கு இல்லை

### சம்பந்தன் தெரிவிப்பு



கொழும்பு, டிசெ.6

பிரதம நீதியரசருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டுள்ள பிரேரணை விவகாரம் அமெரிக்கா உட்பட்ட முழு உலகத்தின் கவனத்தையே ஈர்த்துள்ள நிலையில், நீதியரசருக்கு எதிராக கொண்டுவரப்பட்டுள்ள குற்றப் பிரேரணையைப் பக்கச் சார்பற்ற முறையில் கையாளக்கூடிய ஒழுங்குகள் தற்போது இலங்கையில் இருப்பதாகத் தெரியவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தெரிவித்துள்ளார் .

பி.பி.சி. செய்திச்சேவை பிரதம நீதியரசருக்கு எதிராக குற்றவியல் பிரேரணை தொடர்பில் தயாரித்த விசேட செவ்வியின்போதே சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

நாடாளுமன்றத்துக்கும் உயர்நீதிமன்றத்துக்கும் இடையே இவ்விதமான ஒரு சச்சரவு, ஒரு மோதல், ஒரு கருத்து வேறுபாடு ஏற்பட்டிருப்பது நாட்டைப் பொறுத்தவரை ஒரு நல்ல விடயம் அல்ல.

ஆனால், அரசியல் ரீதியாக செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் போது, இந்த மாதிரியான நிலைமைகளை தவிர்ப்பது கடினம்.

எந்தவொரு நாட்டிலும் சட்டத்தை ஆக்கும் அதிகாரம், நிர்வாக அதிகாரம், நிறைவேற்றுஅதிகாரம் ஆகிய மூன்றிற்கும் இடையில் புரிந்துணர்வு இருத்தல் அவசியம்.

இலங்கையைப் பொறுத்தவரையில் இந்த மூன்று கருமங்களுக்கிடையிலும் பல்வேறு குறைகள் நீண்ட காலமாக இருந்து வருகின்றன. இந்தக் குறைகள் நீக்கப்பட வேண்டும்.

இவ்வாறானஒரு சூழ்நிலையில் ஏதாவது ஒரு துறையை தங்களுடைய தேவைகளுக்காகக் கட்டுப்படுத்த அல்லது அதனுடைய வரவைக் குறைக்க முயற்சிகள் எடுக்கப்பட்டால் இவ்விதமான மோதல் தவிர்க்க முடியாத ஒரு விடயமாக இருக்கும். - இப்படி அவர் தெரிவித்தார்.

செவ்வியில், பிரதம நீதியரசர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள், இந்த விசாரணையின்போது சுயாதீனமான பார்வையாளர்கள் இருக்க வேண்டும் எனக் கூறியதாக பி.பி.சிக்கு தகவல் கிடைக்கப் பெற்றுள்ளது எனவும் அந்த தகவலை உறுதிப்படுத்த முடியுமா எனவும் சம்பந்தனிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த சம்பந்தன், நாடாளுமன்ற தெரிவுக்குழு விசாரணைகளில் பேசப்பட்ட விடயங்களை தெரிவிக்க முடியாது எனவும் பார்வையாளர்கள் பற்றி அங்கு பேசப்பட்டது உண்மை எனவும் தெரிவித்தார். (சி)

## பிரபாகரனால் முடியாததை முடிக்க நினைக்கும்

# புலம்பெயர் தமிழர்களால் புதுக்கடைக்கு நிதி உதவி

### மேர்வின் சில்வா குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ.6

பிரபாகரனால் முடியாமல் போனதைச் செய்ய நினைக்கும் புலம் பெயர் தமிழர்களால் புதுக்கடைக்கு (உயர்நீதிமன்றம் அமைந்துள்ள பகுதி) நிதி பகிரப்பட்டுள்ளது என்று அமைச்சர் மேர்வின் சில்வா குற்றஞ்சாட்டினார்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு ஆற்றல்படுத்தப்பட்ட அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போது அமைச்சர் மேலும் கூறியதாவது:-

எனக்கு முதல் பேசிய கபீர் ஹாசீம் புத்திசாலியானவர்; கற்றுத்தேர்ந்தவர். ஆனால், அவரின் கருத்துகள் மடைத்தனமாக உள்ளன. 30 வருட காலத்துக்கு முன்னர் எத்தனை வீதிகள் மூடப்பட்டிருந்தன. எத்தனை கோவில்கள், பன்சாலைகள், பள்ளிகளுக்கு போகமுடியாமல் இருந்தது என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள்.

அன்று உங்களால்கிழக்கில் புரியாணி சாப்பிட முடிந்ததா? இன்று சாப்பிட முடிகின்றது. அதேவேளை, குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டவருக்கு சோபித தேரர் பிரித் நூல் கட்டுகின்றார். இது காவியுடையை அவமதிக்கும் செயலாகும். இதை நான் கூறினேன் என்று ஊடகங்கள் பயப்படாமல் சொல்லுங்கள். பிரித் நூல் என்பது சிங்கர் நூல் அல்ல.

தேர்தல் கேட்கப்போகும் பெண்ணைப்போல நீதியரசர் செயற்படுகின்றார். புதுக்கடைக்கு புலம்பெயர் தமிழர்களால் நிதி வழங்கப்பட்டுள்ளது - என்றார்.

ஐ.லவ்.யூ

அதேவேளை, அமைச்சர் மேர்வின் சில்வா பேசிக் கொண்டிருக்கையில் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அத்துக்கோரல குறுக்கீடு செய்ததால், அமைச்சர் 'ஐ.லவ்.யூ. பிளீஸ்' என்றும் கூறினார். இதனால் சபையில் பெரும் சிரிப்பொலி ஏற்பட்டது.

# இரணைமடு குளத்தில் மீன்பிடிக்க அனுமதி

கிளிநொச்சி, டிசெ.6

கரைச்சி கிழக்கு நன்னீர் மீன்பிடி கூட்டுறவுச் சங்கத்தின் கீழுள்ள மீனவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று முற்பகல் 10 மணிக்கு வட்டக்கச்சி மாயவனூர் நன்னீர் மீன்பிடி சங்கத்தில் நடைபெறவுள்ளது.

இதில் இரணைமடுக் குளத்தில் மீன்பிடி அனுமதி தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளது. இந்தக் கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட அரச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன், கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் எஸ்.தவராசா மற்றும் கிளிநொச்சி மாவட்ட நன்னீர் மீன்பிடி அலுவலர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ-18)

# செய்த குற்றங்களை மூடி மறைக்க பிரபாகரன் பெயரைத் தூக்கும் அரசு

### மேர்வினுக்கு மனோ கணேசன் உச்சியடி

கொழும்பு, டிசெ.6

தாம் இழைக்கும் அனைத்துக் குற்றங்களையும் மூடி மறைக்க பிரபாகரன் மற்றும் புலம்பெயர் தமிழர்களின் முத்திரையை எல்லாவற்றின் மீதும் அரசு குத்துகின்றது என்றும் நாட்டில் இனவாதத் தீயைக் கொழுந்து விட்டு எரியச் செய்வதற்காகவே அரசு இதுபோன்ற பொய்க் குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றது என்றும் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் குற்றஞ்சாட்டினார்.

தமிழர்களின் உரிமைகள் வழங்கப்படும்வரை வடக்கு, கிழக்கில் சமாதானத்தை நிலைநிறுத்த முடியாது என அவர் தெளிவுபடுத்தி உள்ளார். தமது உரிமைகளைப் பெறுவதற்காக ஜனநாயக வரையறைக்குள் தமிழர்கள் நடத்தும் போராட்டங்களை முடக்கி, மீண்டும் ஆயுத கலாசாரத்திற்கு அரசு வித்திடுகின்றதா என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

தெற்கு மக்களுக்கு கொடுக்கப்படும் உரிமைகள் வடக்கு மக்களுக்குக் கொடுக்கப்படாவிட்டால் வடக்கு, தெற்கு வெவ்வேறு நாடாகிவிடும் என்றும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்க நேற்று (நேற்றுமுன்தினம்) தெரிவுக்குழு விசாரணைகளுக்காக நாடாளுமன்றத்திற்குச் சென்றார். அந்த நேரத்தில் அவருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தவதற்காக அமைச்சர் மேர்வின் சில்வா பெருந்தொகையான மக்களை அழைத்து வந்திருந்தார்.

பிரபாகரன் மீது பொய்க் குற்றச்சாட்டு

பிரபாகரனால் கிளிநொச்சியில் செய்யமுடியாது போனதை புதுக்கடையில் செய்து முடிக்கத்தான் புலம்பெயர் தமிழர்களின் ஆதரவுடன் நாடாளுமன்றத்திற்கு எதிரான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று அமைச்சர் மேர்வின் சில்வா குறிப்பிட்டிருந்தார். இது முற்றிலும் பொய்யான குற்றச்சாட்டுக்களாகும்.

தாம் இழைக்கும் தவறுகளை மூடிமறைப்பதற்காக பிரபாகரன், புலம்பெயர் தமிழர்கள் ஆகியோர் மீது அரசு பொய்க்குற்றச்சாட்டுகளைச் சுமத்துகிறது. புலம்பெயர் தமிழர்களிடமுள்ள பணம் அனைத்தையும் பெற்றுக்கொண்டு அவர்களையும் தம்முடன் வைத்துக் கொண்டுதான் அரசு செயற்படுகின்றது.

பிரபா்கரனின் முத்திரையைக் குத்தி நாட்டில் இனவாதத் தீயைக் கொழுந்துவிட்டு எரியச் செய்வதற்கு அரசு முயற்சிக்கின்றது. - என்றார்.

# மாணவர்கள் விடுவிக்கப்படும்வரை தொடர்ச்சியான போராட்டத்துக்கு முடிவு

### தமிழ்க் கட்சிகள் 5 இணைந்து தீர்மானம்

யாழ்ப்பாணம், டிசெ.6

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் மூவரும் விடுவிக்கப்படும்வரை தொடர் போராட்டங்களை நடத்த ஐந்து அரசியல் கட்சிகள் முடிவு செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான கட்சிப் பிரதிநிதிகளின் கலந்துரையாடல் நேற்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் இடம்பெற்றது. இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக அதன் பேச்சாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசிய முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செயலாளர் கஜேந்திரன், ஜனநாயக மக்கள் முன்னணி சார்பாக அதன் பேச்சாளர் பாஸ்கரா, நவசமசமாஜக் கட்சியின் சார்பாக ஜெனகன், மகேந்திரன், புதிய ஜனநாயக மாக்ஸிய லெனினிய கட்சியின் செல்வம் கதிர்காமநாதன், தணிகாசலம் ஆகியோர் பங்குகொண்டனர்.

இந்தச் சந்திப்பில் நாளை கொழும்பில் பத்திரிகையாளர் மாநாடொன்றை நடத்தி தமது நிலைப்பாட்டையும், யாழ்.பல்கலைக்கழக சூழலில் இடம்பெற்ற அசம்பாவிதங்களையும் பெரிதுபடுத்துவது என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பு குறித்து ஜனநாயக மக்கள் முன்னணியின் பேச்சாளரும் கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான பாஸ்கராவிடம் தொடர்பு கொண்டு கேட்டோம்.

''இதுவரையும் காணாமற்போனோர், சிறைக் கைதிகள், மீள்குடியேற்றம், நில ஆக்கிரமிப்பு தொடர்பான பிரச்சினைகளுக்காகப் போராடி வந்தோம். இப்போது ஜனநாயகத்துக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலுக்காகப் போராடவுள்ளோம். யாழ்.பல்கலைக்கழக சூழலில் இடம்பெற்ற சம்பவங்கள் எல்லாம் மிகவும் மோசமானவை. கண்டிக்கப்பட வேண்டியவை. ஜனநாயகத்துக்கு முரணானவை. மாணவர்கள் மூவரும் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும். இல்லையெனில் தொடர்ச்சியாகப் போராடுவோம். இதற்காக தமிழ்க் கட்சிகள் அனைத்தும் இன்று ஒன்றிணைந்துள்ளன.'' என்றார்.(ஐ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ரயில் பாதைகள் ஊடறுக்கும் இடங்களில் மேம்பாலங்கள்

யாழ்ப்பாணம், டிசெம்பர் 6

**பிரதான வீதிகளில் போக்குவரத்து நெருக்கடி உள்ள இடங்களில் ரயில் பாதைகள் ஊடறுக்கும் பகுதிகளில் மேம்பாலம் அமைப்பது தொடர்பில் ஆலோசிக்கப்பட்டு வருவதாக யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தெரிவித்தார்.**

பளை முதல் காங்கேசன்துறை வரையிலான ரயில் பாதைப்புனரமைப்புத் தொடர்பான மீளாய்வுக் கலந்துரையாடல் யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இது குறித்து மேலதிக அரச அதிபர் மேலும் தெரிவித்ததாவது:-

ரயில் பாதை அமைக்கப்படும் பொழுது வீதிகளை பல இடங்களில் குறுக்கிட வேண்டியுள்ளது. சில வீதிகள் ரயில் ஓடாத காலத்தில் புதிதாக முளைத்தவை. எனவே உள்ளகமாக இணைக்கக்கூடிய ஒழுங்கைகள், வீதிகளை இணைத்து இயலுமான வரை ரயில் பாதையை குறுக்கிடாத வகையில் அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது. இது தொடர்பாக அந்தப் பகுதி பிரதேச செயலர்கள், பிரதேச சபைத் தலைவர்கள் மக்களுடன் கலந்துரையாடி எந்த வீதிகளை மூடுவது எந்த வீதிகளை இணைப்பது என்பது தொடர்பில் தீர்மானிக்கவுள்ளனர்.

மேலும் பிரதான வீதிகளில் சில இடங்களில் ரயில் பாதை வீதிகளை ஊடறுக்கின்றது. போக்குவரத்து நெருக்கடியான இடங்களில் இவ்வாறு ரயில் பாதை ஊடறுப்பதால் அந்த இடங்களில் மேம்பாலம் அமைத்து போக்குவரத்தை இலகுவாக்குவது தொடர்பில் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

ரயில் வீதிகளைக் கடக்கும் இடங்களில் சமிக்ஞை விளக்குகளும், ஒலி எழுப்பும் ஹோர்ன்களுமே புதிய நடைமுறையில் அமைக்கப்பட்டு வருகின்றன. யாழ்ப்பாணத்தில் அவற்றுடன் பாதுகாப்பு வேலிகளையும் அமைக்குமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இதனைவிட ரயில் நிலையங்களில் விசேட தேவை உடையவர்களுக்குரிய வசதிகளை ஏற்படுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.அத்துடன் ரயில்வே ஊழியர்கள் தங்குவதற்கு ரயில் திணைக்களங்களுக்கு அருகில் விடுதிகள் அமைக்கப்படுவதற்கு இடையில் தற்காலிகமாக வீடுகளையாவது பெற்றுத்தருமாறு ரயில்வே திணைக்களத்தால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. - என்றார். (த-5)

## நலிவுற்றோருக்கு உதவிக்கொடுப்பனவு

தென்மராட்சி, டிசெ.6

தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த மேலும் ஐந்து பேருக்கு யுனிசெப் செயற்றிட்டத்தின் கீழ் நலிவுற்ற குடும்பங்களுக்கான சுய தொழில் உதவிக் கொடுப்பனவுகள் மாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி ந.இன்பராஜால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவர்களில் இருவருக்கு தையல் இயந்திரங்களும் ஒருவருக்கு நீரிறைக்கும் இயந்திரங்களும் மற்றவருக்கு கோழிவளர்ப்புக்கு கொடுப்பனவும் வழங்க பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவினர் ஏற்பாடுகள் மேற்கொண்டுள்ளனர்.

சாவகச்சேரி சங்கத்தானையைச் சேர்ந்த புஷ்பகுமார் வாசுகி, சிவகுமார் ஜெகதா, கெற்பேலி கிழக்கைச் சேர்ந்த சுந்தரம் முகுந்தினி ஆகியோருக்கு தையல் இயந்திரங்களும் கொடிகாமம் கச்சாய் தெற்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் ராதா என்பவருக்கு நீரிறைக்கும் இயந்திரமும், கொடிகாமம் வெள்ளாம் போக்கட்டியைச் சேர்ந்த அன்னலிங்கம் கமலாசினி என்பவருக்கு கோழி வளர்ப்புக்குரிய உதவிப் பொருள்களும் வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுனிசெப் செயற்றிட்டத்தின் கீழ் பிரதேசத்தைச் சேர்ந்த 7 நலிவுற்ற குடும்பங்களுக்கு உதவிகள் ஏற்கனவே வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

## விழிப்புணர்வுக் கருத்தரங்கு

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர் எய்ட்ஸ் மற்றும் பாலியல் ஒழிப்பு மாதத்தை முன்னிட்டு விழிப்புணர்வு கருத்தரங்குகளை தென்மராட்சி பிரதேசத்தில் ஆரம்பித்துள்ளனர்.

பிரதேசத்தில் உள்ள பொது அமைப்புகளின் கட்டடங்களில் அந்தந்தப் பிரிவு பொது சுகாதாரப் பரிசோதகர்களால் விழிப்புணர்வு கருத்தரங்குகளை நடத்தி வருகின்றனர்.

நேற்று மட்டுவில், மந்துவில் ஆகிய பிரிவுகளில் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் தென்மராட்சியில் உள்ள சுகாதார வலயங்களிலும் விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

## ஓய்வூதியருக்கான பத்திரங்கள் வந்தன

தென்மராட்சி, டிசெ.6

தென்மராட்சிப் பிரதேச ஓய்வூதியர்களுக்கு அடுத்த வருடத்துக்கான வாழ்நிலை அத்தாட்சிப் பத்திரங்கள் பிரதேச செயலக ஓய்வூதியக் கிளையினரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்தப் படிவத்தை 2013 ஜனவரி முதலாம் திகதிக்குப் பின்னர் பூர்த்தி செய்து பிரிவு கிராம அலுவலரிடம் கையொப்பம் பெற்று 2013 ஜனவரி 20 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலக ஓய்வூதியக் கிளையில் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி பிரதேச கிராம அலுவலர்கள் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்த கிராம அலுவலர்களால் விண்ணப்பப்படிவம் உறுதிப்படுத்தப்பட்டிருப்பின் ஓய்வூதியக் கோவை அந்தப் பிரதேச செயலகத்துக்கு மாற்றப்படுமென குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-9)



கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கத்தின் 48 ஆவது சிரார்த்த தினமும் சர்வதேச கூட்டுறவாளர் விழாவும் நேற்று வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றன. மாவட்டக் கூட்டுறவுச் சபையின் தலைவர் ஆர். ராஜாராம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வட மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். நிகழ்வில் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா நினைவுப் பேருரை நிகழ்த்தினார். இந்த நிகழ்வில் கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன. அத்துடன் மூத்த கூட்டுறவாளர்களும் கௌரவிக்கப்பட்டனர். நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர் மேடையில் அமர்ந்துள்ளனர். (ம-13-17)

## 15 லட்சம் ரூபா செலவில் கண்டுவில் வீதி திருத்தம்

தென்மராட்சி, டிசெ.6

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் நீண்ட காலமாக மணல் வீதியாக காணப்பட்ட கண்டுவில் முதலாம் ஒழுங்கை 15 லட்சம் ரூபா செலவில் தார் வீதியாக மாற்றப்படவுள்ளது.

நகரசபை உறுப்பினர் சி.கிஷோரின் வேண்டுகோளுக்கிணங்க இந்த வீதி தார் வீதியாக மாற்றப் படுவதுடன் இதனுடன் இணைந்த கண்டுவில் வீதியும் புனரமைக்கப்படவுள்ளது.


வீதி அமைக்கும் பணிகள் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டன.

நகரசபை உறுப்பினர்களால் இவ் வருட வரவு செலவுத் திட்ட அறிக்கைக்கு வழங்கப்பட்ட வீதி அபிவிருத்தி திட்டத்தில் சபை நிதியில் இருந்து முன்னுரிமை அடிப்படையில் புனரமைக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

கடந்த மாதம் ஐந்தாம் வட்டாரத்தில் உள்ள யாழ்ப்பாண வீதி முதலாம் ஒழுங்கை சபை உறுப்பினர் ந. சுதர்சனின் வேண்டுகோளுக்கிணங்க 15 லட்சம் ரூபா செலவில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

நேற்று இடம்பெற்ற கண்டுவில் முதலாம் ஒழுங்கை புனரமைப்பு பணியின் ஆரம்ப வேலையை உறுப்பினர் சிகிஷோர் முதற்கல்லை வைத்து ஆரம்பித்து வைத்தார்.

நிகழ்வில் நகரசபை தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை மற்றும் உறுப்பினர், ஊர் மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-9)




வரணி பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத இறுதி நாள் நிகழ்வுகள் அண்மையில் பொது நூலக மண்டபத்தில் இடம்பெற்றன. தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்கள், வாசகர்கள் ஆகியோருக்கு பிரதேச சபைத் தலைவர் ரி.துரைராசா பரிசில்கள் வழங்குகிறார்.

## மாணவர் ஒன்று கூடலும் சஞ்சிகை வெளியீடும்

தென்மராட்சி, டிசெ.6

சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவ முதல்வர் சபை ஒன்றுகூடலும் முதன்மை சஞ்சிகை வெளியிடும் நேற்று கல்லூரி அருணாசலம் மண்டபத்தில் இடம்பெற்றன.

சிரேஷ்ட மாணவ தலைவர் நா.பானுகோபன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவனும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகரு[illegible] வைத்திய கலாநிதி [illegible] சிறப்பு விருந்தினராக கல்லூரியின் முன்னாள் சிரேஷ்ட மாணவ தலைவரும் கல்லூரி பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளை செயலாளருமாகிய நா.மயூரனும் கலந்துகொண்டனர். கல்லூரி மாணவ முதல்வர் சபையால் வெளியிடப்பட்ட முதன்மை சஞ்சிகையின் வெளியீட்டுரையை சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன் நிகழ்த்தினார்.

சஞ்சிகையின் முதல் பிரதியை சபை பொறுப்பாசிரியர் ந.பாலச்சந்திரன் வெளியிட சிறப்பு விருந்தினர் நா.மயூரன் பெற்றுக்கொண்டார். கல்லூரி அதிபர் அ.கைலாயபிள்ளை உட்பட பலர் உரையாற்றினர். (ம-9)

# நிகழ்வுகள் இன்று

### ஒளி விழாவும் பரிசளிப்பும்

யாழ்ப்பாணம், டிசெ.6

இளவாலை மரீசன் கூடல் றோ.க.த.க. பாட சாலையின் ஒளிவிழாவும் பரிசளிப்பு விழாவும் காலை 9.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் சூ.நோபேட் உதயகுமார் தலைமையில் இடம்பெறவுள்ளன.ஆசியுரையை பங்குத் தந்தை அருட் திரு. யோ அ. அருள்தாசன் அடிகளார் நிகழ்த்துவார்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச. சிவானந்த ராசா கலந்து கொள்வார். (ம)

* * *

நவாலி சென் பீற்றேர்ஸ் றோ.க.த.க பாடசாலையின் ஒளி விழாவும் பரிசளிப்பு விழாவும் காலை 8 மணிக்கு பாடசாலை அதிபர் அ.ஜெகதீஸ்வரன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி. வலய மாணவர் அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி தயாளினி தேவராஜாவும் சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.சிவானந்தராசாவும் கலந்து கொள்வர். (ம-100)

* * *

ஊர்காவற்றுறை சரவணை சின்னமடு றோ.க.த.க. வித்தியாலய ஒளிவிழா முற்பகல் 10 மணிக்கு வித்தியாலய அதிபர் கோ.பத்மநாதன் தலைமையில் நடைபெறும். நிகழ்வில் பிரதம விருந்தினராக வண.பிதா நா.பீற்றர் கலந்துகொள்வார். (ம-7)

* * *

தென்மராட்சி கல்வி வலய கிறிஸ்தவ ஆசிரியர் ஒன்றியத்தின் ஒளிவிழா பிற்பகல் 1.30 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகச் சாவகச்சேரி கத்தோலிக்க பங்குத் தந்தை அருட்பணி யோசப் பிரான்சிஸ் அடிகளும் சிறப்பு விருந்தினராக தென்னிந்திய திருச்சபையின் சாவகச்சேரி தேவாலய போதகர் அருட்பணி ஏ.கே.செல்வநாயகமும் கலந்துகொள்வர்.

மிருசுவில் றோ.க.கத. பாடசாலை, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, கைதடி நவீல்ட் பாடசாலை, நாவற்குளி ம.வி., சாவகச்சேரி றோ.க.த.க. பாடசாலை, சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆகியவற்றின் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் வழிபாடுகளும் ஆசீர்வாதமும் இடம்பெறும். (ம-9)

### பாடப் புத்தக விநியோகம்

யாழ்ப்பாணம், டிசெ.6

வட மாகாணக் கல்வித் திணைக்கள இலவச பாடப் புத்தக விநியோக நிகழ்வு முற்பகல் 12 மணிக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தலைமையில் புத்தூர் ஸ்ரீ சோமஸ் கந்தாக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. வட மாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலக்சுமி ரமேஸ் பிரதம விருந் தினராகக் கலந்துகொள்வார் (ம)

### முன்பள்ளி கண்காட்சி

யாழ்ப்பாணம், டிசெ.6

யாழ். மாநகர சபையின் முன் பள்ளிக் கண்காட்சி நல்லூர் சங்கிலியன் வீதியில் அமைந்துள்ள முன்பள்ளிக் கட்டடத்தில் இன்றும் நாளையும் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை இடம் பெறவுள்ளது. ஏனைய முன்பள்ளி ஆசிரியர்களின் மாணவர்களும் இதனைப் பார்வையிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம)

### சான்றிதழ் வழங்கல்

யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் நிஸ்கோ பிரிவால் இளைஞர், யுவதிகளிடையே சுய தொழிலை ஊக்குவிக்கும் நோக்குடன் 'செவி' திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 51 இளைஞர், யுவதிகளுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு முற்பகல் 10 மணிக்கு வீடமைப்புச் செயலகக் கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டப்பகலில் மன்னாரில் ஆயுதமுனையில் கொள்ளை



மன்னார், டிசெ.6

மன்னாரில் நேற்று முற்பகல் ஆயுதமுனையில் துணிகர கொள்ளைச் சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளதாகப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனை மன்னார் பொலிஸ் நிலைய பெறுப்பதிகாரி துஸார தளுவத்த உறுதிப்படுத்தினார்.

மன்னார் நகர்ப் பகுதியில் அமைந்துள்ள சிகரட் விற்பனை நிலையம் ஒன்றிலேயே இந்தக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வழமையாக குறித்த சிகரெட் விற்பனை நிலையம் திறக்கப்பட்டு விற்பனை நடவடிக்கைகள் நடைபெற்ற சமயம் முகமூடி அணிந்து மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் கைத்துப்பாக்கியைக் காட்டிப் பணியாளர்களை மிரட்டி கொள்ளையிட்டுள்ளனர்.

இதன்போது 15 இலட்சம் பெறுமதியான பொருள்கள் கொள்ளையிடப்பட்டுள்ளதாக கடை உரிமையாளர் தெரிவித்துள்ளார். இந்தச் சம்பவம் பொலிஸ் நிலையத்துக்கு தெரியப்படுத்தப்பட்டதை அடுத்து அங்கு வந்த பொலிஸார் விசாரணைகளை நடத்தியதுடன் விசேட பொலிஸ் குழு ஒன்றை அமைத்து கொள்ளையர்களைப் பிடிப்பதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

மன்னார் பொலிஸ் நிலையத்தில் இருந்து சுமார் 100 மீற்றர் தொலைவில் மக்கள் நடமாட்டம் அதிகரித்த பகுதியில் இந்த துணிகர சம்பவம் இடம்பெற்றுள்ளது.

(ஐ-ரி-12)

# இந்திய மீனவர்களின் அத்துமீறலை நிறுத்தாவிடில் பணிப்புறக்கணிப்பு

## ஆர்ப்பாட்டத்தில் முல்லை மீனவர்கள் அறிவிப்பு

முல்லைத்தீவு, டிசெ. 6

இந்திய மீனவர்களின் அத்து மீறல் உடன் நிறுத்தப்படாவிட்டால் தொழில் புறக்கணிப்பில் ஈடுபடுவோம் என முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் அறிவித்துள்ளனர்.

நேற்றுப் புதன்கிழமை நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியின் பின்னர் மீனவர்கள் இந்த அறிவிப்பை விடுத்துள்ளனர். முல்லைத்தீவு மாவட்டக் கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் அத்து மீறலை உடனடியாக நிறுத்த வேண்டும் எனக் கோரி நேற்று முல்லைத்தீவில் மீனவர்கள் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினார்கள்.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் முல்லைதீவு மீனவர்களுடன் தென்னிலங்கை மீனவர்களும் இணைந்து கொண்டனர்.

இந்தப் பேரணியில் 24 சங்கங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் கலந்து கொண்டனர்.

முல்லைத்தீவு மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



இலங்கைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் அத்துமீறித் தொழில் செய்வதுடன் தடைசெய்யப்பட்ட உபகரணங்கள், வலைகள், படகுகள் என்பனவற்றைப் பயன்படுத்துவதால் எமது கடல் வளங்கள் சூறையாடப்படுகின்றன. இந்த நடவடிக்கை உடன் நிறுத்தப்பட வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட மீனவர்கள் கோஷம் எழுப்பினார்கள்.

நேற்று முற்பகல் 10 மணிக்கு முல்லைத்தீவு ஆழிப் பேரலை நினைவுத் திடலில் ஆரம்பமான இந்தப் பேரணி முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தைச் சென்றடைந்தது. அங்கு முல்லைத்தீவு அரச அதிபர் நா.வேதநாயகத்திடம் மனு ஒன்றும் கையளிக்கப்பட்டது. (த-14-16-435)

## முறிகண்டி...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

துப் பிடிக்கப்பட்டுப் புளியங்குளம் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளது.'' என்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (த-6)

## கிணற்றிலிருந்து...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

ரிழந்துள்ளார்.

பொதுமக்கள் கொடுத்த தகவலையடுத்து சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டு வவுனியா பொது வைத்தியசாலையில் உடற்கூறுப் பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பாடசாலைக்குச் சென்ற பின் இவர் காணாமல் போயிருந்தார் என்று பொலிஸார் கூறுகின்றனர்.

மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றன.

(த-402)

## ரயிலில்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

இடம்பெற்றுள்ளது.

விபத்தில் சைக்கிளில் பயணித்த ஹிமன் சத்சர (வயது 6) மற்றும் ரக்ஷமிக மதுசான் ( வயது 11) ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

சடலங்கள் பிரேத பரி சோதனைக்காக கராபிட்டி வைத்திய சாலையில் ஒப் படைக்கப்பட்டுள்ளன.

தாயார் வெளிநாட்டில் இருந்து அனுப்பிய பணத்தில்புதியசைக்கிளை வாங்கி ஓடிப் பழகியபோதே இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது. (ஐ)

## யாழ்.மாணவர்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

கைது செய்யப்பட்டனர். இவர்கள் வவுனியா சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனவும், இவர்கள் துன்புறுத்தப்படக் கூடிய அபாயம் காணப்படுகிறது என்றும் மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

குறித்த மாணவர்களுக்கு எதிராக உத்தியோகபூர்வமாக குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளனவா என்பது இதுவரை தெரியவில்லை என்பதனையும் மன்னிப்புச் சபை அறிவித்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட நான்கு மாணவர்களில் ஒருவர் நேற்று முன்தினம் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார். (சி)

## கொல்லப்பட்ட...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

பட்ட அமைச்சுகள் மீதான குழு நிலை விவாதத்தில் அவர் உரையாற்றினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஊடகத்துறையில் துணிச்சலாக் கருத்துகளை வெளியிட்ட சிவராம், நடேசன் உள்ளிட்டவர்கள் கொல்லப்பட்டனர். 'உதயன்' பத்திரிகை ஊழியர்களும் கொல்லப்பட்டனர். இவர்களுக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நான் அஞ்சலியைச் செலுத்திக் கொள்கின்றேன்.

முள்ளிவாய்க்கால் பகுதிக்குள் சுதந்திர ஊடகவியலாளர்களை - நேர்த்தியாக எழுதக்கூடியவர்களை அனுமதித்திருந்தால் மனிதப் படுகொலைகளைக் குறைத்திருக்கலாம். ஒரு சிலரே அங்கு செல்ல அனுமதிக்கப்பட்டனர் - என்றார். (சி)

## உதயன்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

பட்ட அமைச்சுகள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றினார் அவர். அவர்மேலும்தெரிவித்ததாவது:-

1990ஆம் ஆண்டு ஜனவரி முதல் இதுவரை 44 ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இதில் தமிழ் ஊடகவியலாளர்களின் எண்ணிக்கையே அதிகம்.

கடந்த 28 வருடங்களுக்குள் 'உதயன்' பத்திரிகைக்கு எதிராக 20 தடவைகள் வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளன. அதன் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டனர். அண்மையில் அந்தப் பத்திரிகையின் ஆசிரியர் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பல அடக்குமுறைக்கு மத்தியிலேயே 'உதயன்' பத்திரிகை இயங்கிவருகின்றது.

ஊடகவியலாளர்களுக்கு அண்மையில் மடிக்கணினிகள் வழங்கப்பட்டன. இதில் தமிழ் ஊடகவியலாளர்களுக்குப் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளது. இந்த நிலை மாறவேண்டும்.- என்றார். (சி)

## நீதித்துறையின்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

யரசரிடம் நவசமசமாஜக் கட்சித் தலைவருமான கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன வேண்டுகோள் விடுத்தார்.

கொழும்பிலுள்ள அஸாத்சாலி நிலையத்தில் நேற்று இடம் பெற்ற 'அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்துவோம்' இயக்கத்தின் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

பிரதம நீதியரசருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்துவதன் ஊடாக அவர் பதவி விலகுவார் என அரசு எதிர்பார்க்கிறது.

சட்டம் இயற்றும் அதிகாரம் நாடாளுமன்றத்திற்கு இருக்கிறது. அரசமைப்பை முழுமையாகவோ பகுதியாகவோ திருத்தம் செய்யவும் நாடாளுமன்றத்திற்கு முடியும். ஆனால், நீதித்துறைதான் அதிகாரமிக்க இடம். அதுதான் நாட்டை ஆட்சிசெய்யவேண்டும். அப்போதுதான் நீதியான ஆட்சி நாட்டில் நிலவும்.

மன்னர் காலங்களில், அவர் கூறுவது அனைத்தும் சட்டமாக்கப்பட்டது. இந்த முறைமையை இல்லாதொழிக்கவே நாடாளுமன்றம் கொண்டுவரப்பட்டது.

நாட்டில் சிறப்பான ஆட்சி நிலவ வேண்டுமெனில், நீதித்துறை சுயாதீனமாகச் செயற்பட வேண்டும். ஆனால் இன்று நீதித்துறை சுயாதீனத்தை இல்லாது ஒழிப்பதன் ஊடாக நாட்டை இராணுவமயப்படுத்தவா அரசு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது?

பௌத்த இதிகாசங்களில் வரும் 'சிஞ்சி மான' போலத்தான் அரசு செயற்படுகிறது. தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி பிரதம நீதியரசரைப் பதவியிலிருந்து நீக்க அது முயற்சிக்கிறது. (சி)

## பயங்கரவாத

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

உறுதிப்படுத்த முடியவில்லை.

**சுன்னாகத்தில் ஐவர் கைது**

இவர்கள் தவிர சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட 5 பேர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர். காலையில் விசாரணைக்காக பொலிஸ் நிலையம் அழைக்கப்பட்ட இவர்கள் பின்னர் வவுனியாவுக்கு ஏற்றப்பட்டனர்.

சந்தேகத்தின் பேரில் இவர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர் என்று பயங்கரவாத விசாரணைப் பிரிவுப் பொலிஸ் அதிகாரி ஒருவர் தன்னிடம் தெரிவித்திருக்கிறார் என்று மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரி எஸ்.கனகராஜ் 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டவர்களில் அநேகமாக எல்லோரும் வன்னி இறுதிப் போரின் பின்னர் அரசினால் நடத்தப்பட்ட முகாம்களில் இருந்து திரும்பி மீளக்குடியமர்ந்தவர்கள். அவர்களில் சிலர் முன்னாள் போராளிகள்.

**இன்றும் சிலர் கைதாகலாம்**

கைது செய்யப்பட்டவர்கள் தவிர வேறு சிலரையும் கைது செய்வதற்கான நடவடிக்கைகளில் பொலிஸார் தீவிரம் காட்டி வருகின்றனர். இவர்களில் முன்னாள் போராளிகளும் அடக்கம்.

இன்று காலை அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கு வருமாறு தனிச் சிங்களத்தில் எழுதப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ள கடிதம் 'உதயன்' பத்திரிகைக்குக் கிடைத்துள்ளது.

தாமும் கைது செய்யப்படலாம் என்று இவர்கள் அஞ்சுகிறார்கள்.

**காணாமல்போனவர் கைது**

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் வல்வெட்டித்துறை, ஊரணியைச் சேர்ந்த அருள்பாலன் டிசோக்ராஜ் (வயது 19) என்று அவரது உறவினர்கள் கூறுகின்றனர்.

நேற்றுமுன்தினம் காலையில் தண்ணீர் அள்ளுவதற்காகச் சென்ற தனது உறவினரான டிசோக்ராஜ் பயங்கரவாத விசாரணைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார் என்பது நேற்று மாலையே தமக்குத் தெரியவந்தது என்று உறவினர் ஒருவர் 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தார்.

''பிள்ளையார் கோயில் கிணற்றில் தண்ணீர் அள்ளுவதற்காகச் சென்றிருந்தார். பின்னர் அவர் பற்றிய தகவல் ஏதும் இல்லை. உயர்தரம் படித்துவிட்டு கணினி கற்றுக் கொண்டிருந்தார். நேற்று மாலையில் வீட்டுக்கு வந்த பொலிஸார், பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் அவரைக் கைது செய்திருக்கின்றனர் என்று தெரிவித்தனர். அவரது கணினி மற்றும் பென்ட்ரைவ் உடன் பெற்றோரையும் சகோதரர்களையும் இன்று வவுனியாவுக்கு வருமாறு அவர்களைப் பணித்துள்ளனர்'' என்று அவர் தெரிவித்தார். (உ-5,8)

## அனைவரின்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நீதித்துறை விவகாரம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பாக இலங்கையின் அண்மைக்கால சம்பவங்கள் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் கவனம் செலுத்தியுள்ளது.

இலங்கையின் நீதித்துறையின் பாதுகாப்பை உறுதிப்படுத்த இலங்கை அரசு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் என்று நாம் நம்புகிறோம். அதை நாம் எதிர்பார்த்து இருக்கின்றோம்.

அதேபோல், வெலிக்கடை சிறைச்சாலையில் இடம்பெற்ற இறப்புச் சம்பவம் தொடர்பான விசாரணை பக்கச்சார்பின்றி இடம்பெறுவதையும் அந்த விசாரணை துரிதப்படுத்தப்படுவதையும்இலங்கை அரசு உறுதிப்படுத்தும் என்றும் நம்புகிறோம்.

மாணவர்கள், ஊடகவியலாளர்கள், எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் உள்ளிட்ட இந்த நாட்டு மக்கள் அனைவரினதும் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும். இவற்றை இலங்கை அரசு செய்யும் என நாம் நம்புகிறோம்.

உள்ளூர் மற்றும் சர்வதேச முக்கிய செயற்பாட்டாளர்கள் இலங்கையின் நிலைமை தொடர்பில் அதிக அக்கறை கொண்டுள்ளனர்.

ஆசிய மனித உரிமைகள் அமைப்பினர், பொதுநலவாய நாடுகளின் செயலாளர், நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகளின் சுயாதீனத்துக்கான ஐ.நா. விசேட பிரதிநிதி ஆகியோரும் இலங்கையின் அண்மைக்கால நிகழ்வுகள் தொடர்பில் அக்கறை செலுத்தியுள்ளனர் - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரால் பாதிக்கப்பட்ட எங்களை மனிதாபிமான ரீதியில் கவனியுங்கள்

## மன்னார் தமிழ் மக்கள் ஜனாதிபதிக்கு மனு



மன்னார், டிசெ.6

போர் இடர்களால் பாதிக்கப்பட்டு வீடுகளையும் தொழில்துறைகளையும் இழந்த நிலையில் அல்லல்படும் எங்களை, மனிதாபிமான ரீதியில் கவனித்து உதவிகளைப் பெற்றுத் தாருங்கள். இந்திய உதவிகள் போர் வலயமான வன்னிப் பிரதேசத்தில் வீடுகளையும், தொழில் துறைகளையும், பல்லாயிரக் கணக்கில் பெறுமதி மிக்க உயிர்களையும் உக்கிரமானதும் இரக்கமற்றதுமான எறிகணைத் தாக்குதல்களாலும் விமான குண்டு வீச்சுகளாலும் இழந்த தமிழ் மக்களுக்கே உரியது.

இவ்வாறு மன்னார் மாவட்ட தமிழ் மக்கள் ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பான அந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்தியாவின் பிரிக்கமுடியாத அங்கமான தமிழ் நாட்டு மக்களின் எதிர்ப்பைப் புறந்தள்ளி இந்த போரில் இந்தியாவின் செயற்பாடு பற்றி தமிழராகிய எமக்கு கவலை தரும் விடயங்கள் நிறையவே உள்ளன.

போர் முடிவில் இந்தத் தமிழர்களின் ஆதங்கங்களையும் உணர்வுகளையும், அத்துடன் தமிழக மக்களின் ஆத்திர உணர்வுடன் கூடிய பகைமை உணர்வுகளையும் இந்திய அரசு உணர்ந்து கொண்டதால், இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு மாற்று வழியாக இழப்பீடு செய்யும் வகையில் சில நிவாரணங்களை ஆலோசித்தது.

கொதித்துப் போய் இருந்த தமிழ் நாட்டு மக்களையும் துன்பத்துக்குள்ளான இலங்கைத் தமிழர்களையும் சிறிது ஆசுவாசப்படுத்தவே இத் திட்டங்களை அறிவித்தது என்பதை நாம் அறிவோம்.

ஆகையால் இவ்வுதவிகளைப் போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்காகவே இந்தியா அறிவித்தது என்றும் இந்தியாவின் நோக்கம் பாதிக்கப்பட்ட மக்களைத் தவிர வேறு எந்த தரப்பையும் உள்வாங்கும் நோக்கம் கொண்டதல்ல என்பதையும் நாம் வற்புறுத்தி கூற வேண்டிய தேவையில்லை.

ஆகையால் இந்த வீட்டுத் திட்டத்தை பெற உரிமை பெற்றவர்கள் போரால் பாதிக்கப்பட்ட தமிழர்கள் மட்டுமே என்பது உண்மை. ஏனெனில் இந்த இறுதிப் போரால் தமிழர்களைத் தவிர வேறு எந்தத் தரப்பையும் சேர்ந்த ஒருவராவது பாதிக்கப்படவில்லை.

இந்த இந்திய உதவிகள் போர் வலயமான வன்னிப் பிரதேசத்தில் வீடுகளையும், தொழில் துறைகளையும், பல்லாயிரக் கணக்கில் பெறுமதி மிக்க உயிர்களையும் உக்கிரமானதும் இரக்கமற்றதுமான எறிகணைத் தாக்குதல்களாலும் விமான குண்டு வீச்சுகளாலும் இழந்த தமிழ் மக்களுக்கே உரியது.

இந்த வகையில் மன்னார் தீவிலுள்ள எந்த ஒரு நபரும் இந்த உதவிகளைப் பெற அருகதையற்றவர்.

ஏனெனில் 1990ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் மன்னார் படைத்தரப்பால் புலிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட பின் எந்தவிதமான எறிகணைத் தாக்குதலோ விமானத்தாக்குதலோ மன்னாரில் இடம்பெறவில்லை.

ஆயினும் துரதிர்ஷ்டவசமாக மன்னார் மாவட்டத்திலுள்ள ஐந்து பிரதேச செயலர் பிரிவுகளிலும், தயாரிக்கப்பட்ட பயனாளிகள் விவரப் பட்டியல்களில் காணப்படும் மிக அதிகமான பெயர்கள் இறுதி போர்காலத்தின்போது போர் வலயத்தில் வசிக்காதவர்களைக் கொண்டதாக காணப்படுகின்றன.

உண்மையிலேயே இந்த போரால் பாதிக்கப்பட்டது வன்னியில் மன்னார், வவுனியா, யாழ்ப்பாண மாவட்டங்களின் சில பகுதிகளும் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களின் முழுமையான பகுதிகளுமாகும். பாதிக்கப்பட்ட அனைவரும் தமிழர்களே.

மன்னார் பிரதேச செயலர் பிரிவில் எள்ளுப்பிட்டி, நாகதாழ்வு, பெரிய நாவற்குளம், சிறுநாவற்குளம், சிறுநீலாசேனை, பெரியநீலாசேனை, முள்ளிப்பள்ளம், திருக்கேதீஸ்வரம், ஆகிய கிராமங்கள் 1990இல் உயர் பாதுகாப்பு வலயமாகவும் மக்கள் நடமாட முடியாத பிரதேசமாகவும் பிரகடனப் படுத்தப்பட்டன. அத்துடன் இந்தக் கிராமங்களில் வாழ்ந்த மக்கள் படையினரால் பலவந்தமாக வெளியேற்றப் பட்டனர். இங்கிருந்த கட்டடங்கள் யாவும் புல்டோசர் கொண்டு அழிக்கப்பட்டன.

இப்படி 300 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வெளியேற்றப்பட்டன. 2010இல் மீள்குடியமர அனுமதிக்கப் பட்டவர்களுக்கு வீட்டுத் திட்டங்கள் வழங்கப்படும் என்ற உறுதியும் வழங்கப் பட்டது. ஆயினும் மொத்தமாக சுமார் 138 குடும்பங்களுக்கே வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை மொத்தமாக மன்னார் பிரதேச செயலர் பிரிவுக்கு வழங்கப்பட்ட 2999 வீடுகளில் 2635 வீடுகள் எருக்கலம்பிட்டி என்ற தனியொரு முஸ்லிம் கிராமத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. இக்கிராமம் எவ்விதத்திலும் இறுதிப் போரில் பாதிக்கப்படவில்லை.

இதுபோன்ற ஏராளமான நியாயமற்ற பயனாளிகள் தெரிவு ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளிலும் நடைபெற்றுள்ளன. அவை யாவும் குறிப்பிட்ட இந்த அமைச்சரின் அரசியல் செல்வாக்கின் மூலம் தெரிவு செய்யப் பட்டவையாகும்.

இதேபோல மீன்பிடி உபகரண உதவிகளை எடுத்துக்கொண்டால் மன்னாருக்கு ஒதுக்கப்பட்ட 175 படகுத் தொகுதியில் 135 படகுத் தொகுதிகள் முஸ்லிம்களுக்கும் மீதி 40 படகுத் தொகுதிகள் மட்டுமே தமிழருக்கும் வழங்கப்பட்டுள்ளன. உதவிகள் வழங்கப்பட்ட முஸ்லிம்களில் ஏராளமானோர் மீனவர்கள் அல்லர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

போர் பாதிப்பால் அவலத்துக்கு ஆளாகிய எங்களுக்கு வழங்கப்படும் நிவாரணங்கள் எந்தவித இடைநிலை ஊடுருவல்களும் இன்றி எமக்குக் கிடைக்க ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம். - என்றுள்ளது.

நேற்று முன்தினம் இடம் பெற்ற பட்டினிப் போராட்டத்தின் பின்னர் மன்னார் அரச அதிபர் ஹரிச்சந்திரவிடம் ஜனாதிபதிக்கான மனு வழங்கப்பட்டது. (ம-12)

## துணுக்காய் மாணவர்களுக்கு பரீட்சைக்கான பயிற்சி நெறிகள்



துணுக்காய்,டிசெ.6

துணுக்காய் கல்வி வலயத்துக்கு உட்பட்ட ஐந்து பாடசாலை மாணவர்களை ஜி.சீ.ஈ.சாதரணதரப் பரீட்சைக்குத் தயார்ப்படுத்தும் பயிற்சி நெறிகள் இடம் பெற்றுள்ளன.

வவுனியா பல்கலைக் கழக வளாக மாணவர்களினால் விஞ்ஞானம், கணக்கியல் ஆகிய பாடங்களுக்கான பயிற்சி நெறிகள் கடந்த 24,25 ஆகிய இரண்டு தினங்கள் நடத்தப்பட்டன. மல்லாவி மத்திய கல்லூரி அதிபர் தலைமையில் பாடசாலை வளாகத்தில் இந்தப் பயிற்சி நெறிகள் இடம்பெற்றன. வவுனியா பல்கலைக் கழக வளாகத்தைச் சேர்ந்த ஏழு பேர் கொண்ட குழுவினரால் இந்தப் பயிற்சி நெறிகள் நடத்தப்பட்டன. பின் தங்கிய பகுதிகளான பாண்டியன் குளம், பாலிநகர் பாடசாலைகளுடன். ஒட்டுசுட்டான், மாங்குளம், புளியங்குளம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள பாடசாலைகளிலும் இந்தப் பயிற்சி நெறிகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(க-415)

## பிரியாவிடை

கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் கடந்த இருபது வருடங்களாகக் கற்பித்தல் சேவையை மேற்கொண்டு மாற்றலாகிச் செல்லும் ஆசிரியையான செல்வி சிவசுப்பிரமணியம் அமிர்தாஞ்சனிக்கான பிரியாவிடை நிகழ்வு இன்று முற்பகல் 10 மணிக்கு இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக விழா ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

(த-6)

## ஆக்கிரமிக்கப்படும் கழிவு வாய்க்கால்கள்

அக்கராயன்,டிசெ.6


குளங்களின் கழிவு வாய்க்கால்கள் ஆக்கிரமிக்கப்படுவதால் எதிர்காலத்தில் பல்வேறு பாதிப்புக்கள் ஏற்படலாமென அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள குளங்களுக்குரிய கழிவு வாய்க்கால்களைக் காணிகளாக மாற்றுதல், குடியிருப்புக்களை அமைத்தல் ஆகிய செயற்பாடுகள் தொடர்வதால் எதிர்காலத்தில் விவசாய முயற்சிகள் பாதிக்கப்படுவதோடு குளக் கட்டுமானங்களின் போது இடையூறுகள் உருவாகுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட செயலகத்தில் இடம்பெறும் கூட்டங்களில் இது தொடர்பாக ஏற்கனவே சுட்டிக்காட்டப் பட்டபோதிலும் பயன் எதுவும் ஏற்படவில்லையென இங்குள்ள அதிகாரிகளும் மக்களும் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் பிரதேச செயலகங்களைச் சேர்ந்த காணி அதிகாரிகள் மேற்படி காணிகள் தொடர்பான விவரங்களைத் திரட்டி வருகின்றதாகவும் தெரிய வருகின்றது.

(க-18)



கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் திணைக்களத்துக்கான புதிய கட்டடம் அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. (க-6)

## சிறுவர் நன்னடத்தை பிரிவால் அக்கராயன் பிரதேசத்தில் குழு

அக்கராயன்,டிசெ.6

கிளிநொச்சி மாவட்ட சிறுவர் பாதுகாப்பு நன்னடத்தைப் பிரிவினரால் அக்கராயனில் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

கிராம அலுவலர் கு.துஷ்யந்தன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் கிராமங்களுக்கு சிறுவர் பாதுகாப்பு மற்றும் உரிமைகள் தொடர்பாகவும் விளக்கமளிக்கப் பட்டது.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் எஸ்.முத்துக்குமார் கலந்துகொண்டார்.

மேலும் அக்கராயனில் அமைக்கப்பட்ட குழுவின் தலைவராகக் கிராம அலுவலர் கு.துஷயந்தன் தெரிவு செய்யப்பட்டார்.

செயலாளராக ரவிச்சந்திரா எப்சிபாவும், பொருளாளராக இளையதம்பி சபாரஞ்சிதமும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் மயூரதன் சிவப்பிரியா, பாக்கியராஜ் மாரியம்மா, முத்துலிங்கம் யோகேஸ்வரி, தயாபரன் பாரதி, செந்தூரன் சோபனா, சண்முகம் சந்திரலிங்கம் ஆகியோர் நிர்வாக சபை உறுப்பினர்களாகவும், கந்தசாமி சிவகுமாரன், இரத்தினம் புஸ்பராணி ஆகியோர் முறையே உபதலைவர் மற்றும் உப செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (க-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கு விசாரணை செய்வதற்கு நீதியரசருக்கு சந்தர்ப்பம் தேவை

## ஐ.தே.கவின் நிலைப்பாடு இதுதான்

கொழும்பு,டிசெ. 6

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மீதான குற்றப்பிரேரணை தொடர்பாக ஐ.தே.கட்சியின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் வகையில் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் அறிக்கை ஒன்றை தாக்கல் செய்தனர்.

விசாரணையை எவ்வாறு தொடர்ந்து நடத்துவது என்பது குறித்துத் தெரிவுக்குழு ஒரு தீர்மானத்துக்கு வர வேண்டும். பிரதம நீதியரசர் அல்லது அவர் சார்பிலான சட்டத்தரணிகள் சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்யவும், ஆவணங்கள் தொடர்பாகக் கேள்வி யெழுப்பவும் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என்று இந்த அறிக்கையில் அவர்கள் வற்புறுத்தியுள்ளனர்.

ஐ.தே.கவின் நிலைப்பாடு தொடர்பாக ஜோன் அமரதுங்க, லக்ஷ்மன் கிரியெல்ல ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த அறிக்கையைச் சபையில் தாக்கல் செய்தனர்.

அவர்கள் தெரிவித்துள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:-

பிரதம நீதியரசர் கடிதம் மூலமாகவும் தமது சட்டத்தரணிகள் மூலமாகவும் தெரிவுக் குழுவுக்கு பதில்களை வழங்கியுள்ளார். மேலதிகமாகக் குற்றச்சாட்டுகளுக்கு எழுத்து மூலமான சமர்ப்பணங்களும் வழங்கப்பட்டுள்ளன. அவைகளை பின்வருமாறு சாராம்சப்படுத்தலாம்.

1.தெரிவுக்குழுவுக்கு நியாயாதிக்கம் இல்லாமை.

2.தெரிவுக் குழு நியாயாதிக்க அதிகாரங்களைச் செயற்படுத்துவதற்கான உரிமை மீதான கேள்விகள்.

3.குற்றச்சாட்டுக்களுக்கான மறுப்புகள்.

4.ஆவணங்களுக்கான கோரிக்கை

இந்த விடயங்கள் தொடர்பாகத் தெரிவுக்குழு விசாரிப்பதற்கு நியாயாதிக்கம் இருக்கிறது. ஆனால் அதற்கு அடுத்து எடுக்கப்பட வேண்டிய செயற்பாடு குறித்தே கேள்வி எழுகின்றது.

மேற்கொண்டும் குழு செயல்படுவதற்கு முன் குற்றச்சாட்டுகள் எவ்வாறு நிரூபிக்கப்பட வேண்டும் என்பதற்கான நடைமுறைகளை தீர்மானிக்க வேண்டும். நெவில் சமரக்கோன் விவகாரத்தில் ஒரு குற்றச்சாட்டு மட்டுமே இருந்தது. மற்றும் உண்மைகள் ஒப்புக் கொள்ளப்பட்டிருந்தன. சட்டப் பிரச்சினை மட்டுமே தீர்மானிக்கப்பட வேண்டியிருந்தது. முதல் குழுவின் விசாரணையிலிருந்து இரண்டாவது குழு விசாரணை முடியும் வரை 6 மாதங்கள் பிடித்தன.

எனவே இப்பொழுது எவ்வாறு செயற்பாட்டைத் தொடர்வதென்பதை குழு தீர்மானிக்கவேண்டும். சாட்சிகளையும் ஆவணங்களையும் குறுக்கு விசாரணை செய்வதற்கு பிரதம நீதியரசர் அல்லது அவரது சட்டத்தரணிகளுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். அந்த நிலையில் தான் குற்றச்சாட்டுக்கள் தவறானவை என்று அவர் நிரூபிக்க தேவைப்படுமா என்பதைத் தெரிவுக்குழு தீர்மானிக்கலாம். மேலும் நிரூபிக்கும் ஆதாரத்தின் தரம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதும் முக்கியம்.

காலஞ்சென்ற முன்னாள் சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்க அளித்த முக்கிய தீர்ப்பில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தமை கவனத்துக்குரியது.

உயர் நீதிமன்றங்களின் நீதிபதிகள் மீது குற்றப்பிரேரணைகள் கொண்டு வருவது தொடர்பாக தற்பொழுது நடைமுறையில் இருக்கும் நிலையியல் விதிகளுக்கு பதிலாக புதிய விதிகள் கொண்டுவரப்பட வேண்டுமா அல்லது இவை மாற்றி அமைக்கப்பட வேண்டுமா என்பது குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்பது அவர்கருத்தாகும் - என்று ஐ.தே.க. அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ப)

## கண்ணீர் அஞ்சலி



**இலங்கையின் முதலாவது அரசாங்க மருந்தாளர்**

***சின்னத்துரை கந்தசாமி***

(Retired Supra grade Pharmacist)

அவர்கள் 04.12.2012 செவ்வாய்க்கிழமை அன்று அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மருந்தாளர் போதனா வைத்தியசாலை
யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்கள்

### *சூசைப்பிள்ளை மறிஸ்ரலா மாறி (கவர்ணா)*

*(முன்னாள் சென்பீற்றர் பாடசாலை ஆசிரியை -Colombo)*



கரம்பன் தெற்கைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சூசைப்பிள்ளை மறிஸ்ரலா மாறி கடந்த (03.12.2012) திங்கட்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சூசைப்பிள்ளை மற்றும் மலர் (லண்டன்) தம்பதியரின் அன்பு மகளும், பாஸ்கரனின் (கனடா) அன்பு மனைவியும், அன்ரன், றஞ்சன் (லண்டன்) ஜோர்ச் ஜெயநாதன் (ராசா), செல்வன் (லண்டன்), சுகந்தி (லண்டன்), நிஞ்சன் (கனடா) ஆகியோரின் சகோதரியும், எமிலி, நந்தினி, ஜெசி (லண்டன்), றோகினி, ஜீவா, மினி (கனடா) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், பொலிற்றா, ஜெனிஸ்ரன், றொபின், கொலின், ஜெறின், சோண், கிசோர் ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் (08.12.2012) அன்று கனடாவில் நல்லடக்கம் செய்யப்படும். அன்னாரின் இரங்கல் திருப்பலி நாளை (07.12.2012) மு.ப 6.00 மணிக்கு யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
119, சப்பல் வீதி, யாழ்ப்பாணம். (26470)(9.) ராசா குடும்பத்தினர்.

### *இராசையா சிவசுப்பிரமணியம்*



மாவிட்டபுரம் தெற்கு, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் வசி ப்பி டமாகவும்கொண்டஇராசையா சிவசுப்பிரமணியம் நேற்று(05.12 .2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரா சையா -சின்னத்தங்கச்சி தம்பதியரின் பாசமிகு மகனும், கமலாம்பிகையின் அன்புக் கணவரும் ,நளினி, தயா ளினி(ஜேர்மனி), சாளினி, கபில்ராஜ் ஆகி யோரின் அன்புத் தந்தையும், நடராசா, உதயகுமார்(ஜேர்மனி), சுகி ர்தராஜ் (கனடா), ஆகியோரின் அன்பு மாமனும், கோகுலபிரசாத், தேனுஷா ஆகியோரின் பாசமிகு தாத்தாவும், நாகேஸ்வரி, கன காம் பிகை ஆகியோரின் அன்புச் சகோதரரும், நடராசா, செல் வராசா ஆகி யோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று(06.12.2012) வியாழக்கிழமை பி.ப.1.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கீரிமலை மயானத்துக்கு எடுத் துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாவிட்டபுரம் தெற்கு,
தெல்லிப்பழை.
தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## கல்முனையில் பயிற்சிப்பட்டறை

கல்முனை, டிசெ.06

பாரம்பரிய வைத்தியத் துறைக்கான தேசிய வைத்திய நிறுவனத்தினால் 'ஜோதிடம் மற்றும் மணி மந்திர ஔடத விடயம் தொடர்பான' பயிற்சிப்பட் டறை ஒன்று நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கல்முனை பிரதேசசெயலக மண்டபத்தில் ஆரம்பமானது.

கல்முனை பிரதேசத்தி லுள்ள ஆயுள்வேத வைத்தி யர்கள், பாரம்பரிய வைத் தியர்கள் மற்றும் ஜோதிடர்க ளுக்காக மேற்படி இரண்டு நாள் பயிற்சிப்பட்டறை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

கல்முனைபிரதேசசெயலாளர்எம்.எம்.நௌபல் தலைமையிலும், நிர்வாக உத்தியோகத்தர் அபுல் ஹஸனின் நெறிப்படுத் தலிலும் இடம்பெறும். (வ)

## வாசிப்பு மாத விழிப்புணர்வு ஊர்வலம்

மட்டக்களப்பு, டிசெ.06

மட்டக்களப்பு மாநகர சபையால் வாசிப்பு தொடர் பான விழிப்புணர்வு ஊர்வல மொன்று நேற்று புதன்கி ழமை காலை மட்டக் களப்பு நகரில் இடம் பெற்றது. தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி நடத்தப்பட்ட இந்த விழிப் புணர்வு ஊர்வ லத்தில் மட்டக்களப்பு மாநகர சபையின் மேயர் திருமதி சிவகீர்த்தா பிரபாகரன் மற்றும் பிரதி மேயர் ஜோர்ஜ் பிள்ளை, மாநகர ஆணையாளர் கே.சிவநாதன், உட்பட மாநகர சபை உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்கள் பாட சாலை மாணவர்கள் கலந்து கொண்டனர். (வ)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை முதல்வர் **திரு.இராமலிங்கக்குருக்கள் பசுபதீஸ்வரன்** அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி.காமாட்சியம்மா இராமலிங்கக்குருக்கள்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெருவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்திக்கின்றோம்

(26468)

ஆசிரியர்கள்,மாணவர்கள்
யா/நீர்வேலி சி.சி.த.க பாடசாலை

தாவடியில் ஓர் புது உதயம்!

**நியுட்டன் அக்கடமி**

**பிள்ளையார் கோவில் அருகாமை, தாவடி.**

தரம் 6முதல்O/L வரை ஆரம்பம்
10.12.2012திங்கட்கிழமை

**யாழ். மாணவர்கள் கடந்த காலங்களில் சாதனை படைக்க வழிகாட்டிய சிரேஷ்ட,அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள்**

| | | | |
|---|---|---|---|
| கணிதம் : | K. வேலாயுதம், M,K.மேனன், K.றெமி | விஞ்ஞானம் : | இரா.செல்வவடிவேல், N.சதிஸ், N.அபராஜிதீன் |
| வரலாறு : | R.S. சந்திரன், N. நந்தீஸ் | தமிழ் : | P.தமிழ்மாறன், P.கோகுலன் |
| சமயம் : | N .குகதாஸ் | ஆங்கிலம் : | P. மதன் |
| சுகாதாரம் : | R.சந்திரராஜா | புவியியல் : குடியியல் : | N.நேரு |

## ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## 31ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும்



*அமரர்*

***நடேசு அருட்பிரகாசம் (பத்தர்)***

அன்னையின் மடியில் 05.01.1930
ஆண்டவன் அடியில் 04.11.2012

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

ஐயா! எங்களின் இதயத் தெய்வமே!
உங்களின் உயர்ந்த இலட்சியங்களை எங்களது
நெஞ்சினிலே சுமது நீங்கள் காட்டிய சத்திய பாதையிலே
நாங்கள் உறுதியுன் செல்லுவோம்!
புனிதரான உங்களின்- இந்
நினைவு நாளில் -நாங்கள் கண்ணீர் சொரிந்து
வணங்குகின்றோம்.

கடந்த (04.11.2012) அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்திகேட்டு நேரிலும் தொலைபேசி மூலமும் ஆறுதல் கூறி எமது துயரில் பங்கேற்ற உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இல-150, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம். (26472)(9)
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்



***துரை ஆரோக்கியதாசன்***

(B.A., Dip in Ed.)

(சொலமன் பிரான்சிஸ் சென். றோச் - பலாலி ஆசிரியர் கலாசலை முன்னாள் பிரதி அதிபர், S.P.C, O.B.A, துணைத் தலைவர், யாழ். சுண்டுக்குழி, புனித திருமுழுக்கு யோவான் ஆலய அருட்பணிச்சபை துணைத் தலைவர்)

இல.60, கோயில் வீதி, சுண்டுக்குழி யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சொலமன் பிரான்சிஸ் சென்றோச் நேற்று முன்தினம் (04.12.2012) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கலைஞர் சொலமன் பிரான்சிஸ் துரையப்பா - மேரி றோசலின் தம்பதியரின் அன்பு மகனும், இளைப்பாறிய முன்னாள் புகையிரத நிலைய அதிபர் காலஞ்சென்றவர்களான சிமியாம்பிள்ளை - ஞானம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற றஞ்சிதமலரின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பிரான்சிஸ் மைக்கல், எலிசபேத் - அன்ரனிப்பிள்ளை மற்றும் திரேசம்மா எட்வேட், திருமதி பிலோமினா அருள்நாயகம், திருமதி பார்பறாசீவரெட்ணம், அருட்சகோதரி மேரி மெக்டலின் (நல்லாயன் சபை) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், திருமதி றோஸ் திசவீரசிங்கம், காலஞ்சென்றவர்களான ருக்குமணி, ஜெயரட்ணம் மற்றும் ஜெகநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.60, கோயில் வீதி,
சுண்டுக்குழி, யாழ்ப்பாணம்.
தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# இலங்கைக்கு வழிகாட்டும் போக்கிலா இஸ்ரேல்...?

எதிரிக்குச் சகுனப்பிழை உண்டாக்கி, அவருக்குக் கெடுதல் செய்ய வேண்டும்; அவர் மீது தாம் குதிரை விட வேண்டும் என்று எப்போதும் செயற்படுபவர்கள், அந்த மனநிலை கொண்டவர்கள், பெரும் தேசங்கள் முதற்கொண்டு குக்கிராமம் ஈறாக வாழ்கிறார்கள். அத்தகையோர் யார் சொல்லியும் தமது மன இயல்பை மாற்றிக் கொள்ளமாட்டார்கள்.

தனி மனிதர்களுக்கு மட்டுமே பொல்லாத இந்தக் குணவியல்பு உண்டு என்பதல்ல. மற்றைய நாடுகளை அல்லது நாட்டைத் தமது ஆதிபத்தியத்தின் கீழ், கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்க வேண்டும், அங்கு வாழும் மக்களை அடக்கி ஒடுக்கி ஆள வேண்டும் என்ற பேராசை கொண்ட அரசியல் தலைவர்களும் இப்போதும் உள்ளனர்.

மன்னர் ஆட்சிகள் நடந்தேறிய காலங்களில் மட்டுமன்றி மக்கள் ஆட்சி - ஜனநாயகம் - அனைத்துலக மட்டத்தில் நிலவும் தற்காலத்தில் கூட -

சின்னஞ்சிறிய சுண்டங்காய் நாடுகளின் தலைவர்கள் தொடக்கம் பென்னம்பெரிய வல்லரசு நாடுகளின் தலைவர்கள் வரை -

இந்தப் பொல்லாத ஆதிக்க வெறி நோய்க்கு ஆட்பட்டது கடந்த காலச் சரித்திரம் மட்டுமல்ல.

ஆகப்பிந்தி, மற்றவர் நிலத்தைப் பிடித்து, மேலோங்கித் தனத்தைச் செயலில் காட்டுவதற்கு இஸ்ரேலியத் தலைவர் நெத்தன் யாகு களமிறங்கியுள்ளார்!

பலஸ்தீன மக்களின் பிரச்சினைக்குத் தீர்வாக, பலஸ்தீனத்தில், யூத, பலஸ்தீன இருநாடுகள் திட்டத்துக்கு ஐக்கிய நாடுகள் பொதுச் சபை பச்சைக்கொடி காட்டி அறுபத்தேழு ஆண்டுகள் பறந்தோடி விட்டன. ஆயினும், பலஸ்தீனத்தின் மீதான பிராந்திய விஸ்தரிப்பு, ஆக்கிரமிப்பு எத்தனம் என்பன மெலிந்துவிடவில்லை. வல்லரசான அமெரிக்காவின் ஆதரவும், ஆசீர்வாதமும் மறைமுகமாகக் கிட்டியதால் இரு நாடுகள் திட்டம் கைகூடவில்லை.

ஆனால், ஐ.நா.பொதுச்சபையில் பலஸ்தீனத்துக்கு உறுப்புரிமை அல்லாத அவதானி அந்தஸ்து வழங்கப்பட்டு ஒரு வாரம் கூட ஆகாத நிலையில், மத்திய கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான இரு நாடுகள் திட்டத்துக்கு ஆப்பு வைக்கும் முயற்சியில் இஸ்ரேல் துரிதமாக இறங்கி இருக்கிறது.

கிழக்கு ஜெரூஸலத்தையும் மேற்குக் கரையையும் யூதக்குடியிருப்புகள் மூலம் தரைமார்க்கமாகத் துண்டிக்கும் நடவடிக்கையில் இஸ்ரேல் இறங்கி இருப்பது பலஸ்தீனப் பிரச்சினைக்கான தீர்வைப் பல ஆண்டுகள் பின்தள்ளிவிட்டுள்ளது. அரசியல் விமர்சகர்கள் இதனைக் கண்டித்துக் கருத்து வெளியிட்டுள்ளனர்.

சுமார் 60 ஆண்டுகள் காலமாகத் தீர்க்கப்படாதிருக்கும் மத்திய கிழக்குப் பிரச்சினைக்கு யூத நாடு - அரபு நாடு என்ற இருநாடுகள்திட்டம் மூலம் தீர்வு காண்பதற்கான வாய்ப்பு அண்மைய ஐ.நா. பொதுச்சபையின் தீர்மானத்துக்குப் பின்பு பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது. யூதர்களுக்குத் தற்பொழுது உள்ள இஸ்ரேலும், அரபுக்களுக்கு காஸாவும் மேற்குக் கரையும் உள்ளடங்கிய பலஸ்தீனமும் இயங்குவதே இருநாடுகள் திட்டம் ஆகும்.

1967 மத்திய கிழக்கு யுத்தத்தின்போது ஜோர்தானிடமிருந்து மேற்குக் கரையையும் எகிப்திடமிருந்து காஸாவையும் இஸ்ரேல் கைப்பற்றியது. ஒஸ்லோ ஒப்பந்தம் மூலமும் மற்றும் சில ஒப்பந்தங்கள் மூலமும் கைப்பற்றிய அந்த இரு பகுதிகளையும் உள்ளடக்கி பலஸ்தீன அரசு ஒன்றை உருவாக்க இஸ்ரேல் இணக்கம் தெரிவித்திருந்தது. ஆனால் தற்போது மேற்குக் கரையில் சட்டவிரோதமாக யூதக்குடியிருப்புகளை நிறுவி சுதந்திர பலஸ்தீன அரசு உருவாகும் முயற்சிக்கு முட்டுக்கட்டை போடுகிறது.

கிழக்கு ஜெரூஸலத்துக்கு அருகே உ1 என்ற பகுதியில் மூன்று லட்சம் யூதக் குடியிருப்புகளை நிறுவி, பலஸ்தீனத்தின் எதிர்காலத் தலைநகராகக் கருதப்படும் கிழக்கு ஜெரூஸலத்துக்கும் மேற்குக் கரைக்கும் இடையிலான தரைமார்க்க இணைப்பைத் துண்டித்துவிட்டால், மேற்குக்கரையின் பூகோள அமைப்பைச் சிதைத்து, பலஸ்தீன அரசு தொடர்பான எதிர்கால சமாதானப் பேச்சுகளுக்கு முட்டுக்கட்டை போட்டுவிடலாம் என்று இஸ்ரேல் நயவஞ்சகத் திட்டம் போட்டு அதனை ஒப்பேற்றுகிறது.

மேற்குக் கரையில் இஸ்ரேல் புதிதாக அமைக்க உள்ள யூதக் குடியிருப்புகள், மத்திய கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முன்வைக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டுவரும் இருநாடுகள் திட்டத்துக்குப் பெரும் பின்னடைவாகும். போரின்போது தான் கைப்பற்றிய பிரதேசங்களில் இஸ்ரேல் யூதக் குடியிருப்புகளை நிறுவுவது சமாதானத்துக்கு ஊறு விளைவிக்கும் என்று நீண்ட காலமாகச் சுட்டிக்காட்டப்பட்டு வந்தது.

ஆனால் இஸ்ரேலில் அதிகாரத்துக்கு வந்த அனைத்து அரசுகளும் யூதக் குடியிருப்புகள் குறித்து கூடுதல் கவனம் செலுத்தி வந்தன. தற்பொழுது அதிகாரத்தில் உள்ள நெத்தன்யாகு அரசு, பலஸ்தீனப் பிரச்சினை தொடர்பாகக் கடும் போக்கைக் கடைப்பிடித்து வருகிறது. அதனால் எதிர்காலத்தில் இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையிலான பேச்சுகள் வெற்றி அளிக்கக்கூடிய வாய்ப்புகள் மிகவும் அரிதாகவே உள்ளன.

பலஸ்தீனத்துக்கு ஒரு பிறப்புச்சான்றிதழ் என்று வர்ணிக்கப்பட்ட ஐ.நா. தீர்மானத்துக்குப் பதிலடியாகவே கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த, மக்களின் உணர்வுகளைத் தூண்டக்கூடிய கிழக்கு ஜெரூஸலத்துக்கு அருகே மேற்குக் கரையைத் தரைமார்க்கமாகத் துண்டிக்கும் விதத்தில் யூதக்குடியிருப்புகளை நிறுவும் திட்டத்தை நெத்தன்யாகு அறிவித்துள்ளார்.

இஸ்ரேலின் இந்தக் கடுமையான நிலைப்பாடு, ஐ.நா. தீர்மானங்களுக்கும் கடந்தகால ஒப்பந்தங்களுக்கும் சவால்விடும் விதத்தில் அமைந்துள்ளது. மேற்குக் கரையில் யூதக்குடியிருப்புகள் உள்ளவரை மத்திய கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது. ஒபாமா நிர்வாகம் கடுமையான அழுத்தங்களைப் பிரயோகிப்பதன் மூலம் மட்டுமே நெத்தன்யாகு அரசின் கடும் போக்கைத் தளர்த்தி சமாதானப் பேச்சுகள் மூலம் மத்திய கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அமெரிக்க யூதர்களின் ஆதரவுத்தளம் இல்லாமல் வென்றவர் பராக் ஒபாமா. ஆகவே இஸ்ரேல் தொடர்பாக துணிச்சலான நடவடிக்கைகளை எடுக்கும் கடப்பாடு அவருக்கு உண்டு. மத்திய கிழக்குச் சமாதானம், ஒபாமாவின் கைகளிலேயே தங்கி உள்ளது. ஒபாமா இஸ்ரேல் மீது அழுத்தங்களைப் பிரயோகித்து யூதக்குடியிருப்புகளை நிறுவும் திட்டத்தை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும்.

இஸ்ரேலின் தற்போதைய முனைப்பு, இனவாதப் போக்குடன் செயற்படும் உலகின் எந்தவொரு நாடும், தமது அத்தகைய போக்கை இலகுவில் கைவிடத் தயாராயில்லை என்பதைக் கோடிகாட்டி நிற்கிறது.

இத்தகைய களநிலை, ஐக்கிய நாடுகள் சபையென்ன, உலகின் எந்தவொரு வல்லரசு நாடும் கூட, இலங்கையின் உள்ளக விவகாரங்களில் மூக்கை நுழைக்க அனுமதிக்கமாட்டோம் என்ற இறுமாப்பு நிலைக்கு இலங்கை அரசாங்கத்தை மேலும் உசுப்பேற்றும் வாய்ப்பு அதிகமுண்டு. தமிழ் மக்களைச் சகல விதங்களிலும் ஓரங்கட்டி, புறம்தள்ளித் தனது பேரினவாத நிகழ்ச்சி நிரலை அச்சொட்டாக நிறைவேற்றும் முனைப்பில் செயற்பட்டு வரும் இன்றைய அரசிடமிருந்து தமிழ் மக்களுக்கு நியாயமான உரிமைகளைப் பெற்றுக்கொள்ள இயலுமா என்ற பென்னம் பெரிய கேள்வி மிக உயர்ந்து நிற்கிறது; அந்தோ...!

# பல்கலை மாணவர் விடுவிக்கப்பட்டு கல்விச் சூழல் சீராக்கப்பட வேண்டும்

## ஹென்றி மகேந்திரன் வலியுறுத்து

அம்பாறை, டிசெ. 6

பொலிஸாரால் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் சகலரையும் விடுதலை செய்து பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகள் சுமுகமாக நடைபெறுவதற்கு உடன் ஆவன செய்யப்பட வேண்டும்.

இவ்வாறு தமிழீழ விடுதலை இயக்க செயலாளர் நாயகம் ஹென்றி மகேந்திரன் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்.பல்கலைக்கழக வளாகத்துள் அத்து மீறிப் பிரவேசித்து இராணுவத்தினரும், பொலிஸாரும் நடத்தியுள்ள காட்டுதர்பார் மிகக் கண்டனத்துக்குரியதும், விசனிக்கத்தக்கதுமாகும்.

பல்கலைக்கழக மாணவர்களதும் பொதுமக்களதும் ஜனநாயக செயற்பாடுகளில் இராணுவத்தினரும் பொலிஸாரும் வடக்கில் தலையிட்டு வருவது ஜனநாயகவிரோதசெயற்பாடாகும்.

இத்தகைய ஜனநாயக விரோத, வேண்டத்தகாத செயற்பாடுகள், நிகழ்வுகள் காரணமாகத்தான் கடந்த காலங்களில் போராட்டங்கள் வெடித்தன.

அத்தகைய நிலைப்பாடு நாட்டில், குறிப்பாக வடக்கில் இனியொரு போதும் ஏற்படக்கூடாது.

இந்த வகையில் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் பலர் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளமை ஏற்புடையதல்ல.

எனவே சுமுகநிலை தோற்றுவிக்கப்படவும், யாழ்.பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகள் சுமுகமாக நடைபெறவும், தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள பல்கலைக்கழக மாணவர்கள் உடன் விடுதலை செய்யப்படவேண்டும்.

யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் வைத்து உதயன் ஆசிரியர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் வாகனம் மீதும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் ஈனத்தனமானவை. இந்தச் சம்பவங்களில் சம்பந்தப்பட்டோர் எத்தரப்பினராயினும் அவர்கள் மீது நீதி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

வடக்கை களேபரமாக்கி அதில் குளிர்காய நினைப்போரும், அதற்குத் துணை போகும் படைத்தரப்பினரும், இனியாவது மாணவர்களதும் மக்களதும் ஜனநாயக செயற்பாடுகளுக்கு முட்டுக் கட்டை போடும், தலையிடும் செயற்பாடுகளை நிறுத்த வேண்டும்- எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-30)

# தொழில்நுட்ப ஆராய்ச்சி ஊடான நல்லிணக்கம்

## ஆரம்ப முயற்சி நிகழ்வு திறந்த பல்கலையின் யாழ்.நிலையத்தில்

யாழ்ப்பாணம்,டிசெ.6

தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சு 'தொழில்நுட்பவியல் ஆராய்ச்சியின் ஊடான நல்லிணக்கம்' எனும் தொனிப் பொருளிலான ஆரம்ப நிகழ்வை இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் நடத்தவுள்ளது.

எதிர்வரும் 10 ஆம், 11 ஆம் திகதிகளில் தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சர் பவித்ரா வன்னி ஆராய்ச்சியின் வழிகாட்டலில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது. இந்த முயற்சி இலங்கையை அறிவு சார்ந்த ஒரு பொருளாதாரமாக மாற்றுதல் மற்றும் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பவியல் துறைகளின் கூட்டிணைவின் ஊடாக தேச இணக்கப்பாட்டுக்குப் பங்களிப்பு செய்தலால் பொறுப்பை வெளிப்படுத்தல் என்பவற்றை மேம்படுத்துவதாக அமைகிறது.

அரச ஆராய்ச்சி நிறுவனங்களுடன் பயனுறுதிமிகு பங்களிப்புகளைக் கட்டியெழுப்புவது தொடர்பில் முகம் கொடுக்கப்படும் பிரச்சினைகள், எவ்வாறு புதிய ஆராய்ச்சி-கைத்தொழிற்துறை தொடர்பிணைப்புகளை தொடங்குதல், அத்துடன் தற்பொழுது நடப்பிலிருக்கும் தொடர்பிணைப்புகளை மேலும் பயனுறுதிமிக்கதாக்கல் மற்றும் கைத்தொழிற்துறை மற்றும் அரச ஆராய்ச்சி நிறுவனங்களிடையே நெருக்கமானதொரு கூட்டிணைப்பை மேம்படுத்துவதற்கு நம்பிக்கையும் பொறுப்பும் மிகுந்ததொரு சூழலை எவ்வாறு உருவாக்கி அதனை தொடர்ந்து நிலைத்திருக்கச் செய்தல் போன்ற வேறுபட்ட விடயங்கள் தொடர்பில் வடக்கிலுள்ள கைத்தொழிற்துறையின் எண்ணக் கருத்துக்களை பெற்றுக்கொள்ளும் நோக்கில் தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இந்த நிகழ்வில் கண்காட்சி மற்றும் தொழில்நுட்பவியல் மாற்றீடு பயிற்சிப் பட்டறைகளையும் உள்ளடக்கும். அமைச்சின் கீழ் அடங்கும் நிறுவனங்கள் தமது ஆராய்ச்சி உற்பத்திகளைக் கண்காட்சியில் காட்சிப்படுத்தும். தொழில்நுட்ப மாற்றீடு பயிற்சிப் பட்டறைக்குள், கைத்தொழிற்துறை பங்காளருக்கு மாற்றீடு செய்யக்கூடிய தொழில்நுட்பவியல் துறைசார்ந்த பிரதான ஆராய்ச்சித் தேடல்கள், மாற்று சக்திமூலங்களின் பயன்பாடு மற்றும் கைத்தொழிற்துறை உற்பத்திகளின் தரத்தைத் தொடர்ச்சியாக வைத்திருப்பதற்குப் பங்களிப்புச் செய்யும் அதிபுலமைச் சொத்து உரிமைகள் மற்றும் சேவைகள் போன்ற விடயங்கள் தொடர்பிலான அறிமுகப்படுத்துகைகளும் நிறுவனங்களைச் சார்ந்த வள ஆளணியினர் மூலம் நடத்தப்படும்.

இந்த முயற்சியில், நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி.கிளார்க் நிறுவகம், தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம், இலங்கை கட்டளைகள் நிறுவகம், ஒத்திசைவு மதிப்பீட்டுக்கான இலங்கை தராதர அங்கீகாரச் சபை, தேசிய விஞ்ஞான மன்றம், இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு மற்றும் இலங்கை நனோ தொழில்நுட்ப நிறுவகம் ஆகிய நிறுவனங்கள் பங்குகொள்ளும்.

மாணவர்களிடையே விஞ்ஞானத்தை பிரபல்யப்படுத்தும் நோக்கில் இலங்கை கோள்மண்டலம் இரண்டு இரவு வான் அவதானிப்பு கூடாரங்களை 10 ஆம், 11 ஆம் திகதிகளில் ஒழுங்கமைத்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-7)

# ஆசிரியர் இடமாற்ற பட்டியல் வலயங்களுக்கு

2013 ஆம் ஆண்டு இடமாற்றம் செய்யப்படவுள்ள ஆசிரியர்களின் பெயர்ப் பட்டியல் வடமாகாண கல்வி அமைச்சால் அனைத்து கல்வி வலயங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதுவரை காலமும் வன்னிப் பகுதியில் சேவையில் ஈடுபடாத 1964 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பிறந்த ஆசிரியர்களுக்கும் 1970 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பிறந்த ஆசிரியைகளுக்கும் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளன. இடமாற்றப் பட்டியல் மாகாணக் கல்வி அமைச்சினால் அனுப்பப்பட்டுள்ளதை அறிந்த அதிபர்களும் ஆசிரியர்களும் வலயக் கல்வி அலுவலகத்தில் தமது பெயர் உள்ளதா எனப் பார்ப்பதற்கு பிற்பகலில் குவிந்தனர்.

இடமாற்றம் செய்யப்பட்டவர்கள் தமது மேன்முறையீட்டை எதிர்வரும் பத்தாம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு வலயக் கல்வி அலுவலகங்களில் அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சிக் கல்வி வலயத்தில் கடமையாற்றும் 107 ஆசிரியர்களின் பெயர்ப்பட்டியல் வலயக் கல்வி அலுவலக விளம்பரப் பலகையில் காணப்பட்டது. இதேவேளை வன்னிப் பகுதியிலிருந்து 11 வலயங்களுக்கு 279 ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்படவுள்ளதாகவும் இவர்களின் இடத்துக்கு ஒவ்வொரு வலயத்தில் இருந்தும் இடமாற்றம் செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

# ஆண்டு நிறைவும் மலர் வெளியீடும்

தென்மராட்சி, டிசெ. 6

சாவகச்சேரி டச்சு வீதி ஸ்ரீபழநி சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தின் இருபதாவது ஆண்டு நிறைவு விழாவும், மலர் வெளியீடும் எதிர்வரும் ஒன்பதாம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சாவகச்சேரி ஐங்கரன் மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளன.

சங்கத் தலைவர் விவேகானந்தன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் போ. மோகனும் சிறப்பு விருந்தினர்களாகத் தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன், சிவஸ்ரீ தி.கிருஷ்ணமூர்த்திக் குருக்கள் ஆகியோரும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் பிரதேசத்தைச் சேர்ந்த ஐந்து சமூக சேவையாளர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

மருத்துவர் ச.அம்பிகைபாகன், மருத்துவர் சு.சி.அருளானந்தம், சாவகச்சேரி மத்தியஸ்தர் சபை தலைவர் ப.நடராஜா, தென்மராட்சி இலக்கியக் குழுத் தலைவர் கவிஞர் த.நாகேஸ்வரன், சாவகச்சேரி மக்கள் வங்கிக் கிளை முகாமையாளர் க.சண்முகலிங்கம் ஆகியோரே கௌரவிக்கப்படவுள்ளனர்.

சங்கத்தின் 20 ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு மாணவர்களிடையே நடத்தப்பட்ட சதுரங்கப் போட்டியில் வெற்றிபெற்றோர், நகர்ப் பகுதியில் வாழும் ஆதரவற்றோர், உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்றுப் பல்கலைக்கழகம் புகும் மாணவர்கள் ஆகியோருக்குப் பரிசில் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் தென்மராட்சி இலக்கியக் குழுவினரின் ''பாரதிகண்ட புதுமைத் தமிழ்ப் பெண் தோன்றிவிட்டாள்-தோன்றவில்லை'' என்னும் தலைப்பிலான பட்டிமன்றம் ஆசிரியர் வே. உதயகுமார் தலைமையில் நடைபெறும்.

பட்டிமன்றத்தில் ஆசிரியர்களான த.மார்க்கண்டு, வை.நாகநாதன், பா.விக்னேஸ்வரன் ஆகியோர் 'தோன்றிவிட்டாள்' தரப்பிலும், ஆசிரியர்களான த.நாகேஸ்வரன், ஆ.வாசுதேவா, க.நடேஸ்வரன் ஆகியோர் 'தோன்றவில்லை' தரப்பிலும் வாதிடவுள்ளனர்.

சங்கத்தின் இருபதாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மலர் வெளியீடும் இடம்பெறும்.

மலர் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஈ.குமரனும் மதிப்பீட்டுரையை யாழ்.பல்கலைக் கழக முகாமைக் கற்கைகள் வணிகபீட பீடாதிபதி கலாநிதி பேராசிரியர் தி.வேல்நம்பியும் நிகழ்த்துவர். (ம-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மதத்தையும் பயன்படுத்தி வன்னியில் நில ஆக்கிரமிப்பு

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி.குற்றச்சாட்டு

வவுனியா, டிசெ.6

புத்தர் சிலைகளை நிறுவுவதன் மூலம் மற்றுமொரு வகையில் நில ஆக்கிரமிப்பை சிங்கள அரசு செய்து வருகிறது. இதுபோன்ற முயற்சியாகவே இறம்பைக்குளம் விளையாட்டு மைதானத்துக்குள் புத்தர் சிலை அமைக்கப்படுவதையும் நோக்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன்

இது குறித்து அவர் மேலும தெரிவித்துள்ளதாவது:

வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தின் முன்புறம் உள்ள விளையாட்டு மைதானத்துக்குள் பழைமை வாய்ந்த அரச மரத்தின் கீழ் புத்தர்சிலை நிறுவும் முயற்சி இடம்பெற்று வருகிறது. விளையாட்டு மைதானத்துக்கு அருகில் இந்து மயானம் ஒன்றும் உள்ளது. அதையும் ஆக்கிரமிக்க சிலர் முயற்சிக்கின்றனர்.

இது அந்தப் பகுதியில் புதிய பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளது.

இதன் காரணமாக இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி மாணவர்களின் விளையாட்டு மைதானம் அபகரிக்கப்படுவதுடன், மயானமும் இல்லாது போகும் நிலை ஏற்படலாம்.

தற்போது புதிதாகப் புத்தர் சிலை நிறுவப்படுவதால் அந்த இடத்தைப் படைத்தரப்பு தனது நிரந்தரக் கட்டுப்பாட்டில் எடுத்துக்கொள்ளப் போகின்றதா என்ற சந்தேகமும் எழுந்துள்ளது.



மதம் மக்களை நல்வழிப்படுத்துவதாக இருக்க வேண்டுமே தவிர, அடுத்தவரின் மனதைப் புண்படுத்துவதை ஊக்குவிக்கக் கூடாது.

கடவுளின் பெயரால் மேற்கொள்ளப்படும் எத்தகைய ஆக்கிரமிப்பும் கடவுள் விரோதப் போக்காகவே அமையும்.

எனவே புதிய புத்தர் சிலையை அப்புறப்படுத்தி, விளையாட்டு மைதானத்தையும் பொது மயானத்தையும் உரியவர்களிடம் ஒப்படைக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

(ஐ-400)

# ஒவ்வொரு வீட்டிலும் தோட்டச் செய்கை

வவுனியா, டிசெ.6

வடக்கில் உள்ள ஒவ்வொரு குடும்பங்களும் வீட்டுத் தோட்டம் செய்ய வேண்டும். இதன் மூலமே சுய தேவைகளைப் பூர்த்தி செய்து அபிவிருத்தியை மேம்பாடடையச் செய்யலாம்.

இவ்வாறு தெரிவித்தார் வன்னி மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரும் அமைச்சருமான ரிஷாத் பதியுதீன்.

வவுனியா முருகனூர் விவசாய பயிற்சிக் கல்லூரியில் பாடசாலைகளுக்கான விவசாய உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

மஹிந்த சிந்தனை வேலைத் திட்டத்துக்கு அமைவாக பொருளாதார அமைச்சரின் வழிகாட்டலில் வடபகுதி விவசாயத்துறையில் புதுப்பொலிவு கண்டுவருகின்றது.

திவிநெகும திட்டம் மூலம் விவசாயத் துறைக்கு பெரும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் வடக்கு மக்களின் வாழ்வாதாரம் மேம்படும். - என்றார். (ஐ)

# மருத்துவமுகாம்

அக்கராயன், டிசெ. 6

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையின் ஒழுங்குபடுத்தலில் சர்வதேச லயன்ஸ் கழகங்களின் இலவச மருத்துவ முகாமும் உதவி வழங்கலும் ஸ்கந்தபுரம் இல. 1 பாடசாலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இதில் தொற்றுநோய்கள் மற்றும் தொற்றாநோய்களுக்கான சிகிச்சைகளுடன் மருத்துவ ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

அத்துடன் மாற்றுத் திறனாளிகளுக்கான உபகரணங்களும் வழங்கப்பட்டன.

(ஐ-18)

# மிக மோசமான நிலையில் கணேசபுரம் ரெயிலர் பாலம்

கிளிநொச்சி,டிசெ.6

கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்தியில் இருந்து கணேசபுரம் செல்லும் வீதியில் உள்ள ரெயிலர் பாலம் மிக ஆபத்தான நிலையில் காணப்படுவதனால் இதனூடாகப் பயணிக்கும் பாடசாலை மாணவர்கள், பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்தியில் இருந்து கணேசபுரம் கிராமத்துக்கும் ஏனைய திருநகர், ஜெயந்திநகர் ஆகிய பகுதிகளுக்கும் செல்லும் வீதியில் பிரதான நீர்ப்பாசனக் கால்வாய்க்கு அமைக்கப்பட்ட ரெயிலர் பாலம் எனப்படும் குறித்த பாலம் கடந்த 1992 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெற்ற போர் காரணமாக குண்டு வைத்து அகற்றப்பட்ட நிலையில் தொடர்ந்து சேதமடைந்தே காணப்பட்டது.

இதன் பின்னர் குறித்த பாலம் ரயில் பாலத்தின் பாகங்களைக் கொண்டு தற்காலிகமாக கடந்த 1998 ஆம் ஆண்டு காலப் பகுதியில் புனரமைக்கப்பட்டு இன்று வரை தற்காலிகப் புனரமைப்புடனேயே காணப்படுவதுடன் இப்பாலத்தில் தொடர்ந்து விபத்துக்கள் இடம்பெற்று வருகின்றன.

கடந்த திங்கட்கிழமை சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த நான்கு பாடசாலை மாணவிகள் பாலத்தினூடாக பயணிக்கும் போது தவறி வீழ்ந்துள்ளனர்.

இதைவிட கடந்த வாரம் இதனூடாக பயணித்த பெண்ணொருவர் தவறி வீழ்ந்துள்ளார். கடந்த மாதம் உருத்திரபுரத்தைச் சேர்ந்த வயோதிபர் ஒருவரும் இதில் வீழ்ந்து காயத்துக்குள்ளாகியுள்ளார்.

இவ்வாறு ஆபத்தான நிலையில் காணப்படும் குறித்த பாலம் நீர்ப்பாசனத் திணைக்களத்துக்குச் சொந்தமாக உள்ளபோதும் கடந்த இருபது வருடங்களுக்கும் மேலாக புனரமைக்கப்படாது உள்ளமையால் இந்த வீதியைத் தினமும் பயன்படுத்தி வரும் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

(த-6)

# பட்டதாரிப் பயிலுநர் 137 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கினார் ரிஷாத்

## அரசியல் செல்வாக்கு என்கின்றனர் ஏனையோர்



வவுனியா, டிசெ.6

வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த 137 பட்டதாரிப் பயிலுநர்களுக்கு அரச திணைக்களங்களில் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான நிகழ்வு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

மூவினத்தையும் சேர்ந்த பட்டதாரிப் பயிலுநர்களுக்கு இந்த நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் அவர்களுக்கான பணி இடங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன.

நியமனங்களை வர்த்தக கைத்தொழில் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திர, வடமாகாண ஆளுநரின் இணைப்பாளர் முகைதீன், வவுனியா மாவட்ட மேலதிக அரச அதிபர் சரஸ்வதி மோகநாதன், பிரதேச செயலாளர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதேவேளை வவுனியா மாவட்டத்தில் 305 பட்டதாரிகளுக்குப் பயிலுநர் நியமனம் வழங்கப்பட்டிருந்தது.

இவர்களில் 137 பேருக்கு மட்டுமே நேற்றுமுன்தினம் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளதால் ஏனையவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். குறிப்பாக அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தனது செல்வாக்குக்கு உட்பட்டவர்களுக்கு இந்த நியமனங்களை வழங்கியுள்ளதாகப் பாதிக்கப்பட்ட பட்டதாரிகள் கவலை தெரிவிக்கின்றனர். (ஐ-400)

# தமிழ்ப் பாடசாலைகளை நாம் புறக்கணிக்கவில்லை

வவுனியா, டிசெ.6

வன்னி மாவட்டத்தில் பாடசாலைகள் அபிவிருத்தியின்போது புறக்கணிக்கப்படவில்லை. தெரிவு செய்யப்பட்ட எல்லாப் பாடசாலைகளுக்கும் சரியான அபிவிருத்திப் பங்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு தெரிவித்தார் வன்னி மாவட்ட அபிவிருத்தி குழுவின் தலைவரும் அமைச்சருமான ரிஷாத் பதியுதீன்.

வவுனியா, செட்டிகுளம் கல்வி வலயத்துக்குட்பட்ட சூடுவெந்தபுலவு அல்-இக்பால் மகா வித்தியாலயத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

வன்னி மாவட்டத்தில் ஆயிரம் பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்தில் தமிழ்ப் பாடசாலைகள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. மாணவ சமூகத்தின் கல்வி மேம்பாட்டுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவர் என்ற வகையில் இனங்களுக்கு அப்பால் நாம் செய்துவருகிறோம்.

வன்னி மாவட்டத்தில் முல்லைத்தீவில் 3 பாடசாலைகள், வவுனியா மற்றும் மன்னாரில் தலா இரண்டு பாடசாலைகள் என 7 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இதில் 5 தமிழ்ப் பாடசாலைகளும் 2 முஸ்லிம் பாடசாலைகளும் உள்ளடங்குகின்றன - என்றார்.

(ஐ)

# சுகாதாரச் சீர்கேடான உணவகம்; 'சீல்' வைக்கப்பட்டது கிளிநொச்சியில்

கிளிநொச்சி,டிசெ.6

கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்திப் பகுதியில் சுகாதார நடைமுறைகளுக்கு ஒவ்வாமல் இயங்கி வந்த உணவகம் ஒன்று நீதிமன்ற உத்தரவுக்கு அமைய நேற்று முன்தினம் 'சீல்' வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்திக்கு அண்மித்த பகுதியில் சுகாதார நடைமுறைகளுக்கு ஒவ்வாத வகையிலும் சுகாதார நடைமுறைகளைப் பேணாத வகையிலும் இயங்கி வந்த மேற்படி உணவகத்தின் சுகாதார நடைமுறைகளைச் சீர் செய்யுமாறும் தனிநபர் சுகாதாரத்தைப் பேணுமாறும் பல தடவைகள், அறிவிக்கப்பட்டும் அதன் சுகாதாரத்தைப் பேணாத நிலையில் நேற்று முன்தினம் பிற்பகல் ஒரு [illegible] கிளிநொச்சி [illegible] நீதிமன்ற உத்தரவுக்கு அமைய கரைச்சிப் பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர் மற்றும் நீதிமன்ற பதிவாளர், பொலிஸார் ஆகியோர் சென்று குறித்த உணவகத்துக்கு சீல் வைத்துள்ளனர்.

குறித்த உணவகமானது கரைச்சிப் பிரதேச சபையின் அனுமதியின்றியும் வியாபார உரிமமின்றியும், கிளிநொச்சி இரணைமடுக் குளத்தில் இருந்து உருத்திரபுரம், சிவநகர், பெரியபரந்தன், குஞ்சுப்பரந்தன் போன்ற இடங்களுக்கு நீரைக் கொண்டு செல்லும் பிரதான வாய்க்காலில் அருகில், சட்ட விரோதமான முறையில் அமைக்கப்பட்டு இயங்கிவந்தது.

இந்த உணவகத்தின் மலசலகூடம், கிணறு, கழிவு நீர்த்தொட்டி என்பன பிரதான நீர்ப்பாசன வாய்க்காலில் இருந்து மூன்று அடி இடைவெளிக்கும் குறைவான பகுதியிலேயே [illegible]துடன் [illegible] இருந்து வெளியேற்றப்படும் மீன், இறைச்சிக் கழிவுகள் ஏனைய திண்மக் கழிவுகள், திரவக் கழிவுகள் எனபன குறித்த நீர்ப்பாசன வாய்க்காலிலேயே வீசப்படுகின்றன.


குறித்த வாய்க்காலின் நீரை உருத்திரபுரம், ஜெயந்திநகர், கணேசபுரம், சிவநகர், செடுக்கன், பெரியபரந்தன், குஞ்சுப் பரந்தன், நீவில் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள மூவாயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் தமது அன்றாடத் தேவைகளுக்குப் பயன்படுத்துகின்றன.

இந்த நிலையிலேயே இவ்வாறு குறித்த உணவகத்தால் நீர் மாசுபடுத்தப்படுகின்றது. இந்த விடயம் தொடர்பாக மேற்படி பகுதிகளின் விவசாய அமைப்புக்கள் பல தடவை நீர்ப்பாசனப் பொறியியலாளரின் கவனத்துக்குக் கொண்டு வந்த போதும் பல்வேறு அரசியல் அழுத்தம் காரணமாக அதனைத் தடுக்க முடியவில்லை எனவும் பிரதான வாய்க்காலில் இருந்து 33 அடி வரையான நிலப்பரப்பு நீர்ப்பாசனத் திணைக்களத்துக்குச் சொந்தமானதாக இருந்த போதும் அந்த உணவகத்தை அகற்ற முடியாதிருப்பதாகவும் நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

இந்த உணவகத்தின் சுகாதார நடைமுறை மற்றும் தனிநபர் சுகாதாரம் பேணுவது தொடர்பாக கடந்த ஜூலை மாதம் 10 ஆம் திகதி அனுப்பிய கடிதத்துக்கும் எந்த முன்னேற்றமும் இல்லாத நிலையில் குறித்த உணவகம் நேற்றுமுன்தினம் சீல வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேபோன்று கிளிநொச்சியில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத 26 இற்கும் மேற்பட்ட உணவகங்கள் நீதிமன்றச் சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நயினாதீவு குறிகாட்டுவான் மார்க்கத்தில் கடல்பாதைச் சேவையை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாக இரு பகுதித் துறைமுகங்களிலும் பாதைக்கான பாலம் அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. நயினாதீவுத் துறைமுகப் பகுதியில் பாலம் அமைக்கும் பணிகள் இடம்பெறுகின்றன. (ம-7)

# மும்மொழிகளில் விவரம் பஸ்களில் மிக அவசியம்

## இல்லையாயின் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.6

தனியார் பஸ்களில் மும்மொழிகளில் தகவல்கள் அடங்கிய விவரங்களைக் காட்சிப்படுத்தாதவிடத்து குறித்த பஸ்களுக்கு எதிராக தேசியபோக்குவரத்து ஆணைக் குழுவால் நடவடிக்கை எடுக்கப்பட்வுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவால் தனியார் பஸ்களில் கட்டாயமாகச் சில விவரங்களைக் காட்சிப் படுத்துமாறு கோரி இரண்டு தடவைகள் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

மும்மொழியிலானபெயர்ப் பலகை, பஸ்ஸில் ஏதாவது பிரச்சினைகள் ஏற்பட்டால் அது தொடர்பில் அறிவிக்க வேண்டிய தொலைபேசி இலக்கங்கள், விசேட தேவை உடையவர்கள், கர்ப்பிணித் தாய்மாருக்கு என்று வாசகம் அடங்கிய 'ஸ்ரிக்கர்கள்' கட்டண விவரங்கள், நேர அட்டவணை என்பனவும் பஸ்களில் கட்டாயம் காட்சிப்படுத்தப்பட வேண்டும் என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த அறிவுறுத்தல்களை மீறுவோருக்கு எதிராகவே நடவடிக்கை எடுக்கப்பட வுள்ளது என்று தெரிவிக்கப் பட்டது. (ம-5)

# வரணி ம.விக்கு சுற்றுமதில்

வரணி, டிசெ.6

வரணி மகாவித்தியால யத்துக்கு சுற்றுமதில் இல்லாத குறை ஓரளவு தீர்க்கப்பட்டுள்ளது.

இந்தப் பாடசாலையின் தெற்கு மேற்கு வடக்குப் பகுதிகளில் சுற்றுமதில் இல்லாத நிலையில் பாடசாலையின் பாதுகாப்பு இதுவரை கேள்விக் குறியாக இருந்தது.

இந்தப் பகுதிகளில் வேலிகள் இல்லாத நிலையில் கட்டாக்காலி கால்நடைகளின் நடமாட்டம் பாடசாலை வளாகத்துள் இருந்தது. தற்சமயம் பாடசாலையின் தெற்குப் பகுதியில் சுமார் ஆயிரம் அடி வரையான சுற்றுமதில் ஒன்று பழைய மாணவர் சங்கத்தால் அமைக்கப்பட்டுள்ளது.

கனடா வாழ் வரணிப் பிரதேச ஒன்றியத்தினரால் வழங்கப்பட்ட நிதி அன்பளிப்பின் மூலம் இந்த மதில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மிகுதிப் பகுதி கல்வித் திணைக்கள நிதி உதவியுடன் பாடசாலை நிர்வாக மட்டத்தில் முட்கம்பி வேலி மூலம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. (ம-122)

# மாதகலில் விடுவிக்கப்படாத பகுதிகளுக்கு விரைவில் விடிவு

யாழ்ப்பாணம்,டிசெ.6

மாதகல் மேற்கில் கடற்படையினரால் இன்னமும் விடுவிக்கப்படாமல் இருந்த நுணசைப் பாடசாலை மற்றும் அதனுடன் இணைந்த 14 வீடுகளையும் விடுவிப்பதற்குக் கடற்படையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

22 வருடங்களாக கடற்படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த மாதகல் மேற்கு பிரதேசம், அந்தப் பகுதி மக்கள் உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ததைத் தொடர்ந்து கடந்த ஒக்ரோபர் மாத இறு தியில் விடுவிக்கப்பட்டது.

இதுவரையில் அந்தப் பகுதியில் மீளக் குடியமர்வதற்காக 340 குடும்பங்கள் வரையில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் பதிவுகள் மேற்கொண்டுள்ளன.

மாதகல் மேற்கில் மக்கள் மீளக் குடியமர்வதற்கு அனுமதிக்கப்பட்ட போதும், அந்தப் பகுதியிலுள்ள நுணசைப் பாடசாலை மற்றும் அதனுடன் இணைந்த 14 வீடுகள் மக்களிடம் கையளிக்கப்படாமல் கடற்படையினரின் பாவனையிலேயே தொடர்ந்தும் இருந்தன.

தற்போது இந்தப் பிரதேசத்தில் இருந்து வெளியேறுவதற்கு கடற்படையினர் நடவடிக்கைகள் எடுத்து வருகின்றனர்.

இன்னும் ஒரிரு நாள்களில் அந்த வீடுகளும், பாடசாலையும் உரியவர்களிடம் கையளிக்கப்படவுள்ளன.

மேலும் மீளக் குடியமர்ந்த மக்களுக்கு வீடமைப்பதற்கு உரிய தகரங்கள் மற்றும் கத்தி, கோடரி போன்றன அடங்கிய உபகரணப் பொதிகளும் வழங்கப்பட்டன.

அதற்கு மேலதிகமாக யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தால் உணவல்லாத பண்டங்களும் வழங்கப்பட்டுள்ளன. (ம-5)

# விவசாய நிலங்களில் பாதீனியத்தின் ஆட்சி



யாழ்ப்பாணம்,டிசெ.6

வலி.கிழக்குப் பிரதேச விவசாய நிலங்களை மீண்டும் பாதீனியச் செடிகள் முற்றுகையிட்டுள்ளன.

அண்மையில் பெய்த மழையை அடுத்து பாதீனியம் படர்ந்து வளர்ந்து காணப்படுகிறது.

இதனால் பயிர்கள் பாதிப்படையும் நிலை ஏற்பட்டுள்ளது.

கோப்பாய், இராச வீதி, நீர்வேலி பகுதிகளில் உள்ள விவசாய நிலங்களில் இவற்றின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுகிறது.

வருடந்தோறும் இவை அழிக்கப்பட்டு வந்தாலும் மழை காலங்களில் மீண்டும் துளிர்த்து விடுகின்றன என்று விவசாயிகள் கவலை தெரிவித்தனர். விவசாயச் செய்கைக்கு பெரும் ஆபத்தை விளைவிக்கும் பாதீனியத்தை முற்றாக அழிக்க முடியாதா என்று விவசாயிகள் கேட்கின்றனர். (ம-17)

# தற்காலிக பணியாளர் நிறுத்தம்; குடிதண்ணீர் விநியோகம் தடை

## வலி. கிழக்கு மக்கள் தண்ணீர் இன்றிச் சிரமம்

யாழ்ப்பாணம்,டிசெ.6

வலி.கிழக்குப் பிரதேச சபையில் கடமையாற்றி வந்த தற்காலிகப் பணியாளர்கள் சேவையில் இருந்து நீக்கப்பட்டுள்ளமையால் வலி.கிழக்குப் பிரதேசத்துக்கான குடிதண்ணீர் விநியோகமும் தடைப்பட்டது.

கடந்த இரண்டு நாள்களாக பிரதேச மக்கள் குடிதண்ணீர் இன்றிப் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்தப் பகுதிகளின் பெரும்பாலான இடங்களுக்கு பவுசர் மூலமே குடிதண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

இந்த விடயம் தொடர்பாகச் சபையின் தலைவர் அ.உதயகுமாருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது:-

சபையால் நியமிக்கப்பட்ட 9 தற்காலிகப் பணியாளர்களையும் செயலாளர் பதவி நீக்கம் செய்துள்ளார்.

அவர்களுக்கான சம்பளக் கொடுப்பனவையும் இடைநிறுத்தியுள்ளார்.

இவர்களுள் தண்ணீர் பவுசர் சாரதியும் கழிவகற்றல் வாகன சாரதியும் அடங்குகின்றனர்.

இந்தநிலையில் குறித்த இரண்டு வாகனங்களையும் இயக்குவதற்குச் சாரதிகள் இல்லாத நிலைமை காணப்படுகிறது.

இதனால் மக்களுக்கான சேவைகள் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

இதற்கு மாற்று ஏற்பாடுகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.- என்றார். (ம-17)

# அடுத்த வருட ஓய்வூதிய நாள்கள்

தென்மராட்சி, டிசெ. 6

அடுத்த வருடத்துக்குரிய ஓய்வூதிய நாள்கள் பற்றிய விவரம் ஓய்வூதியத் திணைக்களப் பணிப்பாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனவரி-10, பெப்ரவரி-08, மார்ச்-08, ஏப்ரல்-09, மே-09, ஜூன்-10, ஜூலை-10, ஒகஸ்ட்-08, செப்ரெம்பர்-10, ஒக்ரோபர்-08, நவம்பர்-08, டிசெம்பர்-10.(ம-9)

# முதியோர்கள் கொடுப்பனவை இன்று தொடக்கம் பெறலாம்

தென்மராட்சி, டிசெ. 6

தென்மராட்சி பிரதேச முதியோர்களுக்கான நவம்பர் மாதக் கொடுப்பனவுத் தொகையான ஆயிரம் ரூபாவை இன்று தொடக்கம் அஞ்சல் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோரில் 70 வயதுக்கு மேற்பட்டோருக்கு கடந்த ஜூன் மாதம் தொடக்கம் ஆயிரம் ரூபா வழங்கப்படுமென அரசால் அறிவிக்கப்பட்டது. இதனை அடுத்து கடந்த செப்ரெம்பர் மாதம் ஜூன் மாதத்துக்குரிய கொடுப்பனவுத் தொகையான ஆயிரம் ரூபா பிரதேசத்தில் உள்ள சாவகச்சேரி, கைதடி, கொடிகாமம் ஆகிய அலுவலகங்கள் மூலம் வழங்கப்பட்டன.

நிலுவைத் தொகையுடன் நவம்பர் மாதக் கொடுப்பனவு வழங்கப்படும் என்று அறிவிக்கப்படிருந்த போதிலும், தேசிய முதியோர் செயலக பணிப்பாளரின் அறிவிப்பின் பிரகாரம் நவம்பர் மாதக் கொடுப்பனவுக்குரிய அட்டைகள் தயாரிப்பு உட்பட பல்வேறு பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு நேற்று அந்தந்த கிராம அலுவலர்களிடம் கொடுப்பனவு அட்டைகள் கையளிக்கப்பட்டன.

இந்த கொடுப்பனவுக்குரிய காசோலை அந்தந்த அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதால், கொடுப்பனவு அட்டையைப் பெற்று இன்று தொடக்கம் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேசத்தில் ஆயிரத்து 516 முதியோர்களுக்கு இந்தக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. முதியோர்கள் கடந்த ஜூன் மாதத்துக்கு முன்னர் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெற்ற அஞ்சல் அலுவலகங்கள், உப அஞ்சல் அலுவலகங்கள் ஆகியவற்றில் கொடுப்பனவைப் பெறலாம் எனவும் அறிவிக்கப்பட்டது. (ம-9)

# மீள்குடியமர்வு நிவாரணம் யாருக்கு?

பளை,டிசெ.6

மீள்குடியமர்வு நிவாரணம் மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கா? அல்லது இங்கு பதிவை மேற்கொண்டு விட்டு வேறு மாவட்டங்களில் தங்கியுள்ளவர்களுக்கா? என்பது பற்றி பளைப் பிரதேச மக்கள் கேட்டுள்ளனர்.

பளைப்பிரதேசத்தில் 2008 ஆம் ஆண்டு தொடக்கம் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு அரசாலும், பல்வேறு நிறுவனங்களாலும் பல்வேறு வகையான உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் இவ்வளவு காலமும் மீளக்குடியமராமல் இங்கு பங்கீட்டு அட்டையை மாற்றிவிட்டு வேறு மாவட்டங்களில் தங்கியிருப்போருக்கும் நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அண்மையில் கிராம அலுவலர் அலுவலகங்களில் நியமிக்கப்பட்ட பட்டதாரி பயிலுநர்கள் குடியிருப்பாளர்களின் விவரங்கள் திரட்டச் சென்ற வேளையில் இந்த தகவல்கள் வெளியாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப்பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த பல குடும்பங்களுக்கு வீட்டமைப்புத் திட்ட உதவிகள் கிடைக்காத நிலையில், மீளக்குடியமராத பலருக்கு வீட்டமைப்புத் திட்டம் வழங்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டது.

இரு கிராம அலுவலர் பிரி[illegible] பத்துக்கு உரிமையாளராக உள்ள யாழ்ப்பாணத்தில் பொறியியலாளராகக் கடமையாற்றும் ஒருவருக்கு வீட்டமைப்புத் திட்டம் உட்பட அனைத்து நிவாரண உதவிகளும் வழங்கப்பட்டுள்ளன.

இது குறித்த தகவல்களும் வெளியாகியுள்ளன.

இவ்வாறான முறைகேட்டுக்குப் பொறுப்பானவர்கள் யார் என்பதை உரிய அதிகாரிகள் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ம.தி.மு.க., வில் இருந்து விலகிய நாஞ்சில் சம்பத்,அ.தி.மு.க., பொதுச் செயலாளர் ஜெயலலிதா முன்னிலையில் கட்சியில் இணைந்தார்.

## பாபர் மசூதி தகர்ப்புச் சம்பவம்:
# குற்றவாளிகளைக் கைது செய்யக்கோரி ஆர்ப்பாட்டம்

சென்னை, டிசெ.6

பாபர் மசூதியை இடித்த சங் பரிவார் அமைப்புகளை தடை செய்ய வலியுறுத்தியும் மசூதி இடிப்பில் தொடர்புடைய குற்றவாளிகளைக் கைது செய்யக் கோரியும் இன்று வியாழக்கிழமை மாநிலம் முழுவதும் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று இந்திய தவ்ஹீத் ஜமாஅத் அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக இந்திய தவ்ஹீத் ஜமாஅத் துணைத் தலைவர் முஹம்மத் முனீர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்ததாவது:-

பாபர் மசூதி சம்பந்தப்பட்ட வழக்குகளை உடனே துரிதமாக முடிக்க வேண்டும். பாபர் மசூதியை இடித்த சங்பரிவார் அமைப்பைத் தடை செய்ய வேண்டும். பாபர் மசூதி இடிப்பில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை உடனே கைது செய்ய வேண்டும் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி பாபர் மசூதி இடிப்பு தினமான (டிசெம்பர்6) இன்று சென்னையில் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் அருகே முற்பகல் 11 மணிக்கு கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்படும்.

இதேபோல் மதுரை, கோவை, நெல்லை, திருச்சி, சேலம், ஈரோடு, விருதுநகர், தூத்துக்குடி, வேலூர், கடலூர் பரங்கிப்பேட்டை, காரைக்குடி, கும்பகோணம், பட்டுக்கோட்டை, புதுச்சேரி உட்பட அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் முற்பகல் 11 மணிக்கு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும். திருப்பூரில் தபால் நிலைய முற்றுகைப் போராட்டம் நடைபெறும் - என்றுள்ளது. (வ)

# மாலைதீவுக்கு இந்தியா எச்சரிக்கை

**மாலை தீவுகளில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் மீதான தாக்குதல் தொடர்வது குறித்து இந்தியா கவலை அடைந்துள்ளது.**

டில்லி,டிசெ.6

ஒப்பந்த விவகாரத்தில் தன்னிச்சையான நடவடிக்கைகள் ஏதாவது எடுக்கப்பட்டால் அது இரு தரப்பு உறவுகளைச் சீர்குலைப்பதாக அமையும் என்று மாலைதீவை இந்தியா எச்சரித்துள்ளது.

மாலைதீவுகளில் இந்தியாவின் ஜி.எம்.ஆர். நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட விமான நிலைய கட்டுமான ஒப்பந்தம் அண்மையில் ரத்து செய்யப்பட்டது.

இதுகுறித்து மத்திய வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் டில்லியில் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

மாலை தீவுகளில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் மீதான தாக்குதல் தொடர்வது குறித்து நாம் கவலை அடைந்துள்ளோம்.

சட்டத்தின் ஆட்சி நடப்பதையும் ஜனநாயகப் பண்புகள் பராமரிக்கப்படுவதையும் மாலைதீவுகள் அரசு உறுதிப்படுத்த வேண்டும்.

அங்குள்ள நிலைமையை நாம் உன்னிப்பாகக் கண் காணித்து வருகிறோம். ஜி.எம்.ஆர். நிறுவன ஒப்பந்த விவகாரத்தில் மிரட்டும் நடவடிக்கைகள் ஏதாவது எடுக்கப்பட்டால் அது இரு தரப்பு உறவுகள் மீது கடும் விளைவுகளைக் கொண்டிருக்கும் - என்றார்.

முன்னதாக, ஜி.எம்.ஆர். நிறுவன ஒப்பந்தம் குறித்து வெளியுறவுத் துறை அமைச்சர் சல்மான் குர்ஷித்திடம் மாலை தீவுகள் வெளியுறவு அமைச்சர் அப்துல் சமத் அப்துல்லா விளக்கமளித்தார்.

இதனிடையே, ஜி.எம்.ஆர். நிறுவனத்துடன் செய்து கொண்ட ஒப்பந் தத்தை ரத்து செய்வதோடு, மாலே விமான நிலையத்தின் முழுக் கட்டுப்பாட்டையும் தன் வசம் எடுத்துக் கொள்ளும் திட்டத்தில் மாலை தீவுகள் முழுக் கவனம் செலுத்தி வருகிறது. (வ)

## இந்திய காங். தமிழகக்கிளை அமெரிக்காவில் அங்குரார்ப்பணம்



நியூயோர்க், டிசெ.6

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் வெளிநாட்டு இயக்கங்களில் ஒன்றான இந்தியத் தேசிய அமெரிக்க ஓவர்சீஸ் காங்கிரஸின் தமிழகக் கிளை திறப்பு விழா நியூயோர்க்கில் சிறப்பாக நடைபெற்றது.

வெளிநாடுகளில் வாழும் இந்தியர்களில் அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் ஆதரவாளர்களை உறுப்பினர்களாகக் கொண்ட இயக்கம் இந்திய தேசிய ஓவர்சீஸ் காங்கிரஸ். 2001 ஆம் ஆண்டு இந்த அமைப்பை அமெரிக்காவுக்குச் சென்ற காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி ஆரம்பித்து வைத்தார்.

ஐ.நா. சபையில் உயர் அதிகாரியாக இருந்து ஓய்வு பெற்ற ஜோர்ஜ் ஆபிரகாம் என்பவர் மேற்படி அமைப்பின் தலைவராக உள்ளார். இது கேரளா, ஆந்திரா, பஞ்சாப், ஹரியானா, மத்திய பிரதேசம் என்று அந்தந்த மொழி பேசும் காங்கிரஸாரைக் கொண்டு கிளைகள் தொடக்கப்பட்டு கூட்டமைப்பாகச் செயற்பட்டு வருகின்றன. இந்த நிலையில் தமிழகக் கிளை திறப்பு விழா நியூயோர்க்கில் நடைபெற்றது.

திறப்பு விழாவில் கலந்து கொண்ட முன்னாள் மத்திய அமைச்சர் திருநாவுக்கரசர் புதிய கிளையை ஆரம்பித்து வைத்தார். இந்த விழாவில் மூத்த காங்கிரஸ் தலைவர் குமரி அனந்தன், இளைஞர் காங்கிரஸின் வாழைப்பாடி ராமசுகந்தன், பாலக்காடு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மாதப்பன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். (வ)

## சங்மாவின் மனு நிராகரிப்பு

ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியின் வெற்றியை எதிர்த்து பி.ஏ.சங்மா தாக்கல் செய்த மனுவை நிராகரித்தது உச்சநீதிமன்றம்.

முன்னாள் ஜனாதிபதி பிரதிபா பாட்டீலின் பதவிக் காலம் முடிந்ததையடுத்து, புதிய ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல், கடந்த ஜூலை 19 ஆம் திகதி நடைபெற்றது. இதில் மத்திய நிதி அமைச்சராக இருந்த பிரணாப் முகர்ஜி, காங்கிரஸ் கூட்டணி சார்பில் போட்டியிட்டார். அவரை எதிர்த்து முன்னாள் சபாநாயகர் பி.ஏ.சங்மா போட்டியிட்டார். தேர்தலில் பிரணாப் அமோக வெற்றி பெற்று ஜனாதிபதியனார். முன்னதாக, பிரணாப்பின் வேட்பு மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என தேர்தல் ஆணையத்தில் சங்மா முறைப்பாட்டு மனு தாக்கல் செய்தார். (வ)

# எல்லையைத் தாண்டிச் செல்லும் மீனவர்களை காப்பாற்ற முடியாது

## கைவிரிக்கிறார் புதுவை பிராந்திய கடற்படை அதிகாரி



சென்னை, டிசெ.6

இந்தியக் கடல் எல்லையைத்தாண்டிச் செல்லும் தமிழக மீனவர்களை த் தங்களால் பாதுகாக்க முடியாது என்று தமிழகம் மற்றும் புதுவை பிராந்திய கடற்படை அதிகாரி அட்மிரல் கே.மகாதேவன் தெரிவித்தார்.

சென்னை போர் நினைவுச் சின்னத்தில் நேற்று முன்தினம் கொண்டாடப்பட்ட 41 ஆவது கடற்படை நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியக் கடல் எல்லைகளில் தமிழக மீனவர்கள் யாரும் தாக்கப்படுவதில்லை. இந்தியக் கடல் எல்லைக்குள் மட்டுமே தமிழக மீனவர்களை எங்களால் காப்பாற்ற முடியும்.

தமிழக மீனவர்கள் 35 பேர் கைது செய்யப்பட்டது குறித்து இலங்கைக் கடற்படையினரிடம் பேச்சு நடைபெற்று வருகின்றது. விரைவில் அவர்கள் விடுதலை பெற அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும். எல்லையைத் தாண்டும் மீனவர்களைத் தங்களால் பாதுகாக்க முடியாது-என்றார். (வ)

## தாஜ்மஹாலில் பிறந்தநாள் கொண்டாட பாக். உள்துறை அமைச்சருக்கு அழைப்பு

**எதிர்வரும் 11-13 ஆம் திகதி வரை இந்திய சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் ரஹ்மான் மாலிக்கின் பிறந்த தினம் எதிர்வரும் 12 ஆம் திகதி ஆகும்.**

சென்னை,டிசெ.6

பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ரஹ்மான் மாலிமின் பிறந்ததினத்தை தாஜ் மஹாலில் கொண்டாட இந்தியா அழைப்பு விடுத் துள்ளதாக உள்துறை அமைச்சர் சுஷில்குமார் ஷிண்டே தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியா-பாகிஸ்தான் இடையே புதிய விசா ஒப்பந்தங்கள் கைச்சாத்தாக உள்ளன. அதற்காகப் பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ரஹ்மான் மாலிம் இந்தியாவுக்கு வரவுள்ளார்.

எதிர்வரும் 11-13 ஆம் திகதி வரை இந்திய சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் ரஹ்மான் மாலிக்கின் பிறந்த தினம் எதிர்வரும் 12 ஆம் திகதி ஆகும்.

இதை அறிந்த இந்திய அதிகாரிகள், பாகிஸ்தானுடன் நல்லுறவை வளர்க்கும் விதமாக, ரஹ்மான் மாலிக்கின் பிறந்த தினத்தை தாஜ் மஹாலில் வைத்துக் கொண்டாட அழைப்பு விடுத்துள்ளனர்.

இதனை ரஹ்மான் மாலிக்கும் ஏற்றுக் கொண்டதாகவும், அதற்காக மிகப் பெரியளவில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தார். (வ)

# சுற்றுலா விசா கட்டுப்பாட்டைத் தளர்த்தியது இந்தியா

**வெளிநாட்டினர் 60 நாள்கள் கழித்தே இந்தியாவுக்கு சுற்றுலா விசாவில் வர முடியும் என்ற விதிமுறை 2009 ஆம் ஆண்டில்தான் நடைமுறைப்படுத்தப்பட்டது.**

டில்லி,டிசெ.6

சுற்றுலாத் துறையை வளர்ச்சியடையச் செய்வதற்காக சுற்றுலா விசா வழங்கும் விதிகளை இந்திய மத்திய அரசு தளர்த்தியுள்ளது.

சுற்றுலா விசா எடுத்து இந்தியாவுக்கு வந்த ஒரு வெளிநாட்டவர் இங்கிருந்து சென்று விட்டு, மீண்டும் இந்தியாவுக்கு சுற்றுலா விசாவில் வர விரும்பினால் குறைந்தபட்சம் 2 மாத இடைவெளி இருக்க வேண்டும் என்று விதி இருந்தது. இதை தற்போது மத்திய அரசு தளர்த்தியுள்ளது.

இதேவேளை பாகிஸ்தான், சீனா, ஈரான், ஈராக், வங்கதேசம், ஆப்கானிஸ்தான், சூடான் ஆகிய நாட்டினருக்கும், பாகிஸ்தான், பங்களாதேஷை பூர்வீகமாகக் கொண்ட பயணிகளுக்கும் பழைய விதியிலிருந்து விலக்கு அளிக்கப்படவில்லை.

வெளிநாட்டினர் 60 நாள்களின் பின்னரே இந்தியாவுக்கு சுற்றுலா விசாவில் வர முடியும் என்ற விதிமுறை 2009 ஆம் ஆண்டில்தான் நடைமுறைப்படுத்தப்பட்டது. லஷ்கர், இ தொய்பா தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்த டேவிட் ஹர்ட்லி பலமுறை இந்த விசாவை தவறாகப் பயன்படுத்தினார். அவர் 9 முறை இதுபோல இந்தியாவுக்கு வந்துள்ளார். இது நவம்பர் 26 ஆம் திகதி மும்பை தாக்குதலுக்குக் காரணமாக இருந்தது. இது போன்ற சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் தடுக்க அரசு 60 நாள் இடைவெளி விடும் விதிமுறையை நடைமுறைப்படுத்தியது.

இந்த விதிமுறையால் சுற்றுலாப் பயணிகள் வருகை மிகவும் பாதிக்கப்படுவதாக சுற்றுலாத் துறை முறைப்பாடு தெரிவித்தது. இதனையடுத்து மேற்படி விதிமுறை குறித்து ஆய்வு செய்யுமாறு உள்துறை மற்றும் வெளியுறவுத்துறை ஆகியவற்றை பிரதமர் அலுவலகம் கேட்டுக் கொண்டது. ஆய்வின் முடிவில் இந்த விதிமுறைகளை தளர்த்த அரசு முடிவு செய்துள்ளது. இருப்பினும் எந்த சுற்றுலாப் பயணியாவது பாகிஸ்தானுடன் தொடர்புடையவராக இருந்தால் அது குறித்து அரசு தீர ஆய்வு செய்த பின்பே விசா வழங்குவது குறித்து முடிவு செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆடைத் தொழிலகத்தில் தீ; 14 பேர் சாவு



சீனாவில் உள்ள ஆடைத் தொழிலகம் ஒன்றில் நேற்று முன்தினம் ஏற்பட்ட தீவிபத்தில் 14 பேர் உயிரிழந்தனர்.

தென் சீனாவில் உள்ள குவாங்டாங் மாகாணத்தில் இந்தத் தொழிலகம் உள்ளது. தொழிலகத்தில் திடீரென்று தீப்பற்றிக் கொண்டது. இதில் சிக்கி 14 பேர் உயிரிழந்தனர். தொழிலகத்தில் ஏற்பட்ட தீயை தீயணைப்புப் படையினர் தற்போது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவதுள்ளனர்.

தீ விபத்துக் குறித்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# 29 மாணவர்கள் உயிரிழப்பு
# சிரியப் பாடசாலைத் தாக்குதலில்
## சர்வதேச அமைப்புகள் கடும் கண்டனம்

டமாஸ்கஸ், டிச. 6

சிரியாவில் பாடசாலை மீது சிரியப் படைகள் மேற்கொண்ட தாக்குதலில் 29 மாணவர்கள் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர்.

சிரியாவில் ஜனாதிபதி அசாத்தின் ஆதரவுப் படைகளுக்கும் புரட்சியாளர்களுக்கும் இடையே கடும் மோதல்கள் நடந்துவருகிறன.



இந்நிலையில் சிரியாவின் தலைநகர் டமாஸ்கஸின் தென்கிழக்கு பகுதியில் உள்ள அல் வாபிதின் முகாமில் செயற்பட்டு வந்த பாடசாலை மீது நேற்றுமுன்தினம் சிரியப் படைகள்குண்டு வீச்சு நடத்தின. இதில் பாடசாலை ஆசிரியர் உட்பட மாணவர்கள் 29 பேர் உயிரிழந்தனர்.

பாடசாலை மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு மனித உரிமை அமைப்புகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. ஆனால் அசாத் ஆதரவுப் படைகள் இந்தத் தாக்குதலுக்குக் காரணம் புரட்சியாளர்களே என்று குற்றம்சாட்டியுள்ளன.

இதேவேளை, டமாஸ்கஸை சுற்றி நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட தாக்குதல்களில் மட்டும் 141 பேர் உயிரிழந்துள்ளனர்.

1964ஆம் ஆண்டு இஸ்ரேல், கோலன் ஹெயிட்ஸ் பகுதியை கைப்பற்றிய போது அங்கிருந்து வெளியேறிய மக்கள் அல்வாபிதின் பகுதியில் அகதிகளாக தங்கியுள்ளனர்.

## கடும் கடல் கொந்தளிப்பால் மூழ்கியது சரக்குக் கப்பல்

**ஒருவர் சாவு; 10 பேரைக் காணவில்லை**

இஸ்தான்புல், டிசெ. 6

கடும் கடல் கொந்தளிப்பால் துருக்கிக் கடலில் சரக்குக் கப்பல் ஒன்று மூழ்கியது. இதில் மாலுமி ஒருவர் உயிரிழந்தார். மேலும் 10 பேரைக் காணவில்லை.

ரஷ்யாவிலிருந்து நிலக்கரி ஏற்றிக்கொண்டு 'வோல்கா போல்ட்-199' என்ற சரக்குக் கப்பல் ஒன்று துருக்கி அண்டால்யா நகருக்குப் புறப்பட்டது. துருக்கி தலைநகர் இஸ்தான்புல் கடற்பகுதியில் உள்ள கருங்கடல் வழியாக அது பயணித்துக் கொண்டிருந்த போது கடல் கொந்தளிப்புடன் பலத்த காற்று வீசியது. இதில் அந்த சரக்குக் கப்பல் விபத்துக்குள்ளாகி கடலில் மூழ்கியது.

இதில் கப்பல் மாலுமி ஒருவர் கடலில் மூழ்கி உயிரிழந்தார். 4 பேரை மீட்புப்படையினர் காப்பாற்றினர். கடல் மிகவும் சீற்றத்துடன் காணப்படுவதால் மீட்புப்பணியில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக துருக்கி தெரிவித்துள்ளது. ஹெலிகொப்டர் மற்றும் படகுகள் மூலம் காணாமல் போன 10 பேரைத் தேடும் பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

இதேவேளை, அந்தப் பகுதியில் மூழ்கிக் கொண்டிருந்த மற்றொரு கப்பலை இழுக்கும் முயற்சியை ஏனைய இழுவைப் படகுகள் மேற்கொண்டுள்ளன.


## மலாலாவின் தோழி வீட்டருகே வெடிகுண்டுத் தாக்குதல்

பாகிஸ்தானில் பெண் கல்வி உரிமைவாதியான பள்ளி மாணவி மலாலாவின் தோழி வீட்டருகே குண்டு வெடித்தது. இதில் பெண் ஒருவர் உயிரிழந்தார். 7 பேர் காயமடைந்தனர்.

பாகிஸ்தானின் ஸ்வாட் பள்ளத்தாக்குப் பகுதியில் உள்ள மின்கோரா நகரத்தைச் சேர்ந்த பெண் கல்வி உரிமைவாதியான பள்ளி மாணவி மலாலா, இவர் மீது தலிபான் பயங்கரவாதிகள் கடந்த அக்ரோபர் மாதம் 9ஆம் திகதி துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் மலாலாவும் அவரது தோழி கைனத் அகமதுவும் காயமடைந்தனர்.

இந்நிலையில், கைனத் அகமது வீட்டுக்கு எதிரே நேற்றுமுன்தினம் காலை குண்டு வெடித்தத்துள்ளது. இதில் பெண் ஒருவர் உயிரிழந்தார். 7 பேர் காயமடைந்தனர்.

இதேவேளை, பாகிஸ்தானின் கைபர்-பக்துன்கவா மாகாணத்தில் பொலிஸ் நிலையம் மீது வெடிகுண்டுகள் நிரப்பப்பட்ட வாகனத்தைப் பயங்கரவாதி ஒருவர் மோதச் செய்ததில், அந்த பொலிஸ் நிலையத்தில் பணியில் இருந்த 4 பொலிஸாரும், வழிப்போக்கர்கள் 5 பேரும் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.



# 200 உயிர்களை காவு கொண்டது 'போபோ' புயல்

பிலிப்பைன்ஸைத் தாக்கிய 'போபோ' சூறாவளி காரணமாக 200 பேர் உயிரிழந்துள்ளனர். சுமார் 40,000 பேர் தங்களது வீடுகளை விட்டு வெளியேறிப் பாதுகாப்பான இடங்களில் தங்கியுள்ளனர். மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெறுவதால் உயிரிழப்புகள் இன்னும் அதிகரிக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

'போபா' சூறாவளி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிலிப்பைன்ஸின் மின்டானோப் பகுதியை தாக்கியது. கூடும் மழையுடன் மணிக்கு 210 கிலோ மீற்றர் வேகத்தில் சூறாவளி தாக்கியது.

சூறாவளி காரணமாக மரங்கள் முறிந்து வீழ்ந்தன. மின்விநியோகம் தடைப்பட்டுள்ளதுடன், போக்குவரத்துக்களும் பாதிக்கப்பட்டுள்ளது.

சுரங்கத்தொழில் அதிகம் நடக்கும் காம்போஸ்தெலா பள்ளத்தாக்குப் பகுதிகள் சூறாவளியால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் மண்சரிவு அபாயம் நிலவுவதாக எச்சரிக்கப்பட்டுள்ளது. விமானம் மற்றும் உள்நாட்டுப்படகு போக்குவரத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இராணுவத்தினர் மீட்புப் பணிகளை அங்கு தீவிரப்படுத்தியுள்ளனர்.

பிலிப்பைன்ஸ் ஒவ்வொரு வருடமும் தைபூன் மற்றும் வெப்பமண்டல புயலால் பாதிக்கப்படுவது வழக்கம் என்று கூறப்படுகிறது.

## கண்ணிவெடித் தாக்குதல்
### நூலிழையில் உயிர்தப்பினர் சோமாலிய அமைச்சர்கள்

ஆபிரிக்க நாடான சோமாலியாவில் அமைச்சர்களைக் குறிவைத்துக் கண்ணிவெடித் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இதையடுத்து ஏற்பட்ட மோதலில் 18 பேர் உயிரிழந்தனர்.

ஆப்பிரிக்க நாடான சோமாலியாவில் 'அல் ஷாபேப்' எனும் முஸ்லிம் தீவிரவாதிகளின் செல்வாக்கு மிக்க பகுதியான ஜோஹர் என்னும் இடத்தைப் பார்வையிட சோமாலிய அமைச்சர்கள் சென்றனர். அங்கு அமைச்சர்கள் மீது கண்ணிவெடித்தாக்குதல் நடத்தப்பட்டது.

இதில் அமைச்சர்கள் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர். இதனை தொடர்ந்து இராணுவத்தினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே கடுமையான துப்பாக்கி சண்டை மூண்டது. இந்த தாக்குதல்களில் 3 இராணுவத்தினரும் 15 அல் ஷாபேப் தீவிரவாதிகளும் உயிரிழந்தனர்.

## மெக்ஸிகோ ஜனாதிபதிக்கு எதிராகப் போராட்டம்

மெக்சிகோவில் ஜனாதிபதி பதவியேற்பு நிகழ்ச்சியின்போது கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்க கோரி போராட்டம் நடைபெற்றது. கடந்த சனிக்கிழமை மெக்சிகோவின் புதிய ஜனாதிபதிக்கு எதிப்பு தெரிவிக்கும்வகையில் யோ சோய் 132 எனப்படும் மாணவர்கள் இயக்கம் போராட்டம் நடத்தியது. போராட்டக்காரர்கள் 92 பேர் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்கக்கோரி நூற்றுக்கணக்கானோர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# 2020 இல் செவ்வாய்க்கு மற்றுமொரு 'ரோவர்'
### அனுப்பவிருக்கிறது நாஸா



செவ்வாய்க்கு புதிய ரோவர் விண்கலம் ஒன்றை அனுப்ப நாஸா திட்டமிட்டுள்ளது.

அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி மையமான நாஸா, செவ்வாய் கிரகத்தில் மக்கள் வாழ்வதற்கான சூழல் குறித்து ஆய்வு செய்து வருகின்றது. இதற்காக வருகிற 2020ஆம் ஆண்டு மேலும் ஒரு ரோவர் விண்கலத்தை செவ்வாய் கிரகத்துக்கு அனுப்பத் திட்டமிட்டுள்ளது.

தற்போது செவ்வாய் கிரகத்தை 13 கமெராக்கள் பொருத்தப்பட்ட கியூரியாசிட்டி என்ற ரோபோ விண்கலம் ஆராய்ந்து வருகின்றது.

இதே போன்று வருகிற 2020ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் மற்றுமொரு ரோவர் விண்கலம் தரையிறங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் 2 ½ பில்லியன் டொலர் செலவில் செலுத்தப்படும் இந்த ரோவர் விண்கலம் செவ்வாய் கிரகத்தில் மக்கள் வாழ்வதற்கான சூழ்நிலைகள் பற்றி ஆராயும் என்று நாஸா தெரிவித்துள்ளது.

இதற்கிடையே விண்கலங்களை அனுப்பிய வெற்றி கண்டுள்ள பழைய தொழில் நுட்பத்தையே மீண்டும் பயன்படுத்த நாஸா திட்டமிட்டுள்ளது.

# ஆண்களுக்கோ காசு பயம்; பெண்களுக்கோ வயது பயம்

**சீன கருத்துக்கணிப்பில் சுவாரஸ்யம்**

பீஜிங், டிசெ.6

காசு, பணம் சேர்ப்பதை நினைத்தால் பயமாக இருக்கிறது என்று சீனாவில் பெரும்பாலான ஆண்களும், வயதாவதை நினைத்தால்தான் பயமாக இருக்கிறது என பெண்களும் கூறியிருக்கின்றனர்.

"எதைப் பார்த்தால் பயப்படுவீர்கள்" என்று சீனாவை சேர்ந்த நிறுவனம் ஒன்று கருத்துக்கணிப்பு நடத்தியது. இந்தக் கருத்துக்கணிப்பின் முடிவுகளை அந்த நிறுவனம் வெளியிட்டுள்ளது.

"பணத்தை பற்றிய பயம் தான் சீன ஆண்களுக்கு அதிகம் இருக்கிறது. "ஒழுங்காக வேலை, சம்பளம் கிடைக்குமா? பணம் சேர்க்க முடியுமோ? எதிர்காலம் ரொம்ப சிரமமாக இருக்குமோ? என்பதே ஆண்களின் கவலையாக இருக்கிறது. இவ்வாறு அதிகபட்சமாக 29 லட்சம் ஆண்கள் கூறியுள்ளனர்.

ஆனால் பெண்களுக்கோ தங்களது அழகை பற்றிய பயத்தில் அதிகமாக இருக்கிறது. வயதாகிவிடுமே என்று தான் பெரும்பாலான பெண்கள் பயப்படுகின்றனர். தவிர முகத்தில் சுருக்கம் விழுவது, அழகு குறைவது, இடுப்பு பெருத்துப்போவது ஆகியவை பெண்களின் முக்கிய கவலையாக இருக்கிறது. இந்த கருத்தை அதிகபட்சமாக 27 லட்சம் பெண்கள் கூறியிருக்கின்றனர்." என்று அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகின் வயது முதிர்ந்த பெண் சாவு



உலகின் மிகவும் வயது முதிர்ந்த பெண்மணியாக கருதப்பட்ட பெசி கூப்பர் (வயது 116) அமெரிக்காவில் உள்ள மருத்துவமனை ஒன்றில் காலமானார்.

அமெரிக்காவின் ஜோர்ஜியா மாவட்டத்தில் வசித்து வந்த ஓய்வு பெற்ற ஆசிரியை பெசி கூப்பரை உலகில் வயது முதிர்ந்த நபராக கின்னஸ் நிறுவனம் கடந்த ஆண்டு ஜனவரி மாதம் அறிவித்தது. அப்போது அவருக்கு வயது 115.

நேற்றுமுன்தினம் பெசி கூப்பர் சிகை அலங்காரம் செய்துக் கொண்டார். பின்னர் தங்கள் குடும்பத்தாருடன் கடந்த ஆண்டு கொண்டாடிய கிறிஸ்மஸ் விழாவை வீடியோவில் பார்த்து ரசித்தார். அப்போது அவருக்கு திடீரென்று மூச்சுத் திணறல் ஏற்பட்டது. இதையடுத்து அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு பலனின்றி உயிரிழந்தார்.

அமெரிக்காவின் டென்னசீ மாவட்டத்தில் பிறந்த பெசி, முதலாம் உலகப் போரின் போது, ஆசிரியராக பணிபுரியும் நோக்கில் ஜோர்ஜியாவுக்குக் குடிபெயர்ந்திருந்தார்.

# திரண்டனர் 1 லட்சம் மக்கள்

## ஜனாதிபதி மாளிகையை விட்டு வெளியேறினார் எகிப்து ஜனாதிபதி

எகிப்து தலைநகர் கெய்ரோவில் ஜனாதிபதி மாளிகையைச் சுற்றிவளைத்து நேற்று முன்தினம் மாபெரும் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. சுமார் ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்ட இந்த ஆர்ப்பாட்டத்தால் பாதுகாப்பு கருதி எகிப்து ஜனாதிபதி முர்சி, ஜனாதிபதி மாளிகையை விட்டு வெளியேறியுள்ளார்.

முர்ஸி அறிமுகப்படுத்தியுள்ள புதிய சட்டத்திருத்தம், சட்டவிதிகளிலிருந்து ஜனாதிபதிக்கு விதிவிலக்கு அளிக்க வகை செய்வதுடன், சர்வாதிகாரத்தையும் ஜனாதிபதிக்கே வழங்க சந்தர்ப்பம் அளிப்பதாக குற்றச்சாட்டப்படுகிறது.

''முன்னாள் ஜனாதிபதி முபாரக் செய்த தவறை மூர்சியும் செய்கிறார். அதை அனுமதிக்க முடியாது'' என்று ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர்.

கலவரத்தை அடக்குவதற்காக காவல்துறையினர் கண்ணீர் புகை வீச்சு பிரயோகம் மேற்கொண்டுள்ளனர். இதனால் பதற்ற சூழ்நிலை உருவாகிய போதும், உயிரிழப்புக்கள் அற்ற வன்முறைகளே இடம்பெற்றுள்ளன. சுமார் 18 க்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். ''எம்மால் பேசமுடியாது. பேசுவதற்குரிய நீதிமன்றம் இப்போது இல்லை. சுதந்திர நீதித்துறை இங்கு இயங்கவில்லை'' என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோஷமிட்டனர்.



எகிப்தின் இரண்டாவது பெரிய நகரமான அலெக்ஸாண்ட்ரியாவிலும் மக்கள் போராட்டம் நடைபெற்றுள்ளது. எகிப்தின் ஊடகங்களும் இந்தப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளன: ஊடக சுதந்திரத்தை முர்சி அடக்குவதாகக் குற்றம் சுமத்தியுள்ள ஊடகங்கள் நேற்றைய தமது வெளியீட்டில் பத்திரிகையின் முதல் பக்கத்தில் வெற்றிடமாக பதிவிட்டு தமது எதிர்ப்பை காட்டியுள்ளன.

## மொஸ்கோவில் தொடர்கிறது பனிப்பொழிவு



ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் தொடரும் கடும் பனிப்பொழிவு காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை ஸ்தம்பித்துள்ளது.

ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் பனிப்பொழிவு தொடங்கி உள்ளது. கடந்த சில நாள்களாக கடும் பனிப்பொழிவு காரணமாக பல இடங்களில் இடுப்பளவு பனி குவிந்துள்ளது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

பனிப்பொழிவின் காரணமாக வீதிகளில் போக்குவரத்துகள் தடைப்பட்டுள்ளன. இதனால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் எரிவாயு, குடிதண்ணீர் உட்பட அத்தியாவசிய பொருள்கள் கிடைக்காமல் மக்கள் அவதிப்பட்டு வருகின்றனர்.

## குரைத்த நாயை கடித்த இளைஞர்

### பொலிஸாரால் கைது



தன்னை பார்த்து குரைத்து கொண்டிருந்த நாயை கோபத்தில் கடித்த இளைஞர் கைது செய்யப்பட்டார்.

ஆஸ்திரேலியாவின் நியூ சவுத்வேல்ஸ் மாநிலத்தில் இலவாரா பகுதியில் பொலிஸார் இரவு ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது 31 வயது மதிக்கத்தக்க நபர் ஒருவர் சந்தேகத்துக்கு இடமான வகையில் நின்றிருந்தார். இதனையடுத்து அவரிடம் விசாரணை நடத்துவதற்காக பொலிஸார் அருகில் அழைத்தனர். அப்போது இவரை பார்த்து டெக்ஸ்டர் என்ற நாய் குரைத்து கொண்டே இருந்ததால் கடும் கோபமடைந்தார். தொடர்ந்து குரைத்த அந்த நாயை நோக்கி பாய்ந்து கடித்தார் இளைஞர். நாயும் இளைஞர் மீது கோபமாகப் பாய்ந்தது.

கடைசியில் நாயைக் கடித்த குற்றத்துக்காக பொலிஸார் இளைஞரைக் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கம்பிளி காப்பான், அல்வாய் வட்மத்தி.

செல்வன் யோகேஸ்வரன் பகீரதன்

சமுர்த்தி கெக்குலு சிறுவர் கழகத்தினால் கடந்த ஒக்ரோபர் மாதம் இரத்தினபுரி மாவட்டம் எம்பிலிப்பிட்டியாவில் நடைபெற்ற 15-18 வயதுக்குட்பட்ட பிரிவினருக்கான ஓவியப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட யா/ஹாட்லிக் கல்லூரி உயிரியல் பிரிவு மாணவன் யோகேஸ்வரன் பகீரதன் அவர்களை கடந்த 01.12.2012 சனிக்கிழமை கம்பஹா மாவட்டம் மங்கலவில் உள்ள சந்திரஜோதி மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற சமுர்த்தி கழகச் விழாவில் கௌரவிக்கப்பட்டு விருதுகள் வழங்கப்பட்டன.

இவர் மேலும் பல விருதுகள் பட்டங்கள் பெற்று பல்லாண்டு காலம் வாழ வியாபாரி மூலை இன்பர்சிட்டி சித்திவிநாயகர் அருள் வேண்டி நிற்கின்றோம்.

வாழ்த்துவோர்:
ஐயா, அம்மம்மா, அப்பம்மா மற்றும் மாமா, மாமிமார்கள்.

## ஆங்கில வகுப்புக்கள்

புதிய கல்வியாண்டுக்கான தரம் 3 முதல் A/L வரையான மாணவர்களுக்கு ஆங்கில பிரத்தியேக வகுப்புகளும் சிறியோர் முதல் பெரியோர் வரை Spoken with Grammar கற்க விரும்புவோருக்கு வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். (எமது நிறுவனத்தில் வந்து கற்கும் வாய்ப்பும் உண்டு).
அனுமதிக்கு முந்தவும்.
தொடர்பு : நக்கா Road, யாழ்ப்பாணம்.
T.P : 077 8361521.
(26386)

## தேவை

ஹோட்டல் வேலையில் அனுபவம் உள்ள வேலையாள்கள் தேவை.
(ஆண்/பெண்)

1. பிரதான சமையலாளர் (ஆண்/பெண்)
2. இந்தியன் உணவு தயாரிப்பாளர்
3. உபசரிப்பாளர்கள் (பெண்)

தொடர்பு: 077 2479 832
(26377) (6.7.4)

## 4 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

HAPPY BIRTH DAY



இணுவில் கிழக்கு, அங்கலப்பாயைச் சேர்ந்த சிவஸ்ரீ சாம்பசிவ சோமசபேசக் குருக்கள் வடிவாம்பிகை தம்பதியரின் ஏக புத்திரி சிந்துஜா(சிந்து) தனது இல்லத்தில் நான்காவது பிறந்த தினத்தை இன்று (06.12.2012)வியாழக்கிழமை கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, தாத்தா, பாட்டி, மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார், அண்ணன்மார், அண்ணிமார், மச்சான்மார், மச்சாள்மார், தம்பிமார், தங்கைமார், லண்டனில் இருக்கும் தரன் அண்ணா மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் பல்கலையும் பெற்று பல்லாண்டு சீரும் சிறப்புடன் வாழ அன்னை சிவகாமி அம்மனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

ஸ்ரீவித்யா
இணுவில் கிழக்கு,
சுன்னாகம்.
(25365)(5.6)



HAPPY NEW YEAR

இந்தியா, சீனா, பாங்கொக், இந்தோனேசியா போன்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அதி நவீன ஆடை தினுசுகள் 10% விசேட கழிவு
இன்று (06.12.2012) முதல் 31.12.2012 வரை மட்டுமே

நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு அதிநவீன ஆடைத் தெரிவுகளுக்கு.....

# வாணி ரெக்ஸ்

வழங்கும் விசேட கழிவு



இல.81, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
T.P.021 222 5578, Fax: 021 222 9286
(நி/3006)(2. 6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவரையும் கவர்வதற்கு அற்புத வழிகள்

(45)

### நமக்கு எதிரிகள் வேண்டுமா? மிகச் சுலபம்!

'நான் மற்றவனைவிட உயர்ந்தவன்' என்று எண்ணுவது தான் உலகத்திலேயே பெரிய பாவம் என்கிறார் ஒரு பெரிய தத்துவஞானி. நாம் நண்பர்களைச் சம்பாதிப்பது கஷ்டம். ஆனால் எதிரிகளைச் சம்பாதிப்பது மிகமிக சுலபம்.

நாம் வாழ்க்கையில் எவ்வளவு தவறுகளைச் செய்கிறோம்? நினைத்துப் பார்ப்பதில்லை. நாம் இரவில் படுத்துத் தூங்குவதற்குமுன் தனிமையில் படுத்து விளக்கை அணைத்து விட்டு அமைதியாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாம் நூற்றுக்கு நூறு சரியாக நடந்து கொள்கிறோமா? இல்லை. நாம் செய்யும் வேலைகளில் 50 சதவிகிதம்கூட வெற்றி பெறுவதில்லை. அப்படியிருக்க, நாம் மற்றவர்களைக் குறை கூறுவானேன்?

தவறு செய்வது மனித இயல்பு. தவறு செய்த ஒருவனைப் பார்த்து, ''நீ செய்திருப்பது மாபெரும் தவறு என்று விரைவில் உறுதிப்படுத்துகிறேன் பார்'' என்று சவால் விட்டால் போதும். அவன் நம் எதிரியாகிவிடுவான். தவறு செய்தவன் அவற்றை உணரும்படி நாம் அவனுக்கு மறைமுகமாக உணர்த்த வேண்டும். சவால்விடக் கூடாது. மற்றவர்கள் முன்னிலையில் தூற்றக்கூடாது. 'நாம் மற்றவர்களுக்கு எதையும் புதிதாகச் சொல்லிக் கொடுக்க முடியாது. மற்றவர்கள் எதையும் புரிந்து கொள்ள நாம் உதவிதான் செய்ய முடியும்' என்கிறார் கலிலியோ, என்ற உலகப் புகழ் பெற்ற தத்துவமேதை.

நாம் மற்றவர்களைவிடப் புத்திசாலியாக இருக்க முயற்சிகள் செய்ய வேண்டும். புத்தகங்களைப் படிக்க வேண்டும். மேதைகள், அறிஞர்கள், வல்லுநர்கள், இலக்கியவாதிகள், நண்பர்கள், விவரம் தெரிந்தவர்கள்- யார் சொன்னாலும் அவைகளைக் கேட்டுப் புதிய விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும். அதே நேரத்தில் நாம் மற்றவர்களை விடப் புத்திசாலிகள் என்று காட்டிக் கொண்டால், ''உனக்கு என்ன தெரியும்? எனக்குத் தெரிந்ததில் கால் பங்குகூட தெரியாது'' என்று தாழ்த்திப் பேசினால் - விரோதிகள் தான் மிஞ்சுவார்கள்.

''எனக்கு ஒன்று தெளிவாகத் தெரியும். அது எனக்கு ஒன்றும் தெரியாது என்பது தான்'' என்ற தத்துவத்தை நாம் மனதில் கொள்ள வேண்டும் என்கிறார் சாக்ரட்டீஸ்.


ஆகையால், மற்றவர்களைப் பார்த்து, ''உனக்கு ஒன்றும் தெரியாது. நீ செய்தது தவறு'' என்று சொல்லக்கூடாது. அப்படிச் சொன்னால் - எதிரிகள் பெருகிவிடுவார்கள். ரஷ்யர்கள் மனோ தத்துவம் மிகத் தெரிந்தவர்கள். ஏதாவது சிறு தவறுகளைச் செய்துவிட்டு, அமெரிக்கா அதைச் சுட்டிக் காட்டுகிறதா என்று கவனிப்பார்கள். அமெரிக்கா ரஷ்யாவைக் குற்றம் சாட்டியதும், அது தன்தவற்றை உடனே ஒப்புக்கொள்ளும்.

ரஷ்யா தன் தவற்றை உணர்ந்து ஒப்புக்கொண்டதே என்று அசந்து போய்விடும் அமெரிக்கா. அமைதியாக அமெரிக்காவுடன் பேசி, அமெரிக்கா செய்திருக்கும் மாபெரும் தவறுகளை அது உணரச் செய்யும். சிறிய மீனைப் போட்டுப் பெரிய மீனைப் பிடிப்பது போன்ற கதை.

யாராவது நம்மைக் குறை கூறினால், எடுத்த எடுப்பிலேயே, 'நான் செய்தது தவறு' என்று சொல்லிவிட்டுக் கதை கூறுபவரைப் பேச வைத்துக் கேட்டால், அவர் போக்கே மாறிவிடும். ''அதனால் என்ன? பரவாயில்லை'' என்று விட்டுக் கொடுத்துப் பேசுவார். மாறாக, ''நீ செய்த தவறுகளை எண்ணிக்கொள்'' என்று சவால் விட்டால் உடனே அவர் நம் எதிரியாக மாறிவிடுவர்.

நாம் ஒரு வேலையை மற்றவர்களிடம் சொல்லும் போது, அதை எப்படிச் செய்ய வேண்டும், எப்படி முடிக்க வேண்டும் என்று வேடிக்கையாகச் சொல்லலாம். சிரித்துக் கொண்டே சொல்லலாம். குழந்தையிடம் சொல்வதைப் போல் தெளிவாகச் சொல்லலாம். மாறாக- ''இதை இப்படிச் செய்! முட்டாள்தனமாகச் செய்யாதே'' என்று கத்தினால், நம்மிடம் வேலை செய்பவன் கூட எதிரியாக மாறிவிடுவான்.

நாம் நண்பர்களுடனோ, நாம் வேலை செய்யும் அலுவலகத்தின் அதிகாரிகளுடனோ, மனைவியுடனோ டென்னிஸ் ஆடுகிறோம் என்று வைத்துக்கொள்ளுங்கள். நாம் டென்னிஸில் மிகவும் தேர்ந்தவர்களாக இருக்கலாம்.



அதற்காக நம்முடன் ஆடுபவர்களை ஒவ்வொரு தடவையும் தோற்கடித்து நமது திறமையைப் பெரிதாகக் காட்டிக் கொள்ளக்கூடாது. சில வேளைகளில் நாம் வெற்றி பெற வேண்டும். சில வேளைகளில் விட்டுக் கொடுத்து, நம்முடன் ஆடுபவர்கள் வெற்றி பெறும்படிச் செய்ய வேண்டும்.

டென்னிஸ் மட்டுமல்ல. எந்த விளையாட்டில் பங்கு கொண்டாலும் நாம் விட்டுக் கொடுத்து நம்முடன் ஆடுபவர்கள் வெற்றி பெற்று மகிழ்ச்சியடையும்படிசெய்ய வேண்டும். கரம் ஆகட்டும், டேபிள் டென்னிஸ் ஆகட்டும், சதுரங்கம் ஆகட்டும், எந்த விளையாட்டிலும் நாம் மற்றவர்களுக்கும் சில வேளைகளில் விட்டுக் கொடுத்து அவர்கள் மகிழ்ச்சியடைவதைக் காண வேண்டும்.

-தமிழ்வாணன்-

(தொடரும்)

# நூல்களை வாசிக்கும் தன்மை மாணவரிடையே அருகி வருகிறது

## வேலணை பிரதேச சபைத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.6

நூல்களை வாசிக்கும் தன்மை மாணவர்களிடையே அருகி வருகிறது. இது மனவேதனைக்குரிய விடயமாகும். இந்த நிலையிலும் வேலணையூரைச் சேர்ந்த ஓய்வு பெற்ற சிரேஷ்ட ஆசிரியரும் சமாதான நீதிவானுமாகிய ச.மாணிக்கவாசகர் எழுதிய ''வேலணை ஒரு வரலாற்று அறிமுகம்'' நூல் வரலாற்றில் பிரசித்தி பெற்றதாகும்.

இதனை சிறியோர் முதல் பெரியோர் வரை கற்றுத் தேற வேண்டும் என்று வேலணை பிரதேச சபைத் தலைவர் சி.சிவராசா தெரிவித்தார்.

தேசிய நூலக வாசிப்பு மாதத்தையொட்டி வேலணை பிரதேச சபையின் தேவா அரங்கில் மாணவர்களுக்கான பரிசளிப்பு விழாவும் மாணவர் விருது வழங்கும் நிகழ்வும் அண்மையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே சிவராசா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-


வேலணையில் கடந்த காலங்களில் பேர் சொல்லக்கூடியவர்கள் வாழ்ந்தார்கள். ஏதோவொரு விடயத்தில் காலத்துக்குக் காலம் மேலோங்கி இருந்தார்கள். இரண்டாயிரம் ஆண்டு வரலாற்றைக் கொண்ட இந்தக் கிராமத்தின் வரலாற்றை மக்கள் பார்வைக்கு வைத்த மகான் மாணிக்கவாசகர் என்றால் மிகையாகாது என்றார்.

தொடர்ந்து வேலணைப் பிரதேச சபைச் செயலாளர் செ.ரமேஷ் உரையாற்றும் போது தெரிவித்ததாவது:-

வேலணையின் மகத்துவத்தை வெளிக்கொணர்ந்த பெருமை மாணிக்கவாசகரையே சாரும். இவ்வாறே இந்த மண்ணில் அவருடைய பிள்ளைகளும் பெருஞ்சேவைகளை ஆற்றி வருகின்றனர் என்றார்.

இந்த நிகழ்வில் நூலகர் எஸ்.வித்தியா, சிரேஷ்ட சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி பு.பாலசுப்பிரமணியம் ஆகியோரும் உரையாற்றினர்.

(எ-50)



மட்டுவில் வடக்கைச் சேர்ந்த பொன்னையா தெய்வேந்திரம் தீவு முழுவதுக்குமான சமாதான நீதிவானாக அண்மையில் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி பீ. லெனின் குமார் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துள்ளார். இவர் சாவகச்சேரி அஞ்சல் அலுவலகத்தில் முதலாம் தர அஞ்சல் அதிபராகக் கடமையாற்றி இளைப்பாறியவராவார். (ம-9)

## குழுப்பாடல் போட்டியில் வென்ற பாடசாலைகள்

வலி.வடக்கு,டிசெ.6

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற ஆங்கில தினத்தையொட்டிய குழுப் பாடல் போட்டியில் வெற்றிபெற்ற பாடசாலைகளின் விவரம் வருமாறு:-

**தரம் 6-9**

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி.

**தரம் 10-13**

உடுவில் மகளிர் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, இளவாலை கன்னியர் மடம் ம.வி. (எ-86)

# ஈழத் தமிழர் வரலாற்று ஆவணங்கள் பாதுகாக்கப்படவேண்டியது அவசியம்

## கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் உரை

அச்சுவேலி,டிசெ.6

ஈழத்தமிழர் வரலாறு ஆவணங்களாக பாதுகாக்கப்பட்டு எதிர்காலச் சந்ததிக்குக் கையளிக்கப்பட வேண்டும்.

இந்த விடயத்தில் பெரும்பான்மை இனத்தின் வரலாறுகள் இலக்கியம் சார்நிலையில் பாதுகாக்கப்பட்டு வருவதோடு, பக்கச்சார்பான நிலையில் அமைந்திருப்பதையும் காணக்கூடியதாக உள்ளது. தமிழர் வரலாறு புறந்தள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு கூறினார் கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன்.

நீர்வேலி தி.மயூரகிரி சர்மாவின் 'அபிராமியின் காதலன்' வரலாற்று குறுநாவலின் வெளியீட்டுவிழா திருமுருகன் திருமண மண்டபத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.குணநாதன் தலைமையில் நடைபெற்றது.

நூலை வெளியிட்டு வைத்த விரிவுரையாளர் தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்ததாவது:-

எமது வரலாறு உண்மைத் தன்மையோடு பாதுகாக்கப்பட்டு எதிர்காலச் சந்ததிக்குக் கையளிக்கப்பட வேண்டும். இந்த விடயத்தில் கடந்த காலங்களில் பெரும் இடைவெளி ஏற்பட்டுள்ளது. அத்தகைய ஒரு நிலை எதிர்காலத்தில் ஏற்படக்கூடாது.

பெரும்பான்மை இனத்தின் வரலாறு பக்கச்சார்பான நிலையில் கூறப்பட்டிருப்பதையும் அதில் தமிழர் தொடர்பான அம்சங்கள் புறக்கணிக்கப்பட்டிருப்பதையும் கண்டுகொள்ள முடிகின்றது.

தமிழர்களின் உண்மையான வரலாறு இலக்கியங்கள் ஊடாகவும் எடுத்துக் கூறப்படலாம். இந்த வகையில் 'அபிராமியின் காதலன்' குறுநாவல் கணிசமான பங்களிப்பை செய்துள்ளது.

யாழ்ப்பாண அரசர் காலத்தில் வாழ்ந்த சங்கிலியனின் சகோதரன் பரநிருபசிங்கனை கதையின் தலைவனாகக் கொண்டு எழுதப்பட்டுள்ள இந்தக் குறுநாவல் யாழ்ப்பாண அரசர் கால வரலாற்றையும் எடுத்துக் கூறுகின்றது.-எனக் கூறினார்.

(ம-11)

## சமாதான நீதிவான்கள்



கலைநகர், வட்டு - வடக்கு, சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகசிங்கம் விமலதாசன் அண்மையில் மல்லாகம் நீதிமன்றில் நீதிபதி எச்.எம்.எம். பசீல் முன்னிலையில் சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் கொழும்பு சி.சி.த.க. பாடசாலை, வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர் ஆவார்.

சிறந்த சமூக சேவையாளரான இவர் கலைநகர் விளையாட்டுக்கழகம், கலைநகர் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் ஆகிய வற்றின் ஸ்தாபகர்களில் ஒருவரும் ஆவார். (ம)

* * *

அச்சுவேலி,டிசெ.6



ஆவரங்கால் மேற்கு இராச வீதியைச் சேர்ந்த இளையதம்பி சந்திரன் அகில இலங்கை சமாதான நீதிவானாக நீதி அமைச்சால் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கடந்த வாரம் மல்லாகம் மாவட்ட நீதிவான் எச்.எம்.எம். பசீல் முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

சிரேஷ்ட சிறாப்பராக கடமையாற்றி ஓய்வுபெற்ற இவர் கோப்பாய்த் தொகுதிக்கான வன்னியசிங்கம் நற்பணி மன்றத்தின் தலைவருமாவார். (ம-11)

# உரையாடல் போட்டி முடிவு

வலி.வடக்கு,டிசெ.6

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற ஆங்கில தினப் போட்டியில் மாணவர்களுக்கான உரையாடல் போட்டியில் வெற்றி பெற்ற பாடசாலைகளின் விவரம் வருமாறு:-

தரம் 3-5- உடுவில் மகளிர் கல்லூரி, மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாலயம், மல்லாகம் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி வித்தியாலயம்,

தரம் 6-9- உடுவில் மகளிர் கல்லூரி, சித்தங்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாலயம், பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை.

தரம் 10-13- வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி. (ம-86)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789, 021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை சுஜாதன்' கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## நல்லிணக்கம் என்பதன் அர்த்தம் தான் என்ன?

நல்லிணக்கம் என்ற சொல்லை இலங்கை அரசு இன்னும் சரிவரப் புரிந்துகொள்ளவில்லை என்பது அதன் செயற்பாடுகளில் வெளித்தோன்றி வருகிறது. தமிழர் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான முதற்படியாக இன நல்லிணக்கத்தை ஏற்படுத்துமாறு ஐ.நா. சபையும் சர்வதேசமும் இலங்கை அரசை தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றன. அடிக்கடி இது குறித்துக் கருத்துக்கள், தகவல்கள் ஊடகங்களிலும் வெளியாகிவருகின்றன.

இன நல்லிணக்கம் குறித்தே இப்போது அதிக அளவில் பேசப்படுகிறது. நீண்டுசெல்லும் தமிழர் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான முதற்படி இந்த இன நல்லிணக்கமே. அதைக் கூடச் செய்யமுடியாமல் திண்டாடிவருகின்ற இலங்கை அரசு, தமிழர் பிரச்சினைக்கான தீர்வை எப்படித் தரப்போகிறது என்ற கேள்வி இப்போது சாதாரணமாகவே எழுகின்றது. அந்த அளவுக்கு அரசின் நடவடிக்கைகள் அமைந்திருக்கின்றமையே காரணம்.

இந்த நல்லிணக்கம் குறித்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனும் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் எடுத்துரைத்திருக்கின்றார். ''அழிக்கப்பட்டுள்ள இந்து, கிறீஸ்தவ, இஸ்லாமிய வழிபாட்டுத் தலங்களை கட்டியெழுப்புவதை விடுத்து வடக்கு - கிழக்குப் பகுதிகளில் புத்த விகாரைகளைக் கட்டுவதால் மட்டும் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்திவிட முடியாது. இனங்களுக்கிடையில் உண்மையான நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமானால் அங்கு அனைத்து விடயங்களிலும் சம பங்கீடு அவசியம்'' என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் தனது உரையில் வலியுறுத்தியிருக்கின்றார்.

நல்லிணக்கம் என்பது என்னவென்று புரியாமல் அரசு தமிழர் தாயகப் பகுதிகளில் பல்வேறு அராஜக நடவடிக்கைகளை அரங்கேற்றிவருகிறது. தமிழருடன் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்துமாறு சர்வதேசம் தொடர்ந்தும் வலியுறுத்துகின்ற போதும் அதைக் காதில் போட்டுக்கொள்ளாமல் செயற்படுகிறது இலங்கை அரசு. தொடர்ந்தும் தமிழர்களுடன் மோதல் போக்கை வளர்க்கும் நடவடிக்கைகளிலேயே அரசு ஈடுபட்டு வருகின்றதே தவிர, நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சிகளில் அது கிஞ்சித்தும் அக்கறை காட்டவில்லை. அண்மைக் கால சம்பவங்கள் இதற்கு நல்ல உதாரணம்.

தமிழர் போராட்டத்துக்காகத் தமது உயிர்களைத் தியாகம் செய்த மாவீரர்களை நினைவுகூர விடாமல் தடுத்து நிறுத்திய அரச படைகள், அதே தினத்தில் கொண்டாடப்படும் கார்த்திகை விளக்கீட்டையும் மக்கள் செய்ய முடியாதவாறு தடைகளை ஏற்படுத்தியதுடன், கார்த்திகை தீபங்களை காலால் மிதித்து அவமானப்படுத்தின. அத்துடன் இந்த நிகழ்வுகளை அனுஷ்டித்த பல்கலைக்கழக மாணவர்களை தாக்கியதுடன் அவர்களது அமைதிப் போராட்டத்தையும் இரும்புக் கரம் கொண்டு அடக்கியிருந்தன. இந்தச் சம்பவங்களின் தொடர்ச்சியாக மாணவர்கள் பலர் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். அதே வேளை தாயகப் பகுதியில் பல இடங்களில் தமிழர்களின் நிலங்கள் அபகரிக்கப்படுகின்றன. எந்தவித அனுமதிகளுமில்லாமல் கண்டபடி புத்தர் சிலைகள் வைக்கப்படுகின்றன.

இவ்வாறு தொடர்ச்சியாகத் தமிழ் மக்களை வெறுப்பேற்றும் செயல்களிலேயே இலங்கை அரசும் அதன் படைகளும் செயற்பட்டு வருகின்றன. இவையெல்லாம் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு மாறாக இனங்களுக்கிடையிலான விரிசலை மென்மேலும் அதிகரிக்கச் செய்வனவாகவே அமையும் என்பதை அரசு இன்னும் புரிந்து கொள்ளாமல் இருப்பது தான் ஏன் என்று தெரியவில்லை. அல்லது இவையெல்லாவற்றையும் தெரிந்துகொண்டு தான் அரசு இந்தக் கைங்கரியங்களில் ஈடுபடுகின்றதா என்றும் சிந்திக்கத் தோன்றுகின்றது.*

இனங்களுக்கிடையில் சமாதான சகவாழ்வை ஏற்படுத்துவதும் அந்த இனங்களின் உரிமைகளை சமமாக மதித்து சுதந்திரமாக செயற்பட அனுமதிப்பதுமே இன நல்லிணக்கம் என்ற வரையறைக்குள் அடங்குகின்றன. இவற்றைப் புரிந்துகொள்ளாமல் அரசோ இனங்களுக்கிடையே பகைமையை வளர்க்கும் செயற்பாடுகளையே அதிகம் மேற்கொள்கிறது. ஏன் இந்த கொலைவெறி?

# இன்றைய அரசு எதிர்நோக்கும் சவால்கள்

செஞ்சடையோன்

இலங்கையில் தேசிய இனப் பிரச்சினை காரணமான மூன்று தசாப்தகால யுத்தம் முடிவுற்று மூன்றரை வருடங்கள் கழிந்துவிட்டன. அதேவேளை, மஹிந்த சிந்தனையின் கீழான பேரினவாத ஆளும் வர்க்க ஆட்சியானது ஏழு ஆண்டுகளைக் கடந்து எட்டாவது வருடத்தினுள் புகுந்து நிற்கின்றது. இவ் ஆட்சியும், அதன் தலைவரான மஹிந்த ராஜபக்ஷவும், அவரது சகோதரர்களும் இறுதி யுத்த வெற்றி மமதையிலிருந்து இன்னமும் மீளவில்லையெனக் கருத முடிகிறது.

அதனைத்தாம் மட்டுமன்றி, பெரும்பான்மையான சிங்கள மக்களுக்கும் தொடர்ந்து ஊட்டியவாறே ஆட்சியைத் தொடர்கின்றனர். ஓரிரு பதவிக் காலத்துடன் மட்டுமன்றி, தொடர்ந்து தமக்குப் பின்னரும் தமது தலைமுறையினர் ஆட்சி அதிகாரத்தில் தொடர்வதை உறுதிப்படுத்துவதாகவே, காரியங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அதன் அடிப்படையிலேயே அரசமைப்பில் 18 ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டது.

தமது அரசமைப்பின் மூலம் ஆணைப் பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும் மாற்றமுடியாத ஒன்றைத் தவிர, மற்றெதனையும் நிறைவேற்றிக் கொள்ளலாம் என்ற ஜே.ஆரின் பொன்மொழியை, இப்போது ஜனாதிபதி அதனையும் மாற்றிக் காட்டுவேன் என முனைந்து நிற்பதைக் காணமுடிகிறது. தமக்குள்ள நிறைவேற்று அதிகாரத்தின் உச்சத்தைக் கொண்டு சட்டவாக்கத்துறையை மட்டுமன்றி, நீதித்துறையையும் ஆட்டிப்படைக்க முடியும் என்ற நிலைக்கே இப்போது வந்துள்ளனர். இதுவரை ஒன்றன்பின் ஒன்றாக நேரடியாகவும் மறைமுகமாகவும் அடித்து வீழ்த்தி தம்முன்னே அடிபணியவைத்துவந்த நடைமுறை இன்று உயர்நீதிமன்ற நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணையாக வடிவெடுத்து நிற்கிறது. எவரும் கேள்வி கேட்க முடியாத ஒரு காலத்தை நோக்கி நாடு இழுத்துச் செல்லப்படுகிறது. அன்று ஜார் மன்னன் ஆட்சி செய்த ரஷ்யாவில் நிலவிய 'இம்மென்றால் சிறைவாசம், ஏன் என்றால் வனவாசம்' என்ற சர்வாதிகார நிலை நம் நாட்டில் மேலும் அதிகரித்து வரும் போக்கையே அவதானிக்க முடிகிறது.

இத்தகைய சர்வாதிகாரத்தை ஏற்கனவே வடக்கு, கிழக்கின் தமிழ் மக்கள் அனுபவித்து வந்துள்ளனர். ஆனால் அந்த நிலை முடிவுற்று விட்டது எனச் சிலர் கதைகூற முற்படுகின்றனர். ஆனால் மஹிந்த சிந்தனை அரசானது ஒரு கையில் பௌத்த சிங்களப் பேரினவாதத்தையும், மறுகையில் இராணுவ மயப்படுத்தப்பட்டுவரும் ஆளும் அதிகாரத்தையும் கொண்டு நாட்டின் அனைத்து மக்களையும் வெவ்வேறு தளங்களின் ஊடாக ஒடுக்கி வருவதைக் காணமுடிகிறது. அதன் வழியிலேயே தமிழ் மக்கள் கொடிய பேரினவாத ஒடுக்குமுறைக்குத் தொடர்ந்தும் முகம் கொடுக்கவேண்டியவர்களாக இருந்து வருகின்றனர்.

இந்த நாடு பல்தேசிய இனங்களைக் கொண்ட நாடு அல்ல. அது பௌத்த சிங்களவர்களுக்குரிய நாடு மட்டுமே என்ற நிலை நோக்கி வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் பேரினவாதப் போக்கு நகர்த்தப்பட்டவாறே விடயங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

குறிப்பாக, வடக்கு, கிழக்கை மையமாக வைத்தே சகல விடயங்களும் முன்னெடுக்கப்படுகின்றன. பேரினவாதிகளான சகல சிங்களக் கட்சிகளும் வடக்கு, கிழக்கைத் தமது பேரினவாத நோக்கங்களுக்கு ஏற்ப மாற்றியமைத்து வருவதை ஆதரிக்கிறார்கள்.

விகாரைகள், பௌத்த தூபிகள் போன்றன தமிழ்ப் பகுதிகளில் அமைக்கப்படுகின்றன. தமிழ்ப் பகுதி நிலங்கள் சுவீகரிக்கப்பட்டு வருவதுடன் மீன்பிடி, விவசாயம், சிறு தொழில் துறைகளைக் [illegible] வகையில் குடியேற்றங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. அவற்றுக்கு ஏற்ற வகையில் ஆளுநர்கள், அரச அதிபர்கள், சிங்கள உயர் நிலை அதிகாரிகள் நியமிக்கப்படுகின்றனர். இது ஏற்கனவே கிழக்கில் பூரணப்படுத்தப்பட்டுள்ள நிலையில், இப்போது வடக்கு நோக்கித் திருப்பப்பட்டுள்ளது. நாட்டின் சகல பிரதேசங்களும் சகல இனத்தவர்களுக்கும் சொந்தமானது என்றும், எவ்வினத்தவரும் நாட்டின் எந்தவொரு பகுதிக்கும் தனி உரிமை கொண்டாட முடியாது எனவும் கூறியே வடக்கு, கிழக்குக்கு உயர் அதிகாரிகள் தமிழ்ப் பகுதிகளில் நியமிக்கப்படுகிறார்கள். அது நியாயமான தர்க்கம் என எடுத்துக்கொள்ளமுடியுமா என்பது சிந்திக்கப்பட வேண்டியதாகும். இன ஒடுக்குமுறையற்ற ஒரு ஜனநாயக சூழலில் எவ்வினத்தவரும் நாட்டின் எப்பாகத்திலும் பணியாற்ற முடியும்.

இன முரண்பாடு தாழ்நிலையில் இருந்து வந்த காலத்தில் தமிழ், சிங்கள அதிகாரிகள் தென்னிலங்கையிலும் வடக்கு, கிழக்கிலும் எவ்வித எதிர்ப்பும் இன்றிப் பணிபுரிந்துவந்தமை நினைவூட்டத்தக்கதாகும். ஆனால் ஐம்பதுகளின் பின்னர் பேரினவாத ஒடுக்குமுறை வளர ஆரம்பித்த சூழலில் சிங்கள உயர் அதிகாரிகள் தமிழ்ப்பகுதிகளில் திட்டமிட்ட உள்நோக்கங்களுடன் நியமிக்கப்பட்டனர். அவர்களின் ஊடாக இனப்பாகுபாடு, மொழிப்புறக்கணிப்பு, பிரதேசங்களில் திட்டமிட்ட குடியேற்றங்கள் என்பன இடம் பெறலாயிற்று. அவை பேரினவாத ஒடுக்குமுறையாக வளர்ச்சி பெற்றதுடன் இராணுவமயப்படுத்தலுக்கும் உள்ளாகின. தமிழ்த் தேசிய இனம் எதிர்நோக்கிய தேசிய இனப் பிரச்சினையின் தீர்வுக்கு அரசியல் அடிப்படையில் நியாயமான வழிமுறைகளில் தீர்வு காணப்படுவது ஆளும் தரப்புகளால் மறுக்கப்பட்டே வந்துள்ளது.

அதன் எதிர் விளைவே தமிழ் மக்கள் மத்தியிலான அஹிம்சை - ஆயுதப் போராட்டங்களாகப் பரிணமித்தன. அதுவே முப்பது வருட போராட்டத்தைக் கொண்டது. வரலாற்றை நேர்மையுடன் திரும்பிப் பார்த்துக் கூறுவதானால், பேரினவாத இராணுவ ஒடுக்குமுறை, போர் என்பன தமிழ் மக்கள் மீது திட்டமிட்டே திணிக்கப்பட்டது என்பதில் ஐயம் எதுவும் இருக்கமுடியாது. இதனை ஆரம்பித்து வழிநடத்துவதில் ஜே.ஆர்.முன்னின்றார் என்றால் அதனை உச்சத்திற்கு வழிநடத்தி பேரினவாத இராணுவ வெற்றியை வென்றெடுப்பதில் இன்றைய ஜனாதிபதி முன்னின்றார். அதனால் அவர் புலிகளைத் தோற்கடித்த - பயங்கரவாதத்தைத் தோற்கடித்த முடியையும் சூட்டிக்கொண்டார்.

இத்தகைய வெற்றியை நன்கு பயன்படுத்தி முழு நாட்டின் பொருளாதாரத்தையும் நவகாலனியப் பொருளாதாரமாக மாற்றி அமைத்த பாதையில் இன்றைய ஜனாதிபதி ஐக்கிய தேசியக் கட்சியையும் தாண்டிச் சென்றுகொண்டிருக்கிறார். தமது ஆட்சிக்குரியவற்றையும் தமக்குரியவற்றையும் நிறைவேற்றிக்கொள்வதற்குரியவிதமாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மிகவும் கச்சிதமாகச் செயற்பட்டு வருகிறார். அவரது பொருளாதார நிபுணர்களும், அரசியல் ஆலோசகர்களும், அமைச்சரவையில் உள்ளோரும், உருவாக்கும் பொருளாதார அரசியல் சமூகப் பண்பாட்டுக் கொள்கைகளும் அவற்றின் நடைமுறைகளும் நாட்டைத் தொடர்ந்தும் குட்டிச் சுவராக்கும் பாதையிலேயே இட்டுச் சென்றுகொண்டிருக்கிறது என்பதை அண்மையில் முன்வைக்கப்பட்டு விவாதிக்கப்பட்டு வரும் அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் துலாம்பரமாக வெளிக்காட்டி நிற்கிறது.

இதன்மூலம் பெரும்பான்மையான நாட்டின் உழைக்கும் மக்கள் கடுமையான பொருளாதார நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ளனர். இவர்களில் சிங்கள உழைக்கும் மக்களே பெருமளவிலானவர்களாக உள்ளனர். இதுவரை காலமும் போரின் மீது கவனத்தைத் திருப்பித் தமிழ் மக்களை எதிரிகளாகச் சித்திரித்து அவர்கள் மீது போரைத் திணித்துவந்த மஹிந்த சிந்தனை அரசு, இப்போது சிங்கள மக்களுக்குப் பதில் கூறவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. தெற்கிலே ஒன்றன்பின் ஒன்றாக அரசதுறையினர் சம்பள உயர்வுக் கோரிக்கை உட்பட ஏனைய கோரிக்கைகளை முன்வைத்து வீதியில் இறங்கியுள்ளனர்.

அண்மையில் முடிவுற்றுள்ள பல்கலைக்கழக ஆசிரியர்களது நூறு நாள் நீட்சிபெற்ற பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டம் இந்த அரசின் முகத்திரையைக் கிழித்து உண்மை உருவத்தை வெளிப்படுத்தியுள்ளது. அதேவழியில் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் போராட்டத்தில் குதிக்கத் தயாராகி வருகிறார்கள்.

ஏற்கனவே அரச மருத்துவர்கள் அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தனர். அரச தாதிகள் கோரிக்கைகளை வைத்துள்ளனர். பல்கலைக்கழக ஆசிரியர்கள் மீண்டும் போராடுவதற்குத் தயாராகின்றனர் என அறிவித்துள்ளனர். மாணவர்கள் தனியார்மயப்படுத்தலை எதிர்த்து வீதியில் இறங்கி நிற்கின்றனர். மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் அடுத்து வரவுள்ள கூட்டு ஒப்பந்தத்தில் வாழ்க்கைச் செலவுக்குரிய சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் என்ற ஆரம்பக் கோரிக்கை வெளியேவர ஆரம்பித்துள்ளது. அவ்வாறே விவசாயிகள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளைத் திசை திருப்புவதற்கு ஒரு கிலோ நெல்லுக்கு ரூபா 35 நிர்ணய விலை வரவு செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்டது.

அத்துடன், வழமையான மானியம் வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவற்றின் மூலம் விவசாயிகளுக்கு ஏதோ பெரு நன்மைகள் கிடைக்கப்போவதாக அமைச்சர்கள் குரல் எழுப்பி வருகிறார்கள். ஆனால் விவசாயிகளின் பிரச்சினைகள் வடக்கிலும், கிழக்கிலும், தெற்கிலும் மோசமடைந்த வண்ணமே உள்ளன. விவசாயப் பிரதேசங்களுக்குச் சென்றாலே அவற்றின் இன்றைய நிலைமையைக் கண்டுணரமுடியும். ஏற்கனவே பொலன்னறுவை விவசாயிகள் வீதிக்கு வந்து நெல் மூடைகளை வீதியில் கொட்டிப் போராட்டம் நடத்தியமையை நாடறியும். இவ்வாறான நிலையில் மஹிந்த சிந்தனை அரசு, நாளாந்தம் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வருவதைக் காணமுடிகிறது. இவற்றில் இரண்டு விடயங்கள் இன்றைய சூழலில் முக்கியத்துவம் பெறுகின்றன. இன்று தேசிய இனப்பிரச்சினையின் தீர்வின்மையும் அதனோடு சம்பந்தமுடைய பலதரப்புக் கேள்விகளுக்குப் பதிலிறுக்க வேண்டிய கட்டாயத்திற்குள் வந்துநிற்கிறது. அதே வேளை, தற்போது நீதித்துறைக்கும் சட்டவாக்கத்துறைக்கு மிடையிலான முரண்பாடும் - முறுகலும் உச்சத்திற்குச் சென்றுள்ளது. இதனால் அரசும் ஜனாதிபதியும் பல்வேறு நிலைகளில் கேள்விகளுக்கும் நியாயம் கோரல்களுக்கும் பதிலிறுக்க வேண்டியவர்களாகவே இருந்து வருகின்றனர்.


அதேவேளை, மஹிந்த அரசு அமெரிக்கா, மேற்குலகநாடுகளுடன் முரண்பட்டு நிற்பதுபோலக் காட்டி நிற்கிறது. ஆனால் அதில் பெருமளவுக்கு உண்மை இல்லை. அமெரிக்க, மேற்குலக நிதி முகவர்களும் பொருளாதாரக் கொள்கை வகுத்து ஆலோசனை வழங்குபவர்களான சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவைகளே வரவு - செலவுத்திட்ட ஆலோசகர்களும் வழிகாட்டிகளுமாவர்.

அவர்களைக் கட்டி அணைத்து ஆலோசனை பெறும் மஹிந்த அரசு எவ்வாறு முற்போக்கானதாக இருக்கமுடியும்? இந்நிலையில் அபிவிருத்தி என்றும், சலுகை வழங்கல் என்றும் மக்கள் மத்தியில் நாடகமாடிவரும் அரசினால் உழைக்கும் மக்களுக்கு எவ்வாறு உதவ முடியும்? எனவே, மேலும் மேலும் நெருக்கடிகளையும் பிரச்சினைகளையும் எதிர்நோக்க வேண்டிய கட்டாயத்திற்குள் அரசு தள்ளப்பட்டே வருகிறது. இவற்றுக்கு அரசு, மக்கள் எதிர்பார்க்கும் தீர்வுகள் எதையும் வழங்கமாட்டாது. அதற்குப் பதிலாகத் தானே கட்டி வளர்த்து வந்துள்ள ஆயுதப்படைகளையே பயன்படுத்துவதைத் தவிர வேறு வழி கிடையாது. அது அப்பட்டமான பாசிச சர்வாதிகாரமாகவே இருக்கும் என்பதில் ஐயம் எதுவும் இருக்கமுடியாது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்புளுவென்சா (Influenza H1N1)

## நோயிலிருந்து உங்களைப் பாதுகாப்பது எப்படி?




வைத்திய கலாநிதி
■ ஆர்.தெய்வேந்திரன்

இன்புளுவென்சா என்பது புளு (flu) காய்ச்சல் போன்ற நோயாகும். இந்த நோய் ஒருவரிலிருந்து இன்னொருவருக்கு மூக்கிலிருந்து வெளியேறும் சளி மற்றும் இருமும் போதும் வெளியேறும் கிருமிகள் மூலம் தொற்றுகிறது. இந்த நோய் முன்னர் பன்றிக் காய்ச்சல் என்றழைக்கப்பட்டது. ஆயினும் இந்த நோய் பன்றிகளிலிருந்து தொற்றுவதில்லை என்ற காரணத்தால் இப்பொழுது 'பன்றிக்காய்ச்சல்' என்றழைக்கப்படுவதில்லை. இது ஒரு புதிய வகை வைரஸ் கிருமியினால் ஏற்படும் நோய். ஆகையால் பெரும்பாலான மக்கள் இந்த நோய்க்கான எதிர்ப்பு சக்தியைக் கொண்டிருப்பதில்லை. ஆகவே இந்த நோய் மிகவும் வேகமாகப் பரவி வருகின்றது. இது சிறு பிள்ளைகள் மற்றும் இளம் வயதினர் மத்தியில் அதிகமாகப் பரவுகின்றது.

### குணங்குறிகள்

பொதுவாக இது ஒரு சாதாரண நோயாகும். ஆகவே தேவையற்ற பதற்றம் அடையத் தேவையில்லை. பொதுவான குணங்குறிகளாவன

1. காய்ச்சல்
2. தலையிடி
3. உடல்வலி
4. தொண்டை வலி
5. இருமல்
6. மூக்கிலிருந்து சளி வடிதல்
7. சில வேளைகளில் வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கு ஏற்படும்.

இது சாதாரண தடிமன் போன்றது. ஆகவே மற்றைய இன்புளுவென்சா காய்ச்சல் வகைகளிலிருந்து வேறுபடுத்தி இனங்காண்பது கடினமானது. இந்த நோய் சில நோயாளிகளிலிருந்து நியூமோனியா காய்ச்சலாக மாறக்கூடிய வாய்ப்புண்டு. இவ்வாறு நியூமோனியா காய்ச்சலாக மாறுமிடத்து மூச்சுவிடுதல் கடினமாக இருக்கும். மேலும் கடுங்காய்ச்சல் காணப்படும் அல்லது காய்ச்சல் காணப்படாமலும் நோய் கடுமையாகும்.

மேற்கூறிய குணங்குறிகள் காணப்படின் செய்யப்பட வேண்டியவை.

1. குணங்குறிகள் அகலும் வரை நோயாளி படுக்கையில் ஓய்வெடுத்தல்
2. சனநெருக்கடி மிகுந்த இடங்களைத் தவிர்த்தல். இது நோய் பரவுதலைத் தடுக்கும்.
3. போசாக்கு மிகுந்த உணவு வகைகளையும் அதிகளவு நீராகாரங்களையும் உட்கொள்ளுதல்
4. குடும்ப வைத்தியரிடம் குணங்குறிகளுக்கான வைத்திய ஆலோசனை பெறுதல். சாதாரண நோய்க்கு விசேட வைத்திய சோதனைகள் மற்றும் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறுதல் முதலியன தேவையில்லை.
5. சவர்க்காரம் கொண்டு கைகளை அடிக்கடி கழுவுதல்
6. தும்மும்போதும், இருமும் போதும் கைக்குட்டையை உபயோகித்தல், பேப்பர், டிசு உபயோகிப்பின் அதை உரிய முறையில் அகற்ற வேண்டும். எக்காரணம் கொண்டும் கைகளை உபயோகிக்கக்கூடாது. கைகளின் மூலம் மற்றைய இடங்களைத் தொடும் போது இந்த வைரஸ் மற்றைய இடங்களுக்கும் பரவக்கூடும்.
7. அரிதாக சிலரில் இந்த நோய் முற்றி நியூமோனியாவாக மாறக்கூடும் அல்லது வலிப்பு ஏற்படக்கூடும் மேலும் தடுமாற்றம், மாறுபட்ட விழிப்புணர்வு ஏற்படக்கூடும். கீழ்க் காணப்படும் குணங்குறிகள் காணப்படின் வைத்திய ஆலோசனை பெற வேண்டும்.

1. கடும்காய்ச்சல்
2. மூச்சுவிடுதல் கடினமாதல்
3. மாறுபட்ட விழிப்புணர்வு
4. குணங்குறிகளின் கடுமை அதிகரித்தல்
5. உடல் சோர்வு

### இந்த நோய்க்கு சிகிச்சை உண்டா

இந்த நோய் பற்றிய ஆய்வுகள் நோய் முற்றிய நோயாளிகளுக்கும் நோய் ஆபத்து சாத்தியக்கூறுகள் அதிகமானவர்களுக்கும் மட்டுமே அவசியமாகும். ஆகவே எவரும் பதற்றப்படவோ வைத்திய சோதனைகள் செய்ய வேண்டிய அவசியமில்லை. இந்த நோய் கடுமையாகுமிடத்து அதை எதிர்கொள்ள தேவையான வளங்களும் மருந்துகளும் நம் நாட்டில் உண்டு. ஆகவே இதைக் குறித்து கவலையடையத் தேவையில்லை.

### அதிக கவனம் எடுக்க வேண்டியவர்கள் யார்?

கடுமையாக நோய் வாய்ப்படக்கூடிய சாத்தியக்கூறுகள் அதிகம் உள்ளவர்கள்

1. 2 வயதுக்கு உட்பட்டவர்கள்
2. 65 வயதுக்குமேற்பட்டவர்கள்
3. கர்ப்பிணிகள்
4. நீரிழிவு, ஆஸ்மா, சிறுநீரக நோய், புற்றுநோய், உள்ளவர்கள் பிரட்னிசலோன் (prednisolone) மருந்து நீண்ட காலமாக பாவிப்பவர்கள்.

நீங்கள் மேற்குறிப்பிட்ட குழுவைச் சேர்ந்தவராயின் அதிக கவனம் எடுக்க வேண்டும்.

### இந்த நோயிலிருந்து பாதுகாப்பது எப்படி

1. சன நெருக்கடி மிகுந்த இடங்களைத் தவிர்த்தல்
2. சவர்க்காரம் கொண்டு அடிக்கடி கை கழுவுதல்
3. வாய் மற்றும் மூக்கு பகுதிகளை தேவையின்றி தொடுவதை தவிர்த்தல்
4. மூக்கால் நீர்/சளி வடியும் நோயாளிகளிடமிருந்து குறைந்தது 1 மீற்றர் தூரம் தள்ளி நிற்றல்
5. வீடுகளிலும் அலுவலகங்களிலும் ஜன்னல்களைத் திறப்பதன் மூலம் காற்றோட்டத்தை அதிகரிக்கச் செய்தல்
6. மாஸ்க் உபயோகிப்பின் மூக்கையும் வாயையும் மூடக்கூடிய சரியான முறையில் அணியப்பட வேண்டும். தவறான உபயோகம் நோய் தொற்றும் சாத்தியக்கூறுகளை அதிகரிக்கும். நோய் தொற்றுதலை தவிர்க்க ஒரு சுகதேகி மாஸ்க் அணிவதை பார்க்கிலும் நோயாளி நோய் பரவுதலைத் தடுக்க மாஸ்க் அணிவது சிறந்தது. ★

---

# தேவை கொஞ்சம் பொறுமை



■ ராஜராஜன்

"பொறுத்தார் பூமி ஆள்வார்" என்பது எவரோ, எப்போதோ சொன்னதொரு முதுமொழியென்பது நினைவுக்கு வருகின்றது.

பொறுமையின் சின்னமாக எம்மையெல்லாம் தாங்கி நிற்கும் பூமாதேவியை உருவகப்படுத்துவோரும் உண்டு. திருவள்ளுவர் இதற்கெல்லாம் ஒரு படி மேலே போய் "அகழ்வாரைத்தாங்கும்நிலம் போல....." எனக் கூறி எமக்குப் பொறுமையின் பெருமையை எடுத்துக் கூறிச் சென்றுள்ளார்.

பொறுமை என்பது அனைவருக்குமே தேவையான ஒன்றுதான். ஆத்திரப்படுவதாலோ அல்லது மற்றவர்கள் மீது எரிந்து வீழ்ந்து கோபப்படுவதாலோ பயன் எதுவும் கிடைக்கப் போவதில்லை. மாறாக எமது உடல் நலம் தான் பாதிக்கப்படுகின்றது.

சில வேளைகளில் பொறுமையிழந்து தம்மை மறந்து கொக்கரிக்கின்றவர் மரணத்தைக் கூட எதிர்கொள்கின்றார்.

"எனக்கு இரத்தக் கொதிப்பு அதிகமாகி விட்டது. எண்ணெய், கொழுப்பு பொருள்களை அறவே ஒதுக்கி விட்டேன். மாமிசத்தையும் இப்போது தொடுவதில்லை. தேங்காய்ப்பால், உப்பு என்பன சேர்க்கப்படாத உணவையே எடுக்கின்றேன். மேலும் இந்த நோயைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் பொருட்டு தினமும் பலநூறு மில்லிக்கிராம் மருந்து வகைகளைப்பயன்படுத்தி வருகின்றேன்" இவ்வாறு சிலர் கூறுவார்கள்.

ஆனால் இத்தகையவர்கள் தொடர்ந்து மருத்துவ மனைகள், மருத்துவ நிபுணர்களின் ஆலோசனைக் கூடங்கள், கிளினிக்குகள் என மாறி மாறி அலைவதையும் காணமுடிகிறது. தமது நோயைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் பொருட்டு தமக்கு வேண்டாதவைகளைத் தள்ளிவைத்த இவர்களால், தம்முடன் ஒட்டி உறவாடிக் கொண்டிருக்கும் ஒன்றை மட்டும் உதறித் தள்ள முடிவதில்லை.

இதற்கு ஒரு புது வியாக்கியானத்தையும் இவர்கள் தருவார்கள். (மீசை இல்லாதவனும் கோபம் கொள்ளாதவனும் ஆண் அல்ல)

இதில் எந்த அளவுக்கு உண்மை பொதிந்துள்ளது என்பது ஆண்டவனுக்கே வெளிச்சம்.

ஆனானப்பட்ட துருவாச முனிவரே கோபம் கொள்வதில் உதாரண புருஷராக விளங்கியிருந்தார். நாம் எம்மாத்திரம் என்று கூறி துருவாச முனிவரைத் தமது கோபத்தை நியாயப்படுத்துவதற்குத் துணை சேர்ப்பவர்களும் எம்மிடையே உண்டு.

ஒரு சாரார் மற்றவர்கள் தம்மீது பயம் கலந்த மரியாதை வைத்திருக்க வேண்டும் என்பதற்காகவே எப்போதும் சிடுசிடுவென்ற முகத் தோற்றத்தைக் கொண்டிருப்பார்கள். தாம் சொல்வதும் செய்வதுமே சரியென்ற மனப்பான்மை இவர்களிடத்தில் மேலோங்கி நிற்கும். இதனால் சீக்கிரமே மற்றவர்களைத் தூக்கி எறிந்து விடுவார்கள்.

மேலும் இவர்கள் தமது வீரப்பிரதாபங்களையும் அடிக்கடி அவிழ்த்து விட்டபடியே இருப்பார்கள். "இண்டைக்கு காலையிலை ஒராளுக்கு நல்ல சாப்பாடு கொடுத்திருப்பன். அந்த ஆள் காலில விழுந்து கும்பிட்டதாலை விட்டிட்டன் இனிமேல் சேட்டை விட்டால், சம்பல் தான்"

"இன்னுமொரு ஆள் கனநாளாக சொறி வேலை பார்க்கிறார். நானும் பல தடவை எச்சரிக்கை குடுத்திட்டன் இனிமேல் உந்தாளுக்கு இருட்டடிதான்" இப்படியாக அவரின் வீரப்பிரதாபங்கள் நீண்டு கொண்டே செல்லும்.

"ஆனால் இவரைப் பற்றி இவரது மனைவியிடமே கேட்கும் போது; ஆர் அந்த ஆளே இப்படியெல்லாம் அவிட்டு விட்டவர்? வீட்டிலை எலியை அடிக்க வேணுமெண்டாலும் நான் தான் தடியைத் தூக்க வேணும். இந்த மனிசன் எலிக்குப் பயந்து போய் அந்தப் பக்கமே வரமாட்டார். இருட்டு வந்து விட்டால் மனிசன் வீட்டை விட்டு வெளியிலே எங்குமே போக மாட்டார். அவ்வளவு பயம் அவருக்கு. " இப்படியாக இந்த வீரசூரனின் வீரப்பிரதாபம் வெளியே தெரிய வரும்.

சுமார் 70 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த மனிதன் இன்றில்லை. தேவைகள் குறைவான, இயற்கைக்கு மாசு விளைவிக்காத, இயற்கையோடு ஒட்டி வாழ்ந்த மனிதனே அன்று இருந்தான். அவனது தேவைகள் குறைவாக இருந்ததால் ஆசைகளும் அடங்கிப் போயிருந்தன. மனதில் அழுத்தங்கள் இல்லை. இயற்கையோடு ஒட்டிய வாழ்வு என்பதால் நோய்களும் அணுகவில்லை. கோபம் கொள்வதற்கான தேவைகள் இல்லாததால் பொறுமையைக் காக்க முடிந்தது.

ஆனால் இன்றோ எல்லாமே தலை கீழாக மாறிவிட்டது. இன்றைய மனிதன் பொறுமையை இழந்து நோயைத் தனது உடலில் தாங்கி நிற்கின்றான். எதிலும் அவசரம், எங்கும் அவசரம் என்பதால் மனதிலும், உடலிலும் ஒருவித படபடப்பு. எதையும் பொறுமையுடன் அணுக முடியாத நிலை. இதன் விளைவுகளைத் தனியொரு மனிதன் மட்டுமில்லாது, அவனது குடும்பத்தினரும், அவனைச் சுற்றியிருப்போரும் அனுபவிக்க வேண்டிய அவலம்.

எனவே தான் நாம் இயன்றளவு பொறுமையைக் கடைப்பிடிப்பதன் மூலமாக எவ்வளவோ அனுகூலங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

ஆனாலும் இதிலுமொரு விடயத்தைக் கவனிக்க வேண்டும். பொறுமையையும் அளவோடு கடைப்பிடிக்க வேண்டும் என்பதுதான் அது.

அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகமாறுமல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்பமும் துன்பமும்

மகிழ்ச்சியை விரும்பாத மனமேது?

நீ மகிழ்ச்சியாக வாழத்தான் விரும்புகிறாய்.

ஆனால், உனக்கு இன்பத்தை விடத் துன்பமே அதிகமாக வருகிறது.

உன் நெஞ்சில் துன்பங்கள் நிறைந்து கிடப்பதன் காரணத்தைப் பற்றிச் சற்றுச் சிந்தித்துப் பார்.

உண்மையைச் சொல்லப் போனால், உனக்கு வருகின்ற துன்பங்கள் அனைத்துக்கும் நீயே காரணம்.

**"தீதும் நன்றும் பிறர் தர வாரா"** என்கிறது சங்கத் தமிழ் இலக்கியம்.

இப்பிறவியில் நீ படும் துன்பங்கள் அனைத்திற்கும், முற்பிறவியில் செய்த தீவினைப் பயனே காரணம்.

எல்லாம் மனதில் கொண்டால் துன்பம் உன்னைப் பாதிக்காது.

உன் மனம் விரும்பியபடி, ஒரு செயல் நடந்தால் அது உனக்கு இன்பத்தைத் தருகிறது.

உன் விருப்பத்திற்கு மாறாக ஒன்று நடந்து விட்டால் அது உனக்குத் துன்பத்தைத் தருகிறது.

ஒன்றை யோசித்துப் பார்.

உன் விருப்பப்படி அனைத்தும் நடக்க வேண்டும் என்றால் அது நியாயமா?

அது நடக்கக் கூடிய செயலா?

இருப்பினும் உன் மனம் இன்பத்தையே நாடுகின்றது.

துன்பத்தை வெறுக்கிறது. துவண்டு விடுகிறது.

துன்பம் என்பது இறைவனால் அருளப்பட்ட வரமே என்பதைப் புரிந்து கொள்.

மனிதனுக்குப் பசியும் தாகமும் துன்பத்தைத் தருவன.

ஆனால், உனக்குச் சில நாள்கள் பசியே இல்லை என்றால் நீ மருத்துவரை சந்திப்பது இல்லையா?

ஆகவே, துன்பம் தரக்கூடிய ஒரு விடயம், அது இல்லையென்றாலும் துன்பத்தைத் தருகிறதல்லவா?

அப்படியானால் எது துன்பம்? எது இன்பம்?

ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால் உனக்கு வருகின்ற துன்பம் உன்னால் தான் வருகிறது.

பல துன்பங்களை நீயாகவே தேடிக் கொள்கிறாய்.

இதுதான் உண்மை.

சில நேரங்களில் நீ இன்பம் என்று நினைப்பது கூட, உனக்குத் துன்பத்தைத் தருகிறது.

இனிப்பு வகைகள் சாப்பிடுவது உனக்கு மகிழ்ச்சியைத் தரலாம். ஆனால், அது அளவுக்கதிகமானால், நீரிழிவு நோயாகி உன்னைத் துன்புறுத்துகிறது.

அதே போல், சில நேரங்களில் நீ துன்பம் என்று நினைப்பது கூட இன்பம் தர வல்லது.

கசப்பான ஒரு மருந்தை உண்ணும்போது உனக்குத் துன்பம்.

ஆனால், அந்தமருந்து உன் உடற்பிணியைத் தீர்த்து நலன் தரும்போது இன்பம். நீ இன்பம், இன்பம் என்று எதை எதையோ தேடி ஓடுகிறாய். ஆனால் அது உண்மையான இன்பத்தைத் தருமா என்று சிந்தித்துப் பார்.

செல்வத்தைச் சேர்க்கப் பாடுபாடு பட்டு, கோடி கோடியாய்ச் சேர்க்கின்றாய்.

அதன் பயனை உன்னால் முழுமையாக அனுபவிக்க முடிகிறதா?

வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்த லரிது

என்பது வள்ளுவம்.

நீ நாடுவது இன்பமே, ஆனாலும் அதில் மறைந்திருப்பது தான் துன்பம். உன் வாழ்வில் வருவது துன்பமே என்றாலும் ஒரு நாள் நீ பெறுவது நிலையான இன்பமே.

துன்பத்தைக் கண்டு துவளாதே!'

அது உனக்கு இறைவன் தரும் பரிசு.

இன்பமே உன் வாழ்வில் நிலைத்து விட்டால் இறைவனை நீ நினைக்க மாட்டாய்.

துன்பம் என்று ஒன்று வருவதனால் தான் உனக்கும் அப்பாற்பட்ட ஒரு சக்தி இயங்குகிறது என்று நம்புகிறாய்.

நீ அளவுக்கதிமாகத் துன்பப்படுகிறாய் என்றால் இறைவனின் அருட்பார்வை உன் மேல் விழுந்திருக்கிறது என்று பொருள். உலகில் பிறந்த அனைவருக்கும் துன்பம் வருவது உறுதி. மரணம் துன்பம் இரண்டும் உலக வாழ்வின் நியதி.

துன்பம் வரும்போதுதான் இறைவன் நம் அருகிலேயே இருக்கிறான்.

இறைவன் நம் அருகில் இருக்கிறான் என்று எண்ணிக் கொண்டால் துன்பமும் இன்பமாகும்.



**பரமஹம்ஸ ஸ்ரீமத் பரத்வாஜ் ஸ்வாமிகள்**



# மன்னார் எருக்கலம்பிட்டி முஸ்லிம் மக்களும், அவர்களின் வரலாறும் பாரம்பரியங்களும்



**எஸ்.ஆர்.லெம்பேட்**

கடல் வளமும், நில வளமும் நிரம்பப் பெற்றுள்ள மன்னார் எருக்கலம் பிட்டி கிராமத்தில் முத்துக் குளித்தல், சங்கு குளித்தல் தொழில்களோடு மீன் பிடித்தொழிலும் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது.

தென்னை,பனை, மரமுந்திரி வளத்தையும் அவற்றை மையமாகக் கொண்ட பல தொழில் வளத்தையும் இந்தக் கிராமம் கொண்டுள்ளது.

இந்தக் கிராமத்தின் ஆரம்பக்குடிகள் அரேபிய வர்த்தகர்களினதும் தென்னிந்திய முஸ்லிம்களினதும் பரம்பரையைச் சார்ந்தவர்களாக இருந்து வந்திருப்பதால் இந்தக் கிராமம் மிகவும் அறியப்பட்டதாக இருந்து வந்திருக்கிறது.

தென்னிந்தியாவுக்கும் எருக்கலம்பிட்டிக்குமிடையிலான வர்த்தகத் தொடர்புகளும், பிற தொடர்புகளும் இருந்து வந்திருக்கின்றன.

இந்தக் கிராமத்தில் காலத்துக்குக் காலம் நடந்தேறி வந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகள் பல தென்னிந்தியர்களின் வம்சாவழித் தொடர்பு களைக்கூறும் வரலாற்று நூல்களிலும் இடம் பெற்றி ருப்பதால் அறியப்பட்டதாக உள்ளது.

மார்க்க அறிவைப் பெறுவதற்காக எருக்கலம் பிட்டி மக்கள் பலர் தென்னிந்தியாவுக்குச் சென்று வந்திருந்தாலும் கீழக்கரை, தொண்டி அதிராம் பட்டினம், பெரிய பட்டினம், அம்மா பட்டினம், பாம்பன் பட்டினம் , வேதாளை போன்ற தென்னிந்திய முஸ்லிம்களோடு திருமண உறவுகளும் ஏற்பட்டிருததாலும் இந்தக் கிராமம் மேலும் அறியப்பட்டதாக இருந்து வந்திருக்கிறது.

தென்னிந்தியாவிலிருந்தும், அரேபிய நாட்டிலிருந்தும் மார்க்க அறிஞர்களும், ஆத்ம ஞானிகளும், இறைநேச செல்வர்களும் இந்தக்கிராமத்துக்கு வருகை தந்திருக்கின்றனர். அவர்களின் அடக்கஸ் தலங்களான கபுறடிகள் பல இங்கும், சூழவுள்ள பகுதிகளிலும் அமைந்திருப்பதாலும் இதன் தொன்மையை நன்கு விளங்க முடிகிறது.

தென்னிந்தியாவிலிருந்தும், அரேபிய நாட்டிலிருந்தும் மார்க்க அறிஞர்களும், ஆத்ம ஞானிகளும், இறைநேசச் செல்வர்களும் இந்தக் கிராமத்துக்கு வருகை தந்திருக்கின்றனர். அவர்களின் அடக்க ஸ்தலங்களான கபுறடிகள் பல இங்கும், சூழவுள்ள ப்குதிகளிலும் அமைந்திருப்பதாலும் இதன் தொன்மையை நன்கு விளங்க முடிகிறது.

இந்த ஊர் மக்கள் அயலிலிருந்து முஸ்லிம் கிராமங்களுடனும் கிறிஸ்தவ, இந்து சமூகப் பழக்க வழக்கங்கள் பல இந்தக் கிராமத்தின் பழக்கவழக்கங்களோடு பின்னிப் பிணையும்அளவுக்கு அன்னியோன்னியமாகப் பழகி வருகிறார்கள். எருக்கலம்பிட்டிக் கிராமம் மன்னார் தீவின் வடக்கில் ஒரு குடாநாடு போன்று அமைந்துள்ளது.

இதன் வடபுறம் பாக்கு நீரிணையின் ஓர் அந்தமாகவும், கிழக்குப் புறம் மன்னார் குடாக்கடலின் ஒரு கரையாகவும் அமைந்திருக்கின்றது. தென் புறத்தில் உள்ளாறு அமைந்திருக்கின்றது. இக்கிராமத்தின் மேற்குப் புறம் மன்னார்தீவின் எஞ்சிய நிலப்பரப்புடன்தொடர்புடையதாகவுள்ளது. ஏறக்குறைய 4 மைல் நீளமான கடற்கரை இந்தக் கிராமத்தைச் சுற்றிக்காணப்படுகிறது.

இந்தக் கிராமத்தின் வடபுறத்தில் தென்னை,பனை ஆகியன செழித்து வளர்கின்றது. கிழக்குப்புறத்திலுள்ள நிலப்பரப்பில் பருத்தி,எள்ளு,குரக்கன்,சாமை,வரகு, சோளம் போன்ற தானியங்கள் விளைவிக்கப் பட்டுவந்த புன்செய் நிலமாக இருந்து வந்திருக்கின்றன.

ஒவ்வாத காலநிலையின் காரணமாக அத்தகைய விவசாய நடவடிக்கைகள் கைவிடப்பட்டமையால் அந்தப்பகுதி உடை மரங்களும், இதர முட்புதர்களும் நிறைந்த காடாக மாறியுள்ளது. சில பகுதியிலிருந்து காடுகள் அழிக்கப்பட்டுத் தென்னைச் செய்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

கடல் வழியாக விடத்தல்தீவு, இலுப்பைக் கடவை, பாலமுனை, இரணைதீவு, நாச்சிக்குடா, ஆகிய பகுதிகளையும் கச்சதீவு, இந்தியாவின் கரையோரப் பட்டினங்களான இராமேஸ்வரம், கீழ்க்கரை, நாகூர், நாகபட்டணம், தொண்டி ஆகிய இடங்களையும் சென்றடையலாம்.

அரைவறள் வலயத்துள் இந்தக்கிராமம் அமைந்திருப்பதால் டிசெம்பர் தொடக்கம் பெப்ரவரி வரையும் வீசும் வடகீழ் பருவப்பெயர்ச்சிக் காற்றினால் மழையைப் பெறுகிறது. எனவே இந்தக் கிராமத்தின் மழை வீழ்ச்சி மன்னார் மாவட்டத்தின் மழை வீழ்ச்சியான 125மி.மீ கொண்டுள்ளது.

தென்மேல் பருவப்பெயர்ச்சிக் காற்று வீச ஆரம்பிக்கும். மே மாதம் ஆரம்பத்தில் இடியுடன் கூடிய மேற்காவுகை மழையையும் இடைக்கிடையே இந்தக் கிராமம் பெறுகிறது. தென்மேல் பருவப் பெயர்ச் சிக்காற்று வறண்ட காற்றாக அதிவேகத்துடன் மே மாதம் தொடக்கம் செப்ரெம் பர் மாதம் வரை வீசும். .

இந்தக் கிராமம் உடை மரத்துடன் கூடிய முட்பற்றைக் காட்டையும் ஆவாரை, எருக்கலை, ஆல, இத்தி, கருக்குவாச்சி,நாவல் தென்னை, பனை, மரமுந்திரி போன்ற மரங்களையும் கொண்டுள்ளது.

கடற்கரையோரங்களில் கன்னா, தாழை,உவரி போன்ற தாவரங்கள் காணப்படுகின்றன. மாடு, ஆடு, எருமை, குதிரை,கழுதை, மான், நரி போன்ற மிருகங்கள் இங்குள்ளன.

ஏறக்குறைய ஒரு சதுர மைல் பரப்பளவுள்ள நிலப்பகுதியில் 10,000இக்கு அதிகமான மக்கள் செறிந்து வாழ்ந்த பகுதியாக இந்தக் கிராமம் அமைந்திருப்பதுடன், இது ஒரு தனி முஸ்லிம் கிராமமாக ஆரம்பகாலம் முதல் நிலைத்து வந்திருக்கிறது.

எருக்கலம் பிட்டிக்கு அருகில் அமைந்திருக்கும் தாராக்குண்டு, புதுக்குடியிருப்பு, கரிசல் ஆகிய கிராமங்களும் முஸ்லிம் கிராமங்களாகவே இருந்து வந்திருக்கின்றன.

மன்னார்,வவுனியா,முல்லைத்தீவுஆகிய மாவட்டங்களுக்குப் பொதுவாகவும் இலங்கைவாழ் முஸ்லிம்கள் அனைவருக்கும் தனிப்பெரும் சொத்தாகவும் 1944இல் எருக்கலம்பிட்டி மத்திய கல்லூரியொன்று அமைக்கப்பட்டது. 1960 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அந்தக் கல்லூரியில் ஏற்பட்ட கல்வி வளர்ச்சியாலும் அந்த ஆண்டு அந்தக் கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்ட முஸ்லிம் பெண்களுக்கான மகா வித்தியாலயத்தின் அளப்பரிய சேவையாலும் எண்ணிறந்த முஸ்லிம், கிறிஸ்தவ, இந்து மக்களுக்கும் இன,மத பேதமின்றிக் கல்வி அளிக்கப்பட்டது.

அதனால் பலரும் பல்வேறுபட்ட பதவிகளில் இலங்கையில் பரவலாகச் சேவையாற்றி வருவதோடு பலர் வெளிநாடுகளிலும் சேவையாற்றி வருகின்றனர். இத்தகைய காரணங்களால் எருக்கலம்பிட்டி என்ற இந்தக் கிராமமும் அதன் அமைவிடமும் துல்லியமாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூதூர் பிரதேச வயற்காணிகளை உரிய மக்களிடம் மீண்டும் வழங்குக

## கிழக்கு மாகாண விவசாய அமைச்சருக்குக் கோரிக்கை

திருகோணமலை, டிசெ.6

படுகாடு, முதலைமடு வயற்காணிகளை மீண்டும் உரிய தமிழ் மக்களிடம் வழங்க வேண்டும் என்று கிழக்கு மாகாண விவசாய அமைச்சருக்குத் திருகோணமலை நகரசபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் சி.நந்தகுமார் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்த கோரிக்கையில் மேலும் தெரிவித்ததாவது:-

மூதூர் பிரதேச செயலக பிரிவுக்குள் உள்ளடங்கும் கங்குவேலி கிராம சேவையாளர் பிரிவிலுள்ள படுகாடு, முதலைமடு போன்ற வயற்காணிகளில் கங்குவேலி, பட்டித்திடல் போன்ற கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகளே பயிர்ச் செய்கையை காலங்காலமாக மேற்கொண்டு வந்தனர். தற்போது பெரும்போக செய்கைக்காக வயல்களைப் பயன்படுத்தி நெற்செய்கையை மேற்கொள்ள முயன்றபோது பெரும்பான்மை இன விவசாயிகள், குறித்த காணிகளில் அத்துமீறி நுழைந்து தமிழ் விவசாயிகள் பயன்படுத்திய வயல்களில் நெற்செய்கையை மேற்கொள்கின்றனர்.

**பெரும்பான்மை இன விவசாயிகள், குறித்த காணிகளில் அத்துமீறி நுழைந்து தமிழ் விவசாயிகள் பயன்படுத்திய வயல்களில் நெற்செய்கையை மேற்கொள்கின்றனர்.**

நெற்காணிகளுக்கான உரிய ஆவணங்களுடன் மேற்படி விடயத்தை மூதூர் பொலிஸாருக்கும் மூதூர் பிரதேச செயலக அதிகாரிகளுக்கும் தெரிவித்தபோதும் ஆக்கபூர்வமான நடவடிக்கை எதுவும் சம்பந்தப்பட்ட தரப்பினரால் மேற்கொள்ளப்படவில்லையென அந்தக் கிராம விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து தகுந்த நடவடிக்கை எடுத்து தமிழ் விவசாயிகள் தமது சொந்த நிலங்களில் பயிர் செய்கையை மேற்கொள்ள ஆவன செய்வதோடு இந்தச் சம்பவத்தால் பாதிக்கப்பட்ட ஏழைத் தமிழ் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க ஆவன செய்ய வேண்டும் என்றுள்ளது.

மேலும் கிழக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தண்டாயுதபாணியின் கவனத்துக்கும் இந்த விடயம் கொண்டு வரப்பட்டுள்ளது. (வ-40)

## மட்டு. சாதனையாளர்கள் கௌரவிப்பு



மட்டக்களப்பு, டிசெ.6

மட்டக்களப்பில் கல்விச் சாதனையாளர்கள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

மட்டக்களப்பு வின்சன்ட் மகளிர் உயர்தர பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வு மட்டக்களப்பு வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.பவளகாந்தன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கல்வியமைச்சின் செயலாளர், மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ், கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.இ.போல் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது 2011ஆம் ஆண்டு மட்டக்களப்பு வலயத்தில் கல்வியில் சாதனைகளை நிகழ்த்திய மாணவர்கள் மற்றும் அதற்குப் பொறுப்பான பாடசாலை அதிபர்கள் பதக்கம் அணிவித்து நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (வ)

### கொடுப்பனவு வழங்காமையால்

## கண்டி வடக்கு டிப்போ ஊழியர்கள் பகிஷ்கரிப்பு

கண்டி, டிசெ.6

கடந்த இரண்டு மாதங்களாக கொடுப்பனவு வழங்காமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கண்டி வடக்கு சாலை ஊழியர் கள் தொடர் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

300 ஊழியர்கள் கடந்த 30 ஆம் திகதி தொடக்கம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஒக்ரோபர் மற்றும் நவம்பர் மாதங்களுக்கான கொடுப்பனவுகள் எதுவும் இதுவரையில் வழங்கப்படவில்லை என்று மேற்படி டிப்போ ஊழியர்கள் தெரிவித்தனர்.

இதன் காரணமாக தாமும் தமது குடும்பத்தினரும் பெரும் வாழ்வாதார பிரச்சி னைக்கு முகங்கொடுத்துள்ளதாக அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (வ)

## சவூதி தொண்டர் நிறுவன அதிகாரிகள் காத்தான்குடிக்குப் பயணம்

காத்தான்குடி, டிசெ.6

சவூதி அரேபிய அரசின் தொண்டர் நிறுவன அதிகாரிகள் காத்தான்குடி கிழக்கிலங்கை இஸ்லாமிய வலது குறைந்தோர் நலன்புரி நிலையம் மற்றும் ஸாஹிறா விசேட பாடசாலைக்கு நேற்று முன்தினம் திங்கட் கிழமை பயணம் மேற் கொண்டார்.

சவூதி அரேபியாவின் நிதா உல் ஹைர் பவுண் டேஷன் அமைப்பின் பொதுச் செயலாளர் ஷேஹ் பைசல் அல் மிம்பரி மற்றும் ஷேஹ் மத்லிப் நபீஷா ஆகியோரே பயணம் செய்தனர். (வ)

## ஏறாவூரில் விபத்து; மின்சாரம் தடை



ஏறாவூர் நகர சபைக்கு முன்பாகவுள்ள மின் கம்பமொன்றுடன் வான் மோதி விபத்துக்குள்ளாகியது. இதனால் ஏறாவூர் பிரதேசத்துக்கான மின் விநியோகம் தற்போது தடைப்பட்டுள்ளது. இந்த விபத்தால் எவரும் உயிரிழக்கவில்லை. துண்டிக்கப்பட்டுள்ள மின் விநியோகத்தை மீண்டும் வழமை நிலைக்குக் கொண்டு வருவதற்கான முயற்சிகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன. இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## அம்பாறை தனியார் பஸ் உரிமையாளர்கள் முன்னெடுத்த சேவை புறக்கணிப்பு கைவிடல்

அம்பாறை தனியார் பஸ் உரிமையாளர்கள் முன்னெடுத்த சேவைப் புறக் கணிப்புப் போராட்டம் நிறைவுக்கு வந்துள்ளது. பஸ் சாரதி ஒருவர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலைக் கண்டித்து, அம் பாறை தனியார் பஸ் உரிமையாளர்கள் நேற்றுக் காலை சேவை புறக்கணிப்பை ஆரம்பித்தனர்.

எனினும் சாரதியை தாக்கிய சந்தேக நபர் கைது செய்யப்பட்டதனை தொ டர்ந்து சேவைப்புறக் கணிப் புப் போராட்டம் கைவிடப் பட்டதாக அம்பாறை தனியார் பஸ் உரிமையாளர் சங்க தலைவர் எச். டி. குணசேகர தெரிவித்தார்.

## டெங்குநோய் தொடர்பான விழிப்புணர்வு

மட்டக்களப்பு, ஓட்டமாவடி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மீராவோடை மேற்கு கிராம அலுவலர் பிரிவில் டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வு வேலைத்திட்டம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

மேற்படி வேலைத் திட்டத்தில் ஓட்டமாவடி பிரதேசசபை உறுப்பினர் எல்.ரீ.எம்.புர்க்கான், மீராவோடை மேற்கு கிராம சேவை உத்தியோகத்தர், ஓட்டமாவடி பொதுச் சுகாதார பரிசோதகர்கள், வாழைச் சேனை பொலிஸார், சிவில் பாதுகாப்புக் குழுவினர் ஆகியோர் கலந்து கொண்ட னர்.

மீராவோடை மேற்கு சிவில் பாதுகாப்புக்குழு, எஸ்கோ நிறுவனம், ஆசிய அமைப்பின் அனுசரணையில் மேற்படி விழிப் புணர்வு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது டெங்கு நுளம் பால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பான துண்டுப் பிரசுரங்களும் வழங்கப்பட்டன. (வ)

## பாடசாலைகளிலிருந்து இடை விலகிய மாணவருக்கான விழிப்புணர்வு நிகழ்வு




கல்முனை, டிசெ.6

கல்முனை கல்வி வலய முறைசாரா கல்விப் பிரிவின் ஏற்பாட்டில் பாடசாலைக் கல்வியில் இருந்து இடை விலகிய மாணவர்களை மீண்டும் பாடசாலைக்கு அழைக்கும் விழிப்புணர்வு நிகழ்வு நேற்று முன்தினம் மாளிகைக்காடு மற்றும் சாய்ந்தமருது பிரதேசங்களில் இடம்பெற்றன.

மாளிகைக்காடு அல் ஹுசைன் வித்தியாலய அதிபர் அல்ஹாஜ் ஏ.எல். எம். ஏ.நழீரின் வழிகாட்டலில் பாடசாலை மாணவர் களும் ஆசிரியர்களும் காரைதீவு கோட்டக் கல்வி பணிப்பாளர் பரதன் கந்தசாமி, முறைசாரா கல்விக்கான இணைப்பாளர் ஸ்ரீநிவாஸ் உள்ளிட்ட அதிகாரிகளும் மேற்படி விழிப்புணர்வு நிகழ்வில் கலந்து கொண்டனர்.

குறித்த விழிப்புணர்வு நிகழ்வானது பெற்றோர்களுக்கும் இடைவிலகிய மாணவர்களுக்கும் பொது மக்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதாக அமைந்திருந்தது. (வ)

## மட்டு. மாவட்ட பாடசாலைகளுக்கு பசளை தயாரிக்கும் கொள்கலன்கள்



மட்டக்களப்பு, டிசெ.6

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சில பாடசாலைகளுக்கு பசளை தயாரிக்கும் கொள்கலன்கள் வழங்கும் நிகழ்வு ஏறாவூர் ஜிப்ரியா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் அனுசரணையுடன் பெண்களுக்கான வலுவூட்டலுக்கும் அபிவிருத்திக்குமான நிறுவனத்தால் இவை வழங்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள செங்கலடி மத்திய கல்லூரி, ஏறவூர் மாக்கான் மாக்கார் வித்தியாலயம், காத்தான்குடி மத்திய மகா வித்தியாலய தேசியப் பாடசாலை, ஒல்லிக்குளம் அல் ஹம்றா வித்தியாலயம், காங்கேயனோடை அல் அக்சா வித்தியாலயம், மட்டக்களப்பு விவேகானந்தா பெண்கள் பாடசாலை, மட்டக்களப்பு மகாஜனக் கல்லூரி, உட்பட 12 பாடசாலைகளுக்கு மேற்படி பசளைத் தயாரிக்கும் கொள்கலன்கள் வழங்கப்பட்டன.

மூன்று கொள்கலன்கள் வீதம் ஒவ்வொரு பாடசாலைக்கும் வழங்கப்பட்டன.

இந்தநிகழ்வில், பெண்களுக்கான வலுவூட்டலுக்கும் அபிவிருத்திக்குமான நிறுவனத்தின் நிறை வேற்றுப் பணிப்பாளரும் காத்தான்குடி நகரசபை உறுப்பினருமான சல்மா ஹம்சா, மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப் பணிப் பாளர் யு.எல்.எம். செயினுதீன், பாடசாலைகளின் அதிபர் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது, பாடசாலைகளின் தோட்ட நடவடிக்கைகளுக்காக இந்தப் பசளை தயாரிக்கும் கொள்கலன்கள் வழங்கப்பட்டதாகப் பெண்களுக்கான வலுவூட்டலுக்கும் அபிவிருத்திக்குமான நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரும் காத்தான்குடி நகரசபை உறுப்பினருமான சல்மா ஹம்சா தெரிவித்தார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** காலைப் பொழுதிலிருந்தே மகிழ்ச்சி கிடைக்கும். குடும்பத்தினரின் எண்ணங்களை பூர்த்தி செய்ய வேண்டும் என்று நினைப்பீர்கள். பிரார்த்தனைகள் நிறைவேறும். பணப்புழக்கம் அதிகரிக்கும். வியாபார ரீதியாக முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி பாராட்டுவார்.

**இடபம்:** நீண்ட நாளாக மனதிலிருந்து வந்த குழப்பங்களுக்கு நல்ல தீர்வு கிடைக்கும். பிள்ளைகளின் எண்ணங்களை நிறைவேற்றுவீர்கள். கூட்டுத் தொழிலில் பங்குதாரர்கள் அனுசரித்துப் போவார்கள். அயல்வீட்டாரின் ஆதரவு பெருகும்.

**மிதுனம்:** காரியங்களை முடிப்பதிலிருந்த தடுமாற்ற நிலை மாறும். சோம்பல், உடல் அசதி, நீங்கும். ஆடம்பரச் செலவுகளை குறைப்பீர்கள். பயணங்களால் ஆதாயம் உண்டு. கோபம் தணியும். உத்தியோகத்தில் மேலதிகாரி உதவுவார்.

**கடகம்:** பரபரப்புடன் காணப்படுவீர்கள். உடன் பிறந்தவர்களுடன் இருந்து வந்த மனக்கசப்புகள் நீங்கும். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் வருகை அதிகரிக்கும்.

**சிங்கம்:** மனதில் இனம்புரியாத பயம் வந்துப் போகும். குடும்பத்தாரின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப செயற்படுங்கள். சிலர் உதவுவதைப் போல் உபத்திரவம் தருவார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளிடம் வளைந்து கொடுத்துப் போவது நல்லது.

**கன்னி:** எதிர்காலம் குறித்த கவலைகள் வந்து நீங்கும். உறவினர்கள், நண்பர்கள் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். எதிர்மறை எண்ணங்கள் வரக்கூடும். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் விவாதத்தை தவிர்க்கவும்.

**நாளை**

கார்த்திகை -22 வெள்ளிக்கிழமை 07.12.2012
திதி: நவமி பி.இ 03.05 வரை
நட்சத்திரம்: உத்தரம் பி.இ 03.10 வரை
சுபநேரம்: 06.17- 07.47 வரை
ராகுகாலம்: 10.47- 12.17 வரை

**துலாம்:** உறவினர்கள் மத்தியில் மதிக்கப்படுவீர்கள். பணம் தேவையான அளவு இருக்கும். கடன் பிரச்சினைகள் தீரும். தந்தையாரின் உடல் நலம் சீராகும். நண்பர்களின் ஒத்துழைப்பால் சில காரியங்களை முடிப்பீர்கள். எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும்.

**விருச்சிகம்:** பணப்பற்றாக்குறை நீங்கும். பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து யோசிப்பீர்கள். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். தாய் வழி உறவினர்களின் ஆதரவு கிட்டும். அரசால் ஆதாயம் உண்டு. உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார்.

**தனுசு:** நீண்ட நாளாக பிற்போடப்பட்ட காரியங்கள் இன்று முடியும். வியாபாரத்தில் மதிக்கப்படுவீர்கள். புதியவர்கள் நண்பர்களாவார்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும். பேச்சில் முதிர்ச்சி தெரியும். மனக்குழப்பங்கள் நீங்கும்.

**மகரம்:** செலவுகளைக் குறைக்க முடியாமல் திணறுவீர்கள். கணுக்கால் வலிக்கும். சிலர் உங்களை குறை கூறினாலும் அதைப் பெரிதாக்க வேண்டாம். வியாபாரத்தில் பணியாள்களால் பதற்றம் ஏற்படும். உத்தியோகத்தில் அலுவலக ரகசியங்களை வெளியிட வேண்டாம்.

**கும்பம்:** எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். தெளிவான முடிவுகளால் தொல்லைகள் நீங்கும். குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். புண்ணிய ஸ்தலங்களுக்கு சென்று வருவீர்கள். பேச்சால் தடைபட்ட காரியங்களை முடிப்பீர்கள். பால்ய நண்பர்களைச் சந்திப்பீர்கள்.

**மீனம்:** திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும். உடன் பிறந்தவர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். நட்பு வட்டம் விரியும். குடும்பத்தினரின் எண்ணங்களைக் கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். அரசுக் காரியங்களில் இருந்து வந்த தடைகள் விலகும். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும்.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 5 | | | | 7 | 9 |
| | 4 | | 9 | 6 | 8 | | 2 | 3 |
| 1 | 6 | | | | | | | |
| | 3 | | 2 | 8 | | | 6 | |
| | | 5 | | 3 | | 8 | | |
| | 7 | | | 1 | 9 | | 5 | |
| | | | | | | | 8 | 7 |
| 7 | 9 | | 8 | 5 | 2 | | 1 | |
| 2 | 8 | | | | 4 | | | |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 9 | 5 | 8 | 7 | 2 | 1 | 6 | 4 |
| 6 | 2 | 8 | 4 | 1 | 5 | 7 | 3 | 9 |
| 1 | 7 | 4 | 6 | 3 | 9 | 2 | 5 | 8 |
| 4 | 5 | 7 | 1 | 9 | 6 | 8 | 2 | 3 |
| 8 | 3 | 2 | 5 | 4 | 7 | 9 | 1 | 6 |
| 9 | 6 | 1 | 3 | 2 | 8 | 4 | 7 | 5 |
| 7 | 1 | 6 | 9 | 8 | 1 | 5 | 4 | 2 |
| 5 | 4 | 9 | 2 | 6 | 1 | 1 | 3 | 7 |
| 2 | 8 | 3 | 7 | 5 | 4 | 6 | 9 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
25 * 01 * 1934



மறைவு
07 * 11 * 2012

**அமரர் சிதம்பரம் இராசலிங்கம் (சமாதான நீதிவான்)**
**(தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை ஓய்வுபெற்ற ஊழியர்)**

அமரர் சி. இராசலிங்கம் அவர்கள் அமரத்துவம் அடைந்ததையிட்டு பல வழிகளிலும் எமக்கு ஆறுதல் கூறி இரங்கல் கூறியவர்களுக்கும், எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு, இன்று [06.12.2012] வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தேவாலய வீதி,
சங்கானை.

குடும்பத்தினர்

## 45ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்

இகம்
24.01.1959



பரம்
25.10.2012

## அமரர் தவராசா தவராணி

"நத்தம் போல கேடும் உளது ஆகும் சாக்காடும்
வித்தகர்க்கு அல்லால் அரிது" (குறள் 235)

பொய்யா மொழிக்கமைய பொருந்தி வாழ்ந்து -நம்மை
மூச்சாக இதயமதில் முழுமையாய் சுமந்த எங்கள்
இதய தெய்வமெங்கே சென்றுவிட்டீர் நம்மை விட்டு
முற்றுறா வாழ்வுதன்னை முழுமையென நினைத்தானோ
காலனவன் கஞ்சனல்லோ வஞ்சனை தான் செய்து விட்டான்
வந்த விதி என்று நாங்கள் வாயாற மாட்டோமே- எங்கள்
நெஞ்சமெல்லாம் தீபமாய் சுடராக ஏற்றி விட்டோம்
என்னவளே எங்கள் தெய்வத் தாயவளே
மண்ணுலகில் எங்கள் வாழ்வு உள்ளவரை
உயிருக்குயிராக உள்ளத்திறுள்ளே
தெய்வமாய் எப்பொழுதும் தொழுது நிற்போமே.

கடந்த 25.10.2012 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை மறுதினம் (08.12.2012) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

1.15/02, ஆலடி வீதி,
தோணிக்கல்,வவுனியா.


(24337)(5.6)

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு அரசியல் தஞ்சம் வழங்குங்கள்

## ஆஸி. அரசிடம் மன்னார் ஆயர் கோரிக்கை



**ஆஸ்திரேலியாவில் அரசியல் அடைக்கலம் கோரியிருக்கும் இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த தமிழர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்புவது மிகவும் ஆபத்தானது. அவர்களுக்குத் தஞ்சம் அளியுங்கள்.**

மன்னார், டிசெ.6

இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதியிலிருந்து புகலிடம் தேடி வந்த தமிழர்களைத் திருப்பி அனுப்பாமல், அவர்களுக்கு அரசியல் தஞ்சம் அளிக்குமாறு மன்னார் ஆயர் வணக்கத்துக்குரிய இராயப்பு ஜோசப் ஆண்டகை ஆஸ்திரேலியா அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் 3-12-2012 திகதியிடப்பட்ட கடிதம் ஒன்றை ஆஸ்திரேலியா தமிழ் அகதிகள் கழகத்தினூடாக அவர் அனுப்பியுள்ளதாக மன்னார் ஆயர் இல்லத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கு நாடு கடத்தப்பட்டுத் திருப்பியனுப்பப்படும் தமிழ் மக்களுடைய பரிதாபகரமான நிலை தொடர்பாக நான் அவசரமாக உங்களுடைய கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

வெளிநாட்டில் அரசியல் அடைக்கலம் கோரிய பின்னர் திருப்பி அனுப்பப்படுபவர்கள் அரசினாலும் அதனுடைய ஆயுதப் படையினராலும் துரோகிகளாகக் கணிக்கப்படுவார்கள் என்பதால், அவர்கள் அச்சத்துடனேயே வாழ வேண்டியவர்களாக இருப்பார்கள் என்பது அனைருக்கும் தெரிந்த ஒன்றுதான்.

இவர்களில் சிலர் படையினருக்குத் தகவல் கொடுப்பவர்களாக இருப்பதற்குக் கட்டாயப்படுத்தப்படுவதால் சமூகத்திடையே பதற்ற நிலை உருவாகின்றது.

இவர்கள் இராணுவம், பொலிஸ் மற்றும் புலனாய்வுப் பிரிவினரின் கட்டுப்பாடுகளுக்கும், அச்சுறுத்தல்களுக்கும், மிரட்டல்களுக்கும், விசாரணைகளுக்கும், கண்காணிப்புக்கும் மற்றும் ஏனைய வகையிலான துன்புறுத்தல்கள் மற்றும் பாகுபாடுகளுக்கும் உள்ளாக்கப்படுகின்றார்கள்.

இவ்வாறானவர்களுக்கு ஒரே ஆறுதலாகவும் பாதுகாப்பாகவும் இருக்கக்கூடிய சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளன.

பல சந்தர்ப்பங்களில் வேண்டப்படாதவர்கள் என அரசினாலேயே அவ்வமைப்புக்கள் நாட்டைவிட்டே வெளியேற்றப்பட்டுள்ளன.

இவற்றின் அடிப்படையில், எமது பிராந்தியத்தில் தற்போது காணப்படும் நிலைமைகளைக் கருத்திற்கொண்டு பார்க்கும் போது ஆஸ்திரேலியாவில் அரசியல் அடைக்கலம் கோரியிருக்கும் இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த தமிழர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்புவது மிகவும் ஆபத்தானது என்பதே எனது கருத்தாகும்.

இலங்கையிலிருந்து அடைக்கலம் கோரி வந்தவர்களை அரவணைத்துக் கொள்ளும் ஆஸ்திரேலிய அரசின் நல்லெண்ணத்தை பாராட்டி நன்றி தெரிவிக்கும் அதேவேளையில், இவ்வாறு அடைக்கலம் கோருபவர்களுக்கு ஆஸ்திரேலிய அரசு அரசியல் பாதுகாப்பை வழங்க வேண்டும் என வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன். - என்றுள்ளது. (த)

# துமிந்தவின் மண்டையோடு பாகங்களைப் பாதுகாக்கவும்

## சட்டத்தரணி கோரிக்கை

கொழும்பு,டிசெ 06

சந்தேகநபரான துமிந்த சில்வா தொடர்பான அறிவுறுத்தல்களைச் சட்டமா அதிபர் வழங்குவார் எனக் குற்றப்புலனாய்வுப் பொலிஸார் கொழும்பு நீதவானிடம் தெரிவித்தனர்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான பாரத லக்ஸ்மன் பிரேமசந்திர முல்லேரியாவில் கொலை செய்யப்பட்டமை தொடர்பான வழக்கு விசாரணையின் போது குற்றப்புலானாய்வுப் பிரிவினரைச் சேர்ந்த பொலிஸ் இன்ஸ்பெக்டர் மெரில் ரஞ்சன் நீதிபதியிடம் இவ்வாறு தெரிவித்தார்.

துமிந்த சில்லா மீது மேற்கொள்ளப்பட்ட சத்திர சிகிச்சையின் போது அவரது மண்டையோட்டிலிருந்து அகற்றப்பட்ட பாகங்களைப் பாதுகாப்பாகப் பேணும்படி ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலை நிர்வாகத்திடம் அறிவுறுத்த வேண்டும் என துமிந்த சில்வா சார்பில் முன்னிலையான சட்டத்தரணி அனுஜ பிரேமசந்திரன் நீதிமன்றத்திடம் கேட்டுக்கொண்டார். இதைத் தொடர்ந்து வழக்கை டிசெம்பர் 18 ஆம் திகதிக்கு நீதவான் ஒத்திவைத்தார். (த)

**துமிந்த சில்லா மீது மேற்கொள்ளப்பட்ட சத்திர சிகிச்சையின் போது அவரது மண்டையோட்டிலிருந்து அகற்றப்பட்ட பாகங்களைப் பாதுகாப்பாகப் பேணும்படி துமிந்த சில்வா சார்பில் முன்னிலையான சட்டத்தரணி அனுஜ பிரேமசந்திரன் நீதிமன்றத்திடம் கேட்டுக் கொண்டார்.**

# பிரதமர் ஜயரட்ன , துமிந்த இருவருக்கும் 3 மாத லீவு

கொழும்பு, நவ 06

பிரதமர் டி.எம்.ஜயரட்னவுக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கும் மேலும் 3 மாத லீவு வழங்குவதற்கு நாடாளுமனறம் நேற்று அங்கீகாரமளித்துள்ளது.

டிசெம்பர் மாதம் 22ஆம் திகதியிலிருந்து 3 மாத லீவு இவர்கள் இருவருக்கும் வழங்கப்படுகின்றது.

முல்லேரியா துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்த நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா, சிங்கப்பூரில் உள்ள வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்றுவருகின்றார். இந்த நிலையில், இவருக்கு நாடாளுமன்றம் தொடர்ந்து லீவு வழங்கிவருகின்றது.

இதேவேளை, அமெரிக்காவில் உள்ள வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்றுவந்த பிரதமர் டி.எம். ஜயரட்ன கடந்த வாரம் நாடு திரும்பினார்.

**டிசெம்பர் மாதம் 22ஆம் திகதியிலிருந்து மூன்று மாத லீவு இவர்கள் இருவருக்கும் வழங்கப்படுகின்றது.**

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் சுமார் 3 மாதங்களுக்கும் மேலாக நாடாளுமன்றத்துக்கு வருகை தராதுவிடின் அவர் நாடாளுமன்றத்துக்கு வருகை தராமல் இருப்பதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இதன் அடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இவ்வாறான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாதுவிடின், 3 மாதங்களின் பின்னர் அவர் தனது ஆசனத்தை இழக்க நேரிடும். (த)

## இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் சனியன்று சந்திப்பு

இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்துடன் இணைந்திருக்கின்ற 80 சங்கங்களின் பிரதிநிதிகளுக்கு அச்சங்கம் அவசர சந்திப்பொன்றுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

80 சங்கங்களைச்சேர்ந்த தலைவர்கள் மற்றும் செயலாளர்கள் 180 பேருக்கே எதிர்வரும் 08 ஆம் திகதி கொழும்புக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளது.

நீதிச்சேவையின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக எடுக்கவேண்டிய தீர்மானங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தின் நிறைவேற்றுக்குழு எடுத்த தீர்மானத்துக்கு அமையவே சனியன்று இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளதாக அச்சங்கத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார். (த)

# தவிசாளர் குழாமிலிருந்து நீக்கப்பட்ட அஸ்வர் எம்.பி

கொழும்பு,டிசெ 06

நாடாளுமன்றத்தில் தவிசாளர் குழாமிலிருந்து ஆளும் கட்சியின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரான ஏ.எச்.எம். அஸ்வர் நீக்கப்பட்டுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அக்கிராசனத்தில் இருந்து அவைக்கு தலைமை தாங்கும் போது பக்கச்சார்பாக நடந்துகொள்கின்றார் என எதிர்க்கட்சியினர் செய்த முறைப்பாட்டை அடுத்தே அந்தக் குழாமிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் அஸ்வரை நீக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

அவைக்குச் சபாநாயகர், பிரதிச் சபாநாயகர் மற்றும் குழுக்களின் பிரதி தலைவர் தலைமை தாங்காத பட்சத்தில் தவிசாளர் குழாமிலுள்ள ஒருவர் அவைக்குத் தலைமை வகிப்பது வழக்கம். அந்த குழு உறுப்பினர்களை தனது விருப்பத்தின் பேரில் நியமிப்பதுடன் நீக்குவதற்கான அதிகாரமும் சபாநாயகருக்கு உள்ளது.

இதனடிப்படையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் அஸ்வரை அந்தக் குழுவிலிருந்து நீக்குவதற்குச் சபாநாயகர் தீர்மானித்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த)

# கட்சி தாவினார் அம்ஜாத்

கொழும்பு, டிசெ.6

ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய மாகாண சபை உறுப்பினர் எம்.ஆர்.எம்.அம்ஜாத் நேற்றுமுன்தினம் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் இணைந்து கொண்டுள்ளார்.

மத்திய மாகாண சபையின் வரவு - செலவுத்திட்டத்தின் முதலாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போது பட்ஜெட்டுக்கு ஆதரவாக வாக்களித்த அவர், அரச பக்கம் சென்று அமர்ந்துள்ளார்.

அரசுடன் இணைந்து கொண்ட அம்ஜாத் சுற்றாடல் துறை பிரதி அமைச்சர் அப்துல் காதரின் மருமகன் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

## ஐ.நாவில் இலங்கை அரசுக்கு தொடர்ந்தும் ரஷ்யா உதவும்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு தொடர்ந்து ரஷ்யா உதவும் என இலங்கைக்கான ரஷ்யத் தூதுவர் அலெக்சாண்டர் ஏ.கர்ச்சாவா தெரிவித்துள்ளார்.

இந்த சபையில் அடுத்த வருடம் ரஷ்யா அங்கத்துவம பெறாவிட்டாலும் தொடர்ந்து உதவும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீமுக்கும் ரஷ்ய தூதுவருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் நீதி அமைச்சில் இடம்பெற்றது. இதன்போதே தூதுவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

# நீதித்துறை–நாடாளுமன்ற இழுபறி மக்களைப் பாதித்துவிடக்கூடாது

## முன்னாள் நீதியரசர் கூறுகிறார்

கொழும்பு, டிசெ 06

நீதித்துறைக்கும் நாடாளுமன்றத்துக்கும் இடையில் அண்மைக்காலமாக ஏற்பட்டுள்ள இழுபறி நாட்டு மக்களைப் பாதித்து விடக்கூடாது.என்று முன்னாள் நீதியரசர் பி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் பி.பி.சி செய்திச் சேவைக்கு அவர் வழங்கிய செவ்வியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாடாளுமன்றத் தெரிவுக் குழு விவகாரம் சட்டரீதியானது அல்ல அரசியல் அமைப்புக்கு அமைவானது என்கின்றனர். அது தவறானதாகும். அரசியல் விடயம் என்றாலும் அதனைச் சட்டத்துக்கு அமைவாகவே செய்ய வேண்டும்.

இந்த குழுவுக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர்கள் இந்த குழுவில் அங்கம் வகிப்பதாகவும் ஆதலால் பக்கச்சார்பானதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு எதிரானதாகவும் இருக்கக் கூடும் என்றும் இன்றேல் அரசுக்குச் சார்பானதாக அமைந்துவிடும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எதுவாக இருப்பினும் அது சட்டத்திற்கு அமைவானதாகவே இருக்கவேண்டும். இந்த இழுபறியானது நாட்டு மக்களைப் பாதித்து விடக்கூடாது என்றார். (த)

# கல்வித்துறையிலும் புகுந்து விளையாடுகிறது அரசியல்

## ஐ.தே.க. காட்டம்

கொழும்பு, டிசெ.6

நாட்டின் கல்வித்துறை முழுமையாக அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்றமான திஸ்ஸ அத்தநாயக்க குற்றஞ்சாட்டினார்.

கல்வித்துறையில் இடம்பெற்று வருகின்ற பிரச்சினையால் ஆசிரியர்கள் போராட்டத்தில் இறங்கியுள்ளனர். இவ்வாறான நிலையிலும் அவர்களது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசு எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலே மேற்கண்டவாறு கருத்து வெளியிட்ட அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினைக்கு முடிவுகட்ட வரவு-செலவுத் திட்டத்தில் 600 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யவேண்டும். ஆனால் அரசு அதற்குத் தயாரில்லை. 5 ஆயிரம் கோடி ரூபா செலவளித்து செய்மதி அனுப்புகிறது. அவ்வாறு அனுப்பிய செய்மதி வானில் இன்னும் நிலைகொள்ளவில்லை. இது தொடர்பில் அரசு எந்தத் தகவலும் வெளியிடவில்லை.

நாட்டின் கல்வித்துறை முழுமையாக அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது. அதிபர், ஆசிரியர்கள் நியமனமும் அரசியல்வாதிகளின் தேவைக் கேற்பவே நிகழ்கின்றது. அதிபர், ஆசிரியர்களின் பிரச்சினைகள் நீடித்தால் அது மாணவர்களின் எதிர்காலத்தைதான் பாதிக்கும். எனவே, இதனைக் கருத்திற்கொண்டு ஆசிரியர் சங்கத்துடன் பேச்சு நடத்தி பிரச்சினைகளுக்கு அரசு தீர்வுகாண வேண்டும் என்றார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர் சேவையில் வெள்ளி விழாக் காணும்

A.I. தயானந்தராஜா அவர்களைப்

பாராட்டி வாழ்த்துகின்றோம்




மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி (தேசிய பாடசாலை)யின் அதிபர் கடந்த 25 வருடங்களாக பாடசாலையின் வளர்ச்சிக்கு அயராது ஆற்றி வரும் சேவை குறித்தும், சர்வதேச ரீதியில் இக் கல்லூரியின் கீர்த்தியினை அடையாளப்படுத்தியுள்ளமை கருதியும் அதிபர் சேவையில் வெள்ளி விழாக் காணும் எங்கள் மதிப்புக்குரிய A.I. தயானந்தராஜா அவர்களை வாழ்த்துவதில் உவகை கொள்கின்றோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள்
கல்லூரிச் சமூகத்தினர்.



31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
25★05★1936

மறைவு
06★11★2012

அமரர் சின்னத்தம்பி சண்முகநாதன் J.P
(ஓய்வு நிலை அதிபர்)

ஊர்போற்ற வாழ்ந்தீர்கள்
உறவுகள் மகிழ்ந்திட நடந்தீர்கள்
பிள்ளைகள் உயர்ந்திட உழைத்தீர்கள்
இறுதியில் கண்ணீரில் நனையவிட்டு சென்றீர்கள்
என்றும் நீங்கள் காட்டிய பாதையில்
உயர்ந்து நிற்போம் அப்பா

06.11.2012 அன்று இறைபதமடைந்த சின்னத்தம்பி சண்முகநாதன் அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளும் இன்று (06.12.2012) வியாழக்கிழமை மு.ப.11.00 மணியளவில் வெள்ளவத்தை சங்கரப்பிள்ளை மண்டபத்தில் (கொழும்பு தமிழ் சங்கம்) நடைபெறும். அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த் தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

119,2/1, மன்னிங் ரிலேஸ்,
வெள்ளவத்தை,
கொழும்பு-06. (சி/3014)(5.6)

குடும்பத்தினர்.


# போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்
# வழங்குநர்களையும் ஒப்பந்தக்காரர்களையும்
# பதிவு செய்தல் - 2013

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கீழ்க்குறிப்பிடப்பட்டிருக்கும் பொருட்கள், சேவைகளை வழங்குவதற்கு விருப்பமுடைய வழங்குநர்கள் / ஒப்பந்தக்காரர்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் என்பனவற்றிடமிருந்து 2013ம் ஆண்டிற்கு பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்கான விண்ணப்பப்படிவங்களை (மாதிரி விண்ணப்பப் படிவம் கீழே தரப்பட்டுள்ளது) தயாரித்து ஒவ்வொரு இலக்கத்துக்குமான வழங்கல்கள் / சேவைகள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியாக ரூபா 500/- ஐ எமது அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் போட்டோ பிரதியை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து தபாலுறையில் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் *"வழங்கல்கள் / சேவைகள் பதிவுசெய்தல் - 2013"* எனக் குறிப்பிட்டு பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 15.12.2012 ம் திகதி 3.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாக அலுவலகத்தில் கையளிக்கலாம். காசோலை அல்லது காசுக்கட்டளை ஆயின் "பணிப்பாளர் போதனாவைத்தியசாலை, யாழ்ப்பாணம்" என்ற பெயருக்கு எழுதப்படல் வேண்டும்.

தொகுதிகள்:

- தொகுதி "A" - பொருள்கள் வழங்குதல் (பொது)
- தொகுதி "B" - பொருள்கள் வழங்குதல் (மருத்துவம்)
- தொகுதி "C" - சேவைகள்/வேலை
- தொகுதி "D" - வாகனத்திருத்தமும் சேவிஸ் செய்தலும்

| தொகுதி இல | பொருள்கள் விவரம் (பொது) |
|---|---|
| A – 01 | காகிதாதிகள், எழுது பொருள்கள், மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருள்கள் |
| A – 02 | தளபாடங்களும், அலுவலக உபகரணங்களும் ( மரம் / உருக்கு ) |
| A – 03 | கணனிகள், கணனியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள், றோனியோ இயந்திரம், தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய ரோனர்கள், றிபன்கள் மற்றும் ஏனைய அலுவலக மின் உபகரணங்கள் |
| A – 04 | பன்னல் திரைச்சீலைகள், சீருடைகள் மற்றும் துணிவகைகள் |
| A – 05 | குளியலறைப் பொருத்திகள், மாபிள்க்கல் வகைகள் நீர்க்குழாய்ப் பைப்புகள், பைப் இணைப்புக்கள் மற்றும் அதனோடிணைந்த பொருள்கள் |
| A – 06 | சகலவிதமான அலுமினிய வீட்டுப்பாவனைப் பொருள்கள் |
| A – 07 | தும்பு மெத்தை, இறப்பர் மெத்தை, மெக்கின்ரோஸ், எலாஸ்டிக், நைலோன் நூல் |
| A – 08 | கட்டட, இரும்புப் பொருள்கள், பெயின்ற், வாணிஸ் மற்றும் சகல ஹாட்வெயர் பொருள்கள் மணல், கல், தீராந்தி, சலாகை உட்பட |
| A – 09 | மின்சாரப் பொருள்கள், அதன் உதிரிப்பாகங்கள், மின் மோட்டர்கள் . மின்சாரபல்புகள், மின் விசிறிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பொருள்களும் |
| A – 10 | புற்பாய், தும்புத்தடி, விளக்குமாறு, கால் துடைப்பம், மொப்பர் மற்றும் ஏனையவை |
| A – 11 | ஊத்தைச்சோடா, அழுக்கு நீக்கும் பவுடர்கள், விம், ஹார்பிக், சேவிங் பிளேட் மற்றும் ஏனையவை |
| A – 12 | மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் ரயர், டியூப் மற்றும் பற்றறிகள் |
| A – 13 | தோல் உற்பத்திப் பொருள்கள் - சப்பாத்துக்கள், சிலிப்பர்கள் |
| A – 14 | குளிர்சாதனப் பெட்டிகள், காற்றுக் குளிராக்கிகள் மற்றும் அதன் உதிரிப்பாகங்களும் |
| A – 15 | சகல வகையான ரெக்சின் துணிகள், பொலித்தீன் |
| A – 16 | இறப்பர் முத்திரை வகைகள் |
| A – 17 | பால்மா வகைகள் மற்றும் ஊட்டச்சத்து பானங்கள் |

| தொகுதி இல | பொருள்கள் விவரம் (மருத்துவம்) |
|---|---|
| B – 01 | Surgical Instruments |
| B – 02 | Laboratory consumables. |
| B – 03 | Laboratory equipment |
| B – 04 | Surgical /medical/ equipments. |

| தொகுதி இல | சேவைகள் விவரம் |
|---|---|
| C – 01 | உருக்கு, மரத்தளபாடங்கள் திருத்தம் செய்தல் |
| C – 02 | மின் உபகரணங்கள் திருத்தம் செய்தல் ( காற்றுக் குளிராக்கி, குளிர்சாதனப்பெட்டி, றோனியோ இயந்திரம், கணனியும் அதனோடிணைந்த உபகரணங்களும், ஏனையவையும்) |
| C – 03 | மின் மோட்டர்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், மின்விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்துதலும் மீள முறுக்குதலும்(Rewinding) |
| C – 04 | பதிப்பக வேலை (Printing) - சகலவித படிவங்கள், ஏனையவை |
| C – 05 | வைத்தியசாலை அலுவலர்களுக்கு பிளாஸ்டிக் அடையாள அட்டை வழங்குதல் |
| C – 06 | கட்டடத் திருத்த வேலை, உள்ளகத் தொலைபேசி பராமரித்தல் |
| C – 07 | வைத்தியசாலைச் சுத்திகரிப்புச் சேவை, துணி சலவைச் சேவை, பாதுகாப்புச் சேவை |

| தொகுதி இல | வாகனத்திருத்தமும் சேவிஸ் செய்தலும் |
|---|---|
| D – 01 | சகலவிதமான வாகனத்திருத்தம், மின்சார வேலை, வாகன உட்பக்கம், சீற் என்பனவற்றுக்கு குசன் வேலை |
| D – 02 | சகலவிதமான வாகனமும் சுத்திகரிப்பு (Service) |

நிபந்தனைகள்:

01. வழங்கல்கள் / சேவைகள் 2013ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியானதாகும்.
02. திருப்திகரமற்ற வழங்கல்கள் / சேவைகளை நிராகரிக்கும் உரிமை பணிப்பாளருக்கு உண்டு.
03. பணிப்பாளர் வெளி மூலங்களிலிருந்தும் கேள்வி கோரும் உரிமையைக் கொண்டுள்ளார்.
04. பதிவுக்காகப் பெறப்பட்ட விண்ணப்பங்களை எதுவித காரணங்களும் தெரிவிக்காமல் நிராகரிக்கும் உரிமை பணிப்பாளருக்கு உண்டு.
05. மேலதிக விபரங்கள் பெற விரும்பின் பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் தொலைபேசி இலக்கம் 021 222 3149 உடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளளாம்.

வைத்திய கலாநிதி.எஸ்.சிறீபவானந்தராஜா,
பணிப்பாளர்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

---

*மாதிரி விண்ணப்படிவம்*

| FOR OFFICE USE | |
|---|---|
| Cash Receipt No. | |
| Date | |
| Amount | |

<u>வழங்குநர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் பதிவு செய்தல் - 2013</u>
<u>போதனா வைத்தியசாலை,யாழ்ப்பாணம்.</u>

1. நிறுவனத்தின் பெயர் :
2. நிறுவனத்தின் முகவரி :
3. தொலைபேசி இலக்கம் :
4. தொலைநகல் இலக்கம் :
5. மின்னஞ்சல் முகவரி :
6. வியாபாரப் பதிவு இலக்கம் :
7. வியாபாரத்தின் தன்மை :
8. வற் பதிவு இலக்கம் :

| தொகுதி இலக்கம் | வழங்கல் / சேவை விபரம் |
|---|---|
| | |

என்னால் / எங்களால் தெரிவிக்கப்பட்ட விபரங்கள் சரியானது எனவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரினால் குறிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக பொருள்கள் / சேவைகள் வழங்குவதற்கு உறுதியளிக்கின்றேன் / உறுதியளிக்கின்றோம். ரூபா 500/- க்குரிய பற்றுசீட்டின் போட்டோப் பிரதி இத்துடன் இணைத்துள்ளேன் / இணைத்துள்ளோம்.

....................................
விண்ணப்பத்தாரியின் ஒப்பம்.

விண்ணப்பத்தாரியின்பெயர் :....................................

திகதி :....................................

(3013)(2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடமை நிறைவேற்று அதிபர் நியமனங்கள்


## ஏனையோரைப் பாதிக்கக் கூடாது: ஆசிரியர் சங்கம் கோரிக்கை

கடமை நிறைவேற்று அதிபர்களுக்கான நிரந்தர நியமனங்கள் எவரையும் பாதிக்காத வகையில் அமைய வேண்டும் என இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கம் கேட்டுள்ளது.

2010ஆம் ஆண்டுக்கு முன் தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகள் அதிபர்களாக கடமையாற்றிய கடமை நிறைவேற்று அதிபர்களுக்கு அடுத்த வருடத்துக்குள் நிரந்தர அதிபர் நியமனம் வழங்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்த நியமனங்கள் அடுத்த வருடம் டிசெம்பர் மாதம் வழங்கப்படவுள்ளது. வடக்கு கிழக்கில் பல அதிபர்கள் கடமை நிறைவேற்று அதிபர்களாக பல வருடங்களாகக்கடமையாற்றி வருகின்றனர். இவர்களுக்கு இதுவரை நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை. எனவே இது தொடர்பில் ஆசிரியர் சங்கத்தினரால் பல தடவை சுட்டிக்காட்டப்பட்டது. தற்போது கல்வி அமைச்சு அறிவித்துள்ளதற்கு இணங்க நியமனங்கள் வழங்கப்படும் போது புதிதாக நியமிக்கப்பட்ட அதிபர்களையோ அல்லது அதிபர் சேவையில் உள்ளவர்களைப் பாதிக்காத வகையில் கல்வி அமைச்சின் நியமனங்கள் அமைய வேண்டுமென இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கம் வலியுறுத்தியுள்ளது. (4-16)

# மரண அறிவித்தல்



## செல்லையா கணேசன்

(யாழ். ஸ்ரீமுருகன் லோன்றி உரிமையாளர்)

செல்வா வீதி, அராலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா கணேசன் 03.12.2012 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா-கண்மணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முருகேசு - சரஸ்வதி தம்பதியரின் பாசமிகு மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சண்முகம், நடேசு, கார்த்திகேசு மற்றும் மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சூரியகலா, சந்திரகலா, பிறேமலதா, புஸ்பலதா, வரதராஜன் (லண்டன்), சசிகலா ஆகியோரின் தந்தையும், குகதாசன், கந்தசாமி, தெய்வேந்திரம், விஜயரூபன், கல்யாணி, புவனேந்திரன் (கட்டார்) ஆகியோரின் அன்பு மாமனும், பாணுஷா, தட்சாயினி, லக்சிகா, ஸ்ரீலக்ஷன், துஷாளினி, சங்கவி, விஸ்ணுயன், யதுர்ஷனா, துளசிகா, வைஸ்ணவி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.12.2012) வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக அராலி வடக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை

(26406) (45.6)

# துயர் பகிர்கின்றோம்



எமது சக உறுப்பினர்
தயாபரன் அவர்களின்
அன்புத்தந்தை

## செல்லப்பா இராசதுரை (சின்னக்கிளி)

அவர்கள் காலமாகிய செய்தி கேட்டு மிக்கவேதனை அடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கோண்டாவில் மேற்கு கந்தர்வளவு
ஸ்ரீ மகாகணபதிப் பிள்ளையார் கோயில்
(காளி கோயில்) பரிபாலன சபை.

(26408)(6.7)


# யாழ். மண்ணில் முதன் முறையாக

## Cochlear Implant Surgery

### (செவியின் சுருள் வளையில் கேட்கும்சாதனத்தை உட்பதித்தல்)

நீங்கள் இந்த உலகத்தில் இருந்து அமைதியாக ஒதுங்கியிருக்கின்றீர்களா?
உங்களுடைய கேட்டல் சாதனங்களின் உதவியுடன் கேட்பது கடினமாக உள்ளதா?
நீங்கள் இனிக் கவலைப்பட வேண்டாம்.

Wickramarachchi Insititute of Speech and Hearing நிறுவனத்தினால் இலவசமாக நடத்தப்படும் செவிப்புலன் பாதுகாப்பு தொடர்பான கருத்தரங்கில் கலந்துகொள்வதன் மூலம் உங்கள் ஒவ்வொருவரினதும் கேட்டல் திறனை மதிப்பீடு செய்து அதற்கான தீர்வையும் அறிந்து கொள்ளுங்கள்.

நாள் :- இன்று 06.12.2012
நேரம் :- 2.00 pm
இடம் :-ஜெ.எம்.விக்ரமாரச்சி அன்ட் கம்பனி, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

உதயன் பத்திரிகையில் 05.12.2012 நேற்று 10 ஆம் பக்கத்தில் மேற்படி கருத்தரங்கு யாழ்.போதனா வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் நடைபெறும் எனக் குறிப்பிடப்பட்டது. தற்போது இக் கருத்தரங்கு நடைபெறும் இடம் மாற்றப்பட்டுள்ளதை கவனத்தில் எடுத்து சரியான இடத்துக்குச் சமுகம் தரவும்.

மேலதிக தகவல்களுக்கு: ஜெ.எம்.விக்ரமாரச்சி அன்ட் கம்பனி, இல.229, 231 மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
Tel :021 2219288, 0777511260

(26402)(2.6)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



இராச வீதி, ஆவரங்கால் மேற்கு, புத்தூரை சேர்ந்த

## இளையதம்பி சந்திரன்

அவர்கள் நீதி அமைச்சால் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டு 26.11.2012 இல் மல்லாகம் மாவட்ட நீதிபதி J. கஜநிதிபாலன் அவர்கள் முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். இவர் சிரேஸ்ட ஓய்வுநிலை சிறாப்பரும் சமூக சேவையாளரும் ஆவார். இவர் மேலும் சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு வாழ்ந்து மக்கள் சேவை தொடர இறைவனை பிரார்த்தித்து மனதார வாழ்த்துகின்றோம்.

கந்தர்மடம்

தயாளன் குடும்பத்தினர்

(26398)(3.6)

# நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்.

## 2013 ஆம் ஆண்டுக்கான இறைச்சிக்கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான காலஎல்லை நீடிப்பு

17.11.2012 ஆம் திகதிய பத்திரிகைகளில் செய்யப்பட்ட மீள்கேள்வி அறிவித்தலின் பிரகாரம் கேள்விப்படிவம் வழங்கும் கால எல்லை கீழ்வருமாறு நீடிக்கப்பட்டுள்ளது.

கேள்விப்படிவம் வழங்கப்படும் திகதி : 12.12.2012 புதன்கிழமை ந.ப 12.00 மணி வரை
கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி: 13.12.2012 வியாழக்கிழமை ந.ப 12.00 மணி வரை
கேள்வி திறக்கும் திகதி : 13.12.2012 வியாழக்கிழமை பி.ப. 2.30 மணி

### மீள்கேள்வி அட்டவணை

| இல | இறைச்சிக்கடைகள் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த தொகை (வற்வரி தவிர்ந்த) ரூபா. |
|---|---|---|---|---|
| நல்லூர் உப அலுவலகம் | | | | |
| 01. | திருநெல்வேலிச் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 5,000.00 | 210,000.00 |
| கொக்குவில் உப அலுவலகம் | | | | |
| 01. | கொக்குவில் சந்தை கோழி இறைச்சிக் கடை | 500.00 | 5,000.00 | 630,110.00 |
| 02. | கொக்குவில் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 5,000.00 | 139,125.00 |


குத்தகை தொடர்பான மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி,
05.12.2012

(சி/3021)(3.8)

நல்லூர் பிரதேச சபை.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். கொழும்புத்துறை இந்துவின் மைந்தர்களான
ஏசுலன்
Y. தேவானந்திவ்விய ராஜ்
ஏசுலன்
G. பிரபுராஜ்
ஆகிய மாணவர்கள் இருவரும் இன்று 06.12.2012 பண்டார நாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் தேசிய புத்தாக்கப் போட்டியின் விருது வழங்கும் நிகழ்வில் பிரிவு -R இல் தேசிய ரீதியாக 2ஆம் இடத்தினை வெற்றி கொண்டு பாடசாலையின் தேசிய விருது வெல்லும் கனவினை நனவாக்கி வரலாறு படைத்தமையினை இட்டும், இம் மாணவர்களின் வெற்றிக்கு வழிகாட்டிகளாக நின்று வழிப்படுத்திய கல்லூரியின் அதிபர், ஆசிரியப் பெருந்தகைகளையும் பாராட்டி வாழ்த்துவதில் பெருமிதம் அடைகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
பழைய மாணவர் சங்கம்
யா/ கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்
யாழ்ப்பாணம்.

(26403)(8.8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாணவர் ஆற்றலை வளப்படுத்துவது கலவன் பாடசாலை

மனித வாழ்க்கையில் கல்வியின் முக்கியத்துவம் இன்றியமையாதது. வாழ்க்கை என்ற கட்டடத்துக்கு அத்திபாரமாக அமைவது, இன்றைய சமுதாயத்தில் உயர்நிலையில் வைத்து நோக்கப்படும் கல்வியாகும்.

இந்தக் கல்வியின் பெரும்பகுதியை ஒருவன் தனது அனுபவத்தின் வாயிலாகவும், பிறருடைய அனுபவங்களைத் தன்னுடன் பகிர்ந்து கொள்வதன் மூலமும் பெற்றுக்கொள்கின்றான். இவ்வாறு மனிதனின் அறியாமையைப் போக்குவது அறிவுச்சுடராகிய கல்வியாகும். ஆதலினால் மாணவர்களின் ஆற்றலை வளப்படுத்துவது பாடசாலைகள் ஆகும். இப்பணியை முற்றுமுழுதாக கலவன் பாடசாலையே மேற்கொள்கின்றது.

அந்த வகையில் மாணவர்களுக்கு பாடங்களுக்கூடாக அறிவித்திறனும், நல்மனப்பாங்கும் வளர்க்கப்படும் அதே வேளை புறச்செயற்பாடுகளுக்கூடாகவும் தலைமைத்துவம், விட்டுக்கொடுப்பு, பொறுப்புக்களை ஏற்றல், வெற்றி தோல்விகளை ஏற்கும் மனப்பாங்கு, சிறந்த தொடர்பாடல், ஆண்கள், பெண்கள் சகஜமாக பழகும் விதம், நேர்மை, பணிவு, புரிந்துணர்வு, அடக்கம், அர்ப்பணிப்புடன் செயற்படல், நியாயம், தாராள மனப்பான்மை போன்ற தலைமைத்துவப் பண்புகள் கலவன் பாடசாலையில் மாணவர்களுக்கு புகட்டப்படுகிறது. இந்த வாய்ப்பு தனிப் பாடசாலை மாணவர்களுக்கு மறுக்கப்படுகின்றது. இதனால் தனிப்பாடசாலை மாணவர்கள் ஆண், பெண்ணுடன் சகஜமாக பழகும் தன்மை அற்றவர்களாக உள்ளனர்.

"கூடி வாழ்ந்தால் கோடி நன்மை", "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு", "ஒற்றுமையே பலம்", "அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு", "ஒன்றிணைந்தே செயற்படு" என்கிறது இலக்கியம். மாணவ, மாணவிகள் ஒன்றுபட்டு மகிழ்ச்சிகரமாக தமது ஆளுமைகளை வளர்ப்பதற்கு கலவன் பாடசாலையே துணைபுரிகின்றது. எனவே ஆக்கபூர்வமான ஆளுமைகள் வெளிப்படுத்தப்படுவதற்கு கலவன் பாடசாலையே துணை புரிகின்றது.

மோ.ஜெனனி, உருத்திரபுரம்.





## காதல்......

உன்னைப் பார்த்த நாள் முதல்
எனக்குள் பல கோடி பட்டாம்பூச்சிகள்
சிறகடித்துப் பறப்பதைப் போல்
ஓர் உணர்வு- நீ
எனக்காகப் பிறந்தவன் என்றும்- நான்
உனக்காக பிறந்தவள் என்றும்
உணர்த்தியது நம்முடைய சந்திப்பு
என் மீதான உன் காதல் எனக்கு
கடலின் ஆழத்தையும் விட
வானத்தின் எல்லையையும் விட
பல மடங்கென உணர்த்தியது
உனக்கும் எனக்குமான இடைவெளி
அதிகமாக இருக்கலாம்- ஆனால்
நம் இருவருடைய அன்பிற்கும்
இடைவெளியே இல்லை.
உன் கரம் பிடித்து வாழனும்
பல கோடி வருடம்........
எத்தனை ஜென்மம் எடுத்தாலும்
என்னுடைய இதயத்துடிப்பு
உனக்காக மட்டுமே தான்.........
என்றும் அன்புடன் உன்



ரி. சுகி
சாவகச்சேரி.

## சாதிக்கப் பிறந்தவன் நீ...

சாதிக்க பிறந்தவன் நீ........
சரித்திர ஏடு அதன் நெஞ்சில்
உன்னை அழுத்தமாகப்பச்சை
குத்த வேண்டும்.
முயற்சி செய்து வானத்து
விண் மீன்கள் எண்ணச் சொல்லவில்லை..
உன்னை நம்பும் உன் பெற்றோரின்
கனவுகளை நினைத்துப்பார்க்கச்
சொல்கின்றேன்.
உலகை திருத்தச் சொல்லவில்லை.......
அழுக்குகள் நிறைந்த உன்னை
ஒரு முறையாவது எட்டிப்பார்க்கச்
சொல்கின்றேன்.
வீதியைப் பார்........
விதி செய்த சதியால் சுருண்டு
கொண்டிருக்கின்றது
எத்தனையோ உயிர்கள் பசியால்....
அன்னை தெரேசா போல்
ஆகச் சொல்லவில்லை.........
ஏழைக்கு ஒருமுறையாவது அன்னம்
இட்டு ஆறுதல் கூறு
அவர்கள் நெஞ்சில் கடவுளாய் வாழ்வாய்.
உண்மையை உணர்ந்து கொள்.........
கடவுள் என்ற எவரும் இல்லை
காந்தியில் இருந்து இன்று தமிழுக்காக சாகும்
தலைவன் வரை கடவுள் தான் நமக்கு.
நாட்டிற்காக அந்நாட்டின் உயிர்களுக்காக
பிறருக்காக பிறர் நலனுக்காக வாழும்
ஒவ்வொரு வரும் கடவுள்தான்.

தமிழ்தம்பி
பேசாலை (மன்னார்)

## பேனையின் காதல்

உன் மேனி
தொடும்
கண்கள்
பல்லாயிரம்
ஆனாலும்
உன்
உயிர்
தொடும்
என் கண்களும்
கரங்களும்
கவி நூறு
எழுதும்- என்
பேனை
பல முறை
சொல்லும்
உன் காதல்!

சா. ஜிந்துஜா
கோண்டாவில்



## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :- ..............................................................

முகவரி : ..............................................................

..............................................................

.............................                    .............................
திகதி                    கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## விமர்சனம்

நீங்களும் எழுதலாம்....

**மாணவர்களின் ஆற்றலை வளப்படுத்துவது**

**கலவன் பாடசாலைகளா?**
**தனிப் பாடசாலைகளா?**

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.

தரமான விமர்சனங்கள் பிரசுரமாவதோடு சிறந்த விமர்சனங் களுக்குப் பரிசுகளும் வழங்கப்படும்.

## உயிர் கொடு.....




உனக்காக மலரும் என்
நாள்கள் அத்தனையும்
நீ இன்றி வீணாகிப் போகிறதே
புரியவில்லையா
என் தவிப்பு
நீயின்றி நகரும் நிமிடங்கள்
வருடங்களையும் தாண்டி
ஜென்மங்களாகி
மரணிக்க முன்
என் நாள்களோடு சேர்த்து
எனக்கும் உயிர் கொடு
உன் வருகையால்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## செல்லப்பா இராசதுரை (வர்த்தகர் சின்னக்கிளி)



கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா இராசதுரை (சின்னக்கிளி) 04.12.2012 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், உத்திரத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம்- அன்னமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான அன்னம்மா, நடேசு, சண்முகம்பிள்ளை, கனகரத்தினம் மற்றும் வள்ளியம்மை, புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ் சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை, சேனாதி ராஜா, பொன்னுத் துறை, மாணிக்கம் மற்றும் இராசமணி, பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், பாமினி, தாயாபரன், பிரபாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், தவபாலச் சந்திரன் (பொறியியலாளர் - ஆஸ்திரோலியா), கிரிஜா (ஆசிரியர் கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனும், சுபேசன் (சுஜன் - கணக்காளர் ஆஸ்திரேலியா), சுஜித்தா விக்னகரன் (இருதய சந்திரசிகிச்சை நிபுணர் - ஆஸ்திரேலியா), விக்னகரன் (கணினி மென்பொருள் பொறியியலாளர் - அஸ்திரேலியா) தாரணி (பாமசிஸ்ற் - ஆஸ்திரேலியா), மதீபன் (ஆசிரியர் - யாழ் இந்துக் கல்லூரி), பிரசாத் (கனடா), லக்ஸ்மன், கீர்த்திகன், சுவேதிகா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.12.2012) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

கே.கே.எஸ் வீதி,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.
0212223526

தகவல்:
இ.தயாபரன் (மகன்)

(26412)(2)

# 90 ஆம் நாள் நினைவஞ்சலி



மண்மகிழ
25.08.1983

நெஞ்சம் நெகிழ
08.09.2012

## கிருஸ்னாணாதம் பகீதரன்

நீதிமன்றமதில் அலுவலக பணியாளனாய்
ஆர்வமுடனும் எல்லோரிடமும் அன்பாகவும்
பெரியவர்களிடத்தில் பணிந்து இயல்பாகவும்
சிறப்பாகவும் வேலை செய்தவனே.....

நாள்கள் தொண்ணூறு ஆனாலும் ஆறவில்லை எம் துயரம்
நாம் இருக்கும் வரை அகன்றிடுமோ உம் நினைவு
கருணையின் சிகரமாய் எளிமையில் உருவாய்
என்றென்றும் எங்கள் உள்ளங்களில் ஓடிக் கொண்டே இருக்கும்...



அன்பின் வசிப்பிடமே அமைதியின் உறைவிடமே பகீரதா?
தொண்ணூறு நாள்கள் ஆனதடா பகீரதா?
ஆறவில்லை எம் துயரம் எங்கே சென்றாயோ?
எம் மூச்சு உள்ளவரை மறவாதடா உன் நினைவு

அன்றாட வாழ்வதனில் எப்போதும் உன் நினைவுகள்
காலங்கள் மாறலாம் கோலங்கள் மறையலாம்
ஆனால் உன் மீது கொண்டுள்ள அன்பு மட்டும்
என்றும் மாறாது வளர்ந்து கொண்டே இருக்கும்.....

நீங்கா நினைவுகளுடன்

பெரியார் பகுதி,
அல்வாய் கிழக்கு, அல்வாய். அப்பா, அம்மா, சகோதரர்கள்.

(ශ/3023)(2.6)

# கண்ணீர் அஞ்சலி

## அமரர்
## குமாரவேலு வேலுப்பிள்ளை



"வையத்துள் வாழ்வாங்குவாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்."
"சித்த மலம் அறிவித்து சிவமாக்கி எனையாண்ட அத்தன்
எனக்கருளியவாறு ஆர் பெறுவார் அச்சோவே."

எல்லோராலும் அன்பாகநேசிக்கப்பட்ட **குமாரவேலு வேலுப்பிள்ளை**
அவர்களின் பிரிவினால் ஆழ்ந்த துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில்
நாமும் இணைந்துகொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி பெற
காரைநகர் களபூமி திக்கரை முருகனை வேண்டி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

**C.S.K. சிவபாதசுந்தரம் குடும்பம்,**
சிவா வர்த்தக நிலையம், 102, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
உரிமையாளரும், ஊழியர்களும்.

(26454)(2-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர்
திரு.மகேஸ்வரன்அவர்களின் அன்புத்தாயார்

**கந்தையா செல்லம்மா**

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலரும் அனைத்துஉத்தியோகத்தரும் — பிரதேசசெயலகம், ஊர்காவற்றுறை.

(26460)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பொன்னம்பலம் கெங்காதேவி

சாந்தா வீதி, தையிட்டியைப் பிறப்பிடமாகவும் பட்டியோலை லேன் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட நேற்று(05.12.2012) புதன்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(06.12.2012) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பட்டியோலை லேன்,
உடுவில்.

தகவல்:
மகன்.

(26461)(14)



### நவசி தம்பிராசா

வேலணை மேற்கு, 8 ஆம் வட்டாரம், அம்பிகை நகரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நவசி தம்பி ராசா நேற்று முன்தினம் (04.12.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவசி - சின்னாச்சி தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற ஆச்சிமுத்துவின் அன்புக் கணவரும், நாகேஸ்வரி, தர்மதாஸ், செல்வராசா (ஜேர்மனி), கமலாதேவி, சிவசோதி, தவராசா (லண்டன்), தனபாலராசா ஆகியோரின் அன்புத் தந்தையும், சற்குணநாதன், நாகலெட்சுமி, மஞ்சு (ஜேர்மன்), சோதிலிங்கம், சர்வானந்தன், மாலா (லண்டன்), ஜெயா ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.12.2012) வியாழக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அம்பிகை நகர் அம்பலவி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேலணை மேற்கு,
8 ஆம் வட்டாரம், அம்பிகைநகர். (28410)(3)

தகவல்:
பிள்ளைகள்



### திருமதி கிறிஸ்மஸ் செல்வமலர் தங்கத்துரை

(Retired Teacher, St, John's Bosco, Jaffna)

திருமதி கிருஸ்மஸ் செல்வமலர் தங்கத்துரை அவர்கள் நேற்று முன்தினம் (04.12.2012) வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற D.N.தங்கத்துரையின் பாசமிகு மனைவியும், சாரதாவின் அன்புத் தாயும், பெனடிக்ராசரட்ணத்தின் மாமியும், யொஹான்கிருஷாந், டானியல்ஹர்ஷாந் ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்ற ராசாநல்லையா மற்றும் ரஞ்சி அழகக்கோன், லிடியாசபாரட்ணம், மணி இரா ஜகுணநாயகம், டேவிட் நல்லையா, காலஞ்சென்ற பிராங் நல்லையா, ராணி செபரட்ணம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின்பூதவுடல்இன்று (06.12.2012) வியாழக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணிவரை பொரளை ஜெயரட்ண மலர்ச்சலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, ஆராதனையின் பின் நல்லடக்கத்துக்காக கனத்தை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

20, 1/1, Asiri Mawatha
Kalubowila.
T.P: 0112765115
0779152 765

தகவல்:
சாரதா-ராசரட்ணம்
(மகள்)

# அக்கரைப்பற்றில் கல்வி அதிகாரிகள் சுயமாக இயங்க நடவடிக்கை எடுக்கப்படும்

## கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஏ.எல்.தவம் உறுதி

அக்கரைப்பற்று, டிசெ.6

அக்கரைப்பற்றுக் கல்வி வலயத்தில் இடம்பெறும் அரசியல் தலையீடுகளைத் தடுத்து கல்வி அதிகாரிகள் சுயமாக இயங்குவதற்குரிய நடவடிக்கைகளை உடன் மேற்கொள்வதாக கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஏ.எல்.தவம் அக்கரைப்பற்று தஹ்ரீர் பவுண்டேசன் கல்வி அபிவிருத்திக் குழுவிடம் உறுதியளித்துள்ளார்.

அக்கரைப்பற்று தஹ்ரீர் பௌண்டேசன் கல்வி அபிவிருத்திக்குழு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.எல். தவத்தை கடந்த சனிக்கிழமை சந்தித்து, விடுத்த வேண்டு கோளின்போதே மேற்படி உறுதி அளிக்கப்பட்டது.

ஏ.ரீ.நக்கீல் ஆசிரியர் தலைமையில் இடம்பெற்ற இச் சந்திப்பில் அக்கரைப்பற்று வலயக் கல்வியை சீர்செய்வதற்குக் கல்விவலயத்தில் இடம்பெறும் அரசியல் தலையீடுகள் மற்றும் அதிபர் தரம் உள்ள அதிபர்களைத் தரமுள்ள பாடசாலைகளுக்கு நியமித்தல், இடமாற்றங்களின்போது முறையான இடமாற்றங்களை மேற்கொள்ளல், குறிப்பாக அக்கரைபற்று பாடசாலைகளில் வீழ்ச்சியடைந்துள்ள கல்வியை மீண்டும் மேம்படுத்துவதற்கு ரி ஒழுங்குகளைச் செய்தல், கல்வியில் முடியுமானவரை அரசியல் தலையீடு இல்லாமல் அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளல் போன்ற பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இதனைச் செவிமடுத்த கிழக்கு மாகாணசபை உறுப்பினர் மேற்கூறப்பட்ட விடயங் களைத் தீர்த்துவைப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு தீர்வை பெற்றுத்தருவதாக கல்வி அபிவிருத்திக்குழு விடம் உறுதியளித்தார்.

இந்தச் சந்திப்பில் கல்வி அபிவிருத்திக் குழுவைச் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள் பலர் கலந்து கொண்டனர்.


(வ)

### காணி விற்பனைக்குண்டு

இளவாலைச் சந்தியில் இருந்து 400 மீற்றர் தூரத்தில் மானிப்பாய் இளவாலை வீதியில் 10 பரப்புக் காணி விற்பனைக் உண்டு.
தொடர்பு: 077 3151 723

## Our Deepest Sympathy

**Rt.Rev. Dr. L.R. Antony**
**Bishop Emeritus - Trincomalee and Batticaloa**



It is with a deep sense of sorrow we mourn the demise of Rt. Rev.Dr. L.R. Antony, Bishop Emeritus of Trinco / Batticaloa Diocese. We thank tha Lord Almighty God for the long years of Spiritual Services rendered by the late Bishop in the vineyard of the Lord.

**May his soul rest in peace.**

Member's of the Old Boys' Association
St. Patrick's College, Jaffna.

59, St.Patrick's Road, Jaffna.




### வாகனம் வாடகைக்குத் தேவை

எமது நிறுவனத்துக்கு DIMO பட்டா, மற்றும் கூலர் ரக வாகனம் மாத வாடகைக்குத்தேவை
தொடர்புக்கு:0777276320

(26411)(6-7)

### விற்பனையாளர் தேவை

பிரபல கட்டடப் பொருள் விற்பனை நிலையத்துக்கு அனுபவமுள்ள விற்பனையாளர்கள் தேவை.
தொடர்புக்கு:
EAGLE HARDWARE
135,ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம்.

(26411)(7-6)

### காணி விற்பனைக்கு

நெடுந்தீவு கிழக்கு , 13ஆம் வட்டாரம் பரி.அந்தோனியார் கோயில் வீதியின் அருகில் ,10 பரப்பளவு கொண்ட பனம் காணி விற்பனைக் குண்டு
விபரங்களுக்கு:0750738902

(26380)(14)

### டாடா அப்பர் எஸ்பட்டா

முன் கண்ணாடி (WIND SCREEN) விற்பனைக் குள்ளது
277ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(26462)

### யா/ அம்பன் அமெரிக்க மிசன் பாடசாலை, குடத்தனை

புதிய அதிபரை வரவேற்கின்றோம்

**திரு. வேல்விநாயகம் பரமேஸ்வரன்**
B.Sc.Dip. in Edu.



அவர்கள் அதிபர் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து (SLPS 2:II) எமது பாடசாலையில் 19.11.2012 அன்று அதிபர் பொறுப்பினை ஏற்றுக் கொண்டமையினை அன்புடன் வரவேற்பதுடன் தனது அர்ப்பணிப்பான சேவையினால் எமது பாடசாலையின் வினைத்திறனை அதிகரிப்பதற்கும் அவரது வாழ்க்கையில் பல பட்டங்கள் பதவிகள் பெற்று மிளிர்ந்திடவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வரவேற்று வாழ்த்துகிறோம்.

பாடசாலை ஆசிரிய நலன்புரி சங்கம்
பாடசாலை அபிவிருத்தி சங்கம்
பழைய மாணவர் சங்கம்



## PANDA Special Offer 875/= Only



- PANDA Antivirus உங்கள் Computer க்கு அல்ல !! உங்களுக்காக!!!–It's for you
- க்ளவுட்பேஸ் (Cloud Base)ஐ அடிப்படையாக கொண்டு சேவை வழங்கும் ஓர் அறிவுபூர்வமான ஒரு மென்பொருளாகும்.
- எல்லாவிதமான வைரஸ்களுக்கும் எதிராக சரியான முறையில் செயற்படும்
- PANDA இலகுவானது , வேகமானது & முழுமையானது . . .
- PANDA எந்த விதத்திலும் உங்கள் கணனியின் தொழிற்பாட்டிற்கு இடையூறு விளைவிக்காது.

NO. 1 Cloud Antivirus Guard 2012
Rated by AV Comparatives
A product from Spain

கையிருப்பில் உள்ளவரை மட்டுமே!!!

Available At
**SDS Computer Technologies**
No.42/2,College Road,Jaffna. Tel: 0212224500 Mob: 0777874705


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரிட்டனின் நகரசபை உறுப்பினராக இலங்கையர் தெரிவு

இலங்கையைச் சேர்ந்த ஒருவர் முதன்முறையாக பிரிட்டனின் நகரசபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.


ஹேவட்ஸ் ஹின் மேற்கு சஸஸ்ஹி நகர உறுப்பினராகவே அவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஆளும் கன்ஸர்வேடிவ் கட்சியின் உறுப்பினரான இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட சுஜான் விக்கிரமஆராய்ச்சி என்பவரே இவ்வாறு நகர சபை உறுப்பினராகத் தெரிவாகியுள்ளார்.

தற்போது பிரிட்டனின் அஷென் கிராவன்ட் பிரதேசத்தில் வசித்து வரும் அவர் வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்ட முதலாவது ஆசிய நாட்டு பிரஜை என்பதும் குறிப்பிடத்தக்கது. (வ)

# ஈழத்தமிழருக்காக சென்னையில் நடைபெற்றது சிறப்பு வழிபாடு

ஈழத்தமிழர்கள் வாழ்வில் இருள் நீங்கி அவர்கள் இழந்த உரிமைகள், நிலங்கள் அனைத்தும் திரும்பக் கிடைக்கப்பெற்று அவர்கள் மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்ற வேண்டுகோளை முன்வைத்து சென்னையில் நேற்று முன்தினம் இரவு சிறப்பு வழிபாடு இடம் பெற்றது.

சென்னையில் வள்ளலார் மறைந்த மேட்டுக்குப்பம் சித்திவளாகத்தில் சிறப்பு மகாமந்திர வழிபாடு செய்யப்பட்டது. முதன்முறையாக அங்கு இவ்வாறான வழிபாடு நடைபெற்றது. சன்மார்க்கச் சங்கத்தைச் சார்ந்த சுமார் ஆயிரம் மக்கள் குறித்த வழிபாட்டில் கலந்து கொண்டு ஒரே குரலில் அருட்பெரும் ஜோதி ஆண்டவரிடத்தில் கோரிக்கை வைத்தனர்.



இறந்த ஈழத்து உறவுகளுக்கு மெழுகுதிரி ஏந்தி அஞ்சலி செலுத்தப்பட்டது. நேற்று முன்தினம் இரவு 11 மணியில் இருந்து 12 மணிவரை தொடர் 'அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை' என்ற மகா மந்திர ஓதல் நடைபெற்றது. தமிழர் பண்பாட்டு நடுவம் இந்த சிறப்பு வழிபாட்டுக்குத் தேவையான ஏற்பாடுகளை செய்தது. மேலும் ஆயிரக் கணக்கான வள்ளலார் படம் பொருந்திய 'வாழ்க தமிழ், தமிழராய் இணைவோம்' என்ற பசை ஒட்டிகளும் மக்களுக்கு வழங்கப்பட்டது. வள்ளலார் வழி காட்டிய சன்மார்க்கச் சங்கத்தைச் சார்ந்த பக்தர்கள் பலரும் ஈழ மக்களுக்கு நல்லதொரு தீர்வு கிடைக்க வேண்டும் என்று உருக்கமுடன் பிரார்த்தனை செய்தனர். (வ)

## உண்ணாவிரதம் இருக்கும் பகீரதனின் உடல்நிலை மோசம்

### பூந்தமல்லி சிறப்பு முகாமில்

பூந்தமல்லி சிறப்பு முகாமில் விசாரணையே இல்லாமல் 5 வருடங்களுக்கு மேலாக தம்மை அடைத்து வைத்திருப்பதை எதிர்த்துக் கடந்த 30 ஆம் திகதி தொடக்கம் உண்ணாவிரதம் இருந்து வரும் ஈழத்தமிழ் அகதியான பகீரதனின் உடல் நிலை மிகவும் பாதிப்படைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 5.3.2007 ஆண்டு இலங்கைக்குப் பொருள்கள் கடத்தியவர்களுக்கு பணம் கொடுத்தார் என்ற வழக்கில் கைது செய்யப்பட்டு, திருச்சி சிறையில் தடுத்து வைக்கப்பட்டு இருந்தார். பின்னர் பிணையில் வெளிவந்த அவரைச் சிறை வாசலிலேயே கைது செய்த கியூ பிரிவினர் செங்கல்பட்டுச் சிறப்பு முகாமில் அடைத்தனர்.

செங்கல்பட்டுச் சிறப்பு முகாமில் அவர் உட்பட பலர் தங்களை விடுதலை செய்யக்கோரி கடந்த 2.2.2010 அன்று உண்ணாவிரதம் இருந்தனர். உண்ணாவிரதம் இருந்தவர்கள் பொலிஸாரைத் தாக்க முயன்றார்கள் என்று பொய்யான குற்றம் சுமத்தி இரவோடு இரவாக 200 காவல்துறையினர் முகாமுக்குள் நுழைந்து உண்ணாவிரதம் இருந்தவர்கள் மீது தாக்குதல் நடத்தினர்.

> 2.2.2011 வெளியில் இருந்து வழக்கை நடத்திக் கொள்ளலாம் என்று இவர் விடுவிக்கப்பட்டார். விடுதலை செய்யப்பட்ட பகீரதன் வழக்கை முடிக்காமல் நாட்டைவிட்டு வெளியேற முயன்றார் என்று 4.7.2012 அன்று கைது செய்து மீண்டும் பூந்தமல்லி சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டார்.

உண்ணாவிரதத்தை ஒருங்கிணைத்த பகீரதன் உட்பட முக்கியமான 15 பேர் கைது செய்யப்பட்டு வேலூர் சிறையில் அடைக்கப்பட்டனர். 43 நாள்களுக்கு பின் பிணையில் விடுதலை செய்யப்பட்ட இவர்களை



மீண்டும் கியூ பிரிவினர் கைது செய்து பூந்தமல்லி முகாமில் அடைக்கப்பட்டனர்.

2.2.2011 வெளியிலிருந்து வழக்கை நடத்திக் கொள்ளலாம் என்று இவர் விடுவிக்கப்பட்டார். விடுதலை செய்யப்பட்ட பகீரதன் வழக்கை முடிக்காமல் நாட்டைவிட்டு வெளியேற முயன்றார் என்று 4.7.2012 அன்று கைது செய்து மீண்டும் பூந்தமல்லி சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டார்.

தற்போது விடுதலை செய்யுமாறு கோரி உண்ணாவிரதம் இருக்கும் பகீரதனின் உடல் நிலை மோசமாகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## செவ்வாயில் மனிதர்களை குடியேற்ற அமெ. விண்வெளி நிறுவனம் திட்டம்

லண்டன், டிசெ.6

செவ்வாய்க் கிரகத்தில், 80 ஆயிரம் பேரை குடியேற்றத் திட்டமிட்டுள்ளதாக அமெரிக்க விண்வெளி நிறுவனம் தெரிவித்துள்ளது.

சூரியக் குடும்பத்தைச் சேர்ந்த செவ்வாய்க் கிரகம், பூமியிலிருந்து, 57 கோடி கி.மீ. தூரத்தில் உள்ளது. இந்த சிவப்பு நிற கிரகத்தில் மனிதன் வாழ்வதற்கு ஏற்ற சூழல் குறித்து அமெரிக்காவின் நாசா விஞ்ஞானிகள் பல ஆண்டுகளாக ஆராய்ச்சி நடத்தி வருகின்றனர்.

இது தொடர்பாக மேலும் ஆராய கடந்த ஆண்டு நவம்பர் மாதம் ரோவர் விண்கலம் செலுத்தப்பட்டது. அந்த விண்கலம், செவ்வாய்க் கிரகத்தில் ஓகஸ்டில் தரையிறங்கியது. ரோவர் விண்கலத்துடன் இணைக்கப்பட்டிருந்த 'கியூரியோசிட்டி' என்ற ரோபோ வாகனம் செவ்வாய்க் கிரகத்தின் சுற்றுச்சூழல், மண் அமைப்பு உள்ளிட்டவை குறித்து ஆய்வு நடத்தி வருகிறது.

அமெரிக்காவின் 'ஸ்பேஸ் எக்ஸ்' என்ற நிறுவனம், சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி நிலையத்துக்கு விண்கலங்களை அனுப்பி வருகிறது. தற்போது அந்த நிறுவனம், செவ்வாய்க் கிரகத்தில் மனிதர்களைக் குடியேற்றத் திட்டமிட்டுள்ளது.

இதுகுறித்து அந்நிறுவனத்தின் தலைவர் எலோன் மஸ்க் தெரிவித்ததாவது:-

செவ்வாய்க் கிரகத்துக்கு முதல் கட்டமாக 10 பேரை அனுப்பத் திட்டமிட்டுள்ளோம். இதற்கு கட்டணமாக தலா, 2.5 கோடி ரூபா வரை அறவிட உள்ளோம். இருபது ஆண்டுகளில் 80 ஆயிரம் பேரை குடியேற்ற திட்டமிட்டுள்ளோம்.

சூரிய ஒளி தாக்காத வகையில் வீடுகளை அமைத்தல், பிராண வாயுவை உருவாக்கும் கருவிகளை நிறுவுதல், உறைந்து கிடக்கும் பனிக் கட்டிகளைக் கண்டுபிடித்து, குடிதண்ணீராகப் பயன்படுத்துதல் போன்ற பணிகளைச் செய்ய வேண்டி உள்ளது. பயணிகளை அழைத்துச் செல்ல பால்கன் - 92 ரக விண்கலத்தை பயன்படுத்துவோம் - என்றார். (வ)

## மீன் இனத்தை அறிய பாகம் கொழும்புக்கு

தென்மராட்சி, டிசெ. 6

ஊர்காவற்றுறை கடற்பகுதியில் இறந்த நிலையில் கரையொதுங்கிய மீனின் இனத்தை பரிசோதிப்பதற்காக மீனுடைய சிறிய பாகத்தை எடுத்துக் கொழும்பு கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சுக்கு அனுப்பியுள்ளதாக யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் என்.கணேசமூர்த்தி தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஊர்காவற்றுறை ஊறுண்டி கடற்பகுதியில் இறந்த நிலையில் இராட்சத மீன் ஒன்று அண்மையில் கரையொதுங்கியிருந்தது. இந்த மீன் கடற்கரையில் இருந்து 150 மீற்றர் தூரத்தில் மிதந்து கொண்டிருந்தது. 34 அடி நீளம் கொண்ட இந்த மீன் ஆழ் கடலில் வசிக்கக் கூடியது என்றும் மீனின் உடலில் காயங்கள் ஏற்பட்டு இரத்தம் கசிந்த நிலையில் இருந்தது எனவும் இது கப்பல்கள் அல்லது பாறைகளில் சிக்கி இருக்கக் கூடும் எனவும் கூறப்பட்டது.

ஊர்காவற்றுறைப் பிரதேச சபையின் உதவியுடன் கரைக்கு குறித்த இறந்த மீன் கொண்டு வரப்பட்டது.

ஊர்காவற்றுறை நீதிமன்றம் இந்த மீனை புதைத்து விடுமாறு பிரதேச சபைக்கு உத்தரவிட்டது.

இந்த மீன் திமிங்கல சுறா இனமாக இருக்கக்கூடும் என எண்ணப்படுகிறது எனவும் பரிசோதனைக்காக மீனுடைய ஒருசிறிய பாகம் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டது. (ம-13)

## தென்மராட்சிக்கு இரு பிரதிக்கல்வி பணிப்பாளர்கள்

தென்மராட்சி, டிசெ. 6

தென்மராட்சிக் கல்வி வலயத்துக்கு இரண்டு பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் வடமாகாணக் கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை கல்வி நிர்வாக சேவை வகுப்பு III இக்கு தெரிவு செய்யப்பட்டவர்களில் அ.அகிலதாஸ், திருமதி வ.மேகலிங்கம் ஆகியோர் தென்மராட்சி கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களாகக் கடந்த முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்பட்டுள்ளனர். (ம-9)

## இராமேஸ்வரம் மீனவரை மீண்டும் தாக்கிய இலங்கைக் கடற்படை

கச்சதீவு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்த இராமேஸ்வரம் மீனவர்களின் வலைகளை இலங்கைக் கடற்படை அறுத்தெறிந்து மீண்டும் அட்டூழியத்தில் ஈடுபட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இராமேஸ்வரத்திலிருந்து நேற்று முன்தினம் இரவு 698 படகுகளில் மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கச் சென்றனர். அவர்கள் கச்சதீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த போது, அங்கு சென்ற இலங்கை கடற்படையினர் சுமார் 15 படகுகளின் வலைகளை அறுத்தெறிந்தனர்.

அந்தப் பகுதியில் மீன்பிடிக்கக்கூடாது என்று எச்சரித்த அவர்கள், மீனவர்களை திரும்பிச் செல்லும்படி கூறியதால், மீனவர்கள் வெறுங்கையுடன் கரை திரும்பினர் என்று மேற்படி ஊடகங்கள் தெரிவித்தன. (வ)





தேசிய மட்டத்தில் [illegible] போட்டியில் யாழ். தேசிய தொழில்நுட்பக் கல்லூரியின் தேசிய சான்றிதழ் தரப் பொறியியல் [illegible] கற்கை நெறி மாணவர்களால் கண்டுபிடிக்கப்பட்ட தேங்காய் உரிக்கும் இயந்திரம் இரண்டாம் இடத்தையும் கைத்தொழில் துறை [illegible] கண்டுபிடிக்கப்பட்ட [illegible] இயந்திரம் சான்றிதழையும் பெற்றுக் கொண்டன. (ம-14)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீலங்கா பாடசாலை ரக்பிச் சங்கம் 12 வயதுப் பிரிவுக்குட்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையே அகில இலங்கை ரீதியிலான மைலோ மினி ரக்பிப் போட்டியை நடத்திவருகிறது.

இதன் ஓர் அங்கமாக யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான ரக்பி போட்டி நேற்றுப் புதன்கிழமை சென். ஜோன்ஸ் கல்லூரியில் இடம்பெற்றது. போட்டியில் பங்குபற்றிய வீரர்கள் பயிற்றுநர்கள் மற்றும் விருந்தினர்களுடன். (த-23)

# வெற்றி பெற்ற அணிகள்



யாழ்ப்பாணம், டிசெ. 06

ஆளுநர் வெற்றிக்கிண்ணத்துக்கான வடமாகாண அமைச்சுக்களிடையே நடைபெற்றுவரும் லீக் முறையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி நேற்றுப் புதன்கிழமை யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றிபெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் கல்வி அமைச்சு அணியை எதிர்த்து உள்ளூராட்சி அமைச்சு அணி மோதிக்கொண்டது.

இதில் கல்வி அமைச்சு அணி 10:9 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

இரண்டாவதாக இடம் பெற்ற ஆட்டத்தில் பிரதம செயலாளர் கொத்தணி அணியை எதிர்த்து உட்கட்டமைப்பு அமைச்சு அணி மோதிக்கொண்டது.

இதில் பிரதம செயலாளர் கொத்தணி அணி 13:10 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.

மூன்றாவதாக இடம் பெற்ற ஆட்டத்தில் பிரதம செயலாளர் கொத்தணி அணியை எதிர்த்து உள்ளூராட்சி அமைச்சு அணி மோதிக்கொண்டது. இரு அணியினரும் தலா 9 புள்ளிகளைப் பெற்றதினால்,ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (த-23)

# பாடசாலை 19 வயது அணிகளின் உதைபந்தாட்டம் இன்று ஆரம்பம்

**மானிப்பாய் இந்துக் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி மைதானங்களில் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.**

யாழ்ப்பாணம், டிசெ.06

யாழ்ப்பாணம் பாடசாலை விளையாட்டு சங்கம் நீண்ட காலத்துக்குப் பின்னர் நடத்தும் பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி மானிப்பாய் இந்துக் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி மைதானங்களில் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

ஆரம்பநிகழ்வுகள் காலை 8 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

ஆரம்பநாள் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலனும் சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் பா.விக்னேஸ்வரன், வடமாகாண திறைசேரி பிரதிப் பிரதம செயலாளர் எஸ். மனோரஞ்சன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (23)

# கிரிக்கெட் போட்டி

வதிரி ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகம் நடத்தும் ஐந்து பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட ஆறுபேர் பங்குபற்றும் கிரிக்கெட் போட்டி சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் மாலுசந்தி மைக்கல், கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானங்களில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் அன்றைய தினம் காலை 8 மணிக்கு முன்பதாக மைதானத்துக்குச் சமூகம் தந்து தமது பதிவினை மேற்கொண்டு போட்டியில் பங்குபற்றலாம் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (23)

# வென்றது யூனியன் அணி

யாழ்ப்பாணம்,டிசெ. 06

யாழ்.உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் 11 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த செவ்வாய்க்கிழமை குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்ற காலிறுதியாட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்று அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது.

பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆனைக் கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றதன் மூலம் அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது. (23)



தென்மராட்சி கல்வி வலய ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான வலய மட்ட தடகளப் போட்டியில் தெற்கு அ.மி.த.க. பாடசாலை மாணவன் உ.சங்ஜீஸ் 7 வயது கீழ் ஆண்கள் பிரிவில் சிறந்த மாணவனாக தெரிவு செய்யப்பட்டார்.சிறந்த வீரருடன் வித்தியாலய அதிபர் வே.சுந்தரலிங்கம் காணப்படுகின்றார். (9)

# வவுனியாவில் மின்னொளியிலான உதைபந்துத் தொடர் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ. 06

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் 18 ஆவது ஆண்டு நிறைவையொட்டியும் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் முன்னாள் வீரர்களான சாந்தன்,யூட்கசன் ஆகியோரின் 11 ஆவது ஆண்டு ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்காகவும் 11 பேர் பங்குபற்றும் லீக் முறையிலான மின்னொளியிலான உதைபந்தாட்டத் தொடர் நாளை வெள்ளிக்கிழமை யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் போட்டியில் 20 கழகங்கள் பங்குபற்றவுள்ளன எனப் போட்டி ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர். (23)

# கல்வி அமைச்சு இறுதியாட்டத்துக்குத் தகுதி

ஆளுநர் வெற்றிக்கிண்ணத்துக்காக வடமாகாண அமைச்சுகளுக்கு இடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடருக்கான 12 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் அரையிறுதி ஆட்டத்தில் கல்வி அமைச்சு அணி 6 இலக்குகளால் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றுள்ளது.

செவ்வாய்க்கிழமை முன்தினம் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் கல்வி அமைச்சு அணியை எதிர்த்து உள்ளூராட்சி அமைச்சு அணி மோதிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய உள்ளூராட்சி அமைச்சு அணி 12 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 52 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதில் ரஜீவ் 20 ஓட்டங்களையும் சுதாகரன் 13 ஓட்டங்களையும் தமது அணிசார்பாகப் பெற்றுக்கொண்டனர்.

பந்து வீச்சில் கல்வி அமைச்சு அணி சார்பில் சயந்தன் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 8 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் நிறஞ்சன் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 14 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும், அனோஜன் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 8 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.53 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கல்வி அமைச்சு அணி 11.3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இதில் நிறஞ்சன் ஆட்டமிழக்காது 16 ஓட்டங்களையும், அற்புதராஜ். 17 ஓட்டங்களை தமது அணிசார்பாகப் பெற்றனர். பந்து வீச்சில் உள்ளூராட்சி அமைச்சு அணி சார்பில் மயூரன் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 8 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளை வீழ்த்தினார். (23)



வடமாரட்சி குரும்பசிட்டி உதயசூரியன் விளையாட்டுக் கழகம் நடத்திய 10 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டம் கடந்த வாரம் மாலு சந்தி மைக்கல் மைதானத்தில் இடம்பெற்றது. இறுதியாட்டத்தில் வெற்றிபெற்ற இமையாணன் விளையாட்டுக்கழக அணித்தலைவருக்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டவர் வெற்றிக் கிண்ணத்தை கையளிக்கிறார். (23)

# பிரதம செயலாளர், உள்ளூராட்சி அணிகள் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றன

**பிரதம செயலாளர் அணி, வடமாகாண உள்ளூராட்சி அமைச்சு ஆகியன வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றன.**

யாழ்ப்பாணம், டிசெ.06

ஆளுநர் வெற்றிக்கிண்ணத்துக்காக வடமாகாண அமைச்சுக்களுக்கிடையே நடைபெற்று வரும் ஆண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் அரையிறுதி ஆட்டங்களில் பிரதம செயலாளர் அணி, வடமாகாண உள்ளூராட்சி அமைச்சு ஆகியன வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றன.

முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் வடமாகாண கல்வி அமைச்சு அணியை எதிர்த்து உள்ளூராட்சி அமைச்சு அணி மோதிக் கொண்டது.

மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தில் உள்ளூராட்சி அமைச்சு அணி இரண்டு நேர் செற்களை வெற்றிகொண்டது.

இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் பிரதம செயலாளர் அணியை எதிர்த்து வடக்கு மாகாண உட்கட்டமைப்பு அமைச்சு அணி மோதிக்கொண்டது.மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தில் பிரதம செயலாளர் அணி இரண்டு நேர் செற்களை வெற்றிகொண்டு 2:0 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இங்கிலாந்து ஆதிக்கம்

இந்தியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணிக்கும், இந்திய அணிக்குமிடையிலான 4 போட்டி கொண்ட டெஸ்ட் தொடரின் 3 ஆவது ஆட்டம் நேற்று ஆரம்பமானது. முதல்நாள் நிறைவில் இங்கிலாந்து அணி சிறப்பான நிலையில் காணப்படுகிறது.

கொல்கத்தா ஈடன் கார்டன்ஸ் மைதானத்தில் இடம்பெறும் இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.


இதன்படி துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இந்திய அணி நேற்றைய நாள் முடிவில் 7 இலக்குகளை இழந்து 273 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. முதலாவது இலக்குக்காக 47 ஓட்டங்களைப் பகிர்ந்த அவ்வணி, ஒரு கட்டத்தில் ஒரு இலக்கை இழந்து 88 ஓட்டங்களுடன் காணப்பட்டது. ஆனால் அதன் பின்னர் இலக்குகள் தொடர்ச்சியாக இழக்கப்பட்டன.

துடுப்பாட்டத்தில் இந்திய அணி சார்பாக சச்சின் டெண்டுல்கர் 76 ஓட்டங்களையும், கௌதம் கம்பீர் 60 ஓட்டங்களையும், யுவ்ராஜ் சிங் 32 ஓட்டங்களையும் பெற்றனர். டோனி ஆட்டமிழக்காது 22 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ஜேம்ஸ் அண்டர்சன் 3 இலக்குகளையும், பனேஷார் 2 இலக்குகளையும், கிரேம் சுவான் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

4 போட்டியைக் கொண்ட இந்தத் தொடரில் ஏற்கனவே நிறைவடைந்துள்ள 2 போட்டியின் நிறைவில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு ஆட்டத்தில் வெற்றிபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

# 34 ஆயிரம் ஓட்டங்களை கடந்தார் சச்சின்



மும்பையில் நடை பெற்று வரும் இங்கிலாந்துக்கெதிரான ஆட்டத்தில் சச்சின் டெண்டுல்கர் 34,000 ஓட்டங்களைக் கடந்து சாதனை படைத்துள்ளார்.

இந்தியாவின் நட்சத்திர வீரரான சச்சின் டெண்டுல்கர், இதுவரை ஆடிய 192 டெஸ்ட் போட்டிகளில் 18,426 ஓட்டங்களையும், 463 ஒருநாள் போட்டிகளில் 15,560 ஓட்டங்களையும் எடுத்து ஒட்டுமொத்தமாக 34 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்திருப்பது இதுவரை எந்த ஒரு கிரிக்கெட் வீரரும் செய்யாத சாதனையாகும்.

# வீரர்கள் தாக்கியதில் போட்டி நடுவர் சாவு



நெதர்லாந்தில் கால் பந்து வீரர்கள் தாக்கியதில் போட்டி நடுவர் பரிதாபமாக உயிரிழந்தார். நெதர்லாந்தில் உள்ள ஹக்கில் ஜூனியர் கால்மபந்து போட்டி நடைபெற்றது. இதன் நடுவராக நெதர்லாந்தின் ரிச்சர்டு நியூவென்ஹுய்ஜன் செயல்பட்டார்.

அப்போது தங்களுக்கு எதிராக தீர்ப்பு வழங்கியதால், நியூ ஸ்லோடன் ஆம்ஸ்டர்டாம் கிளப் அணியைச் சேர்ந்த வீரர்கள் ரிச்சர்டுவை தாக்கி உதைத்தனர்.

இதன்பின்பு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட ரிச்சர்டு உயிரிழந்தார். இதற்கான சரியான காரணம் எதுவென்று அறிவிக்கப்படவில்லை. இது தொடர்பாக 15 முதல் 16 வயதுடைய 3 இளம் வீரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# பொண்டிங்கின் ஓய்வு வருத்தமளிக்கிறது

ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் றிக்கி பொண்டிங்கின் ஓய்வு குறித்துக் கவலையடைவதாக இந்திய அணியின் சகலதுறை வீரர் யுவ்ராஜ் சிங் தெரிவித்துள்ளார். அத்தோடு றிக்கி பொண்டிங் தனக்கு விருப்பமான வீரர்களில் ஒருவர் எனவும் யுவ்ராஜ் சிங் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவரான றிக்கி பொண்டிங் தென்னாபிரிக்க அணிக்கெதிரான 3 ஆவது டெஸ்ட் ஆட்டத்தின் பின்னர் சர்வதேசப் போட்டியிலிருந்து ஓய்வுபெற்றிருந்தார்.

இந்த நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள யுவ்ராஜ் சிங், றிக்கி பொண்டிங் ஓய்வுபெற்றமை குறித்துக் கவலையடைவதாகவும், ஆனால் றிக்கி பொண்டிங் களத்தில் வெளிக்காட்டிய ஆளுமை குறித்து ஆச்சரியமடைவதாகத் தெரிவித்தார்.

சிங்கத்தைப் போன்ற இதயத்தைக் கொண்ட வீரர் றிக்கி பொண்டிங் எனத் தெரிவித்த யுவ்ராஜ், றிக்கி பொண்டிங்கின் களத்தடுப்பு முக்கியமானது எனத் தெரிவித்தார்.றிக்கி பொண்டிங்கைத் தனது விருப்பத்துக்குரிய வீரர்களில் ஒருவர் எனத் தெரிவித்த யுவ்ராஜ், கிரிக்கெட்டின் ஜாம்பவான்களில் ஒருவர் எனவும் தெரிவித்தார்.



பொண்டிங் துடுப்பெடுத்தாடும்போது பார்ப்பதற்கு அழகாக இருக்கும் எனத் தெரிவித்த அவர், இந்திய அணிக்கெதிராக 2003 ஆம் உலகக்கிண்ண இறுதி ஆட்டத்தில் றிக்கி பொண்டிங் பெற்றுக் கொண்ட 140 ஓட்டங்கள் அந்த இறுதி ஆட்டத்தையே இந்திய அணியிடமிருந்து எடுத்துச் சென்றதாகவும் தெரிவித்தார். (5)



# மகேஷ் பூபதி ஓய்வு

ரென்னிஸ் போட்டியிலிருந்து அடுத்த ஆண்டுடன் ஓய்வு பெற உள்ளதாக இந்தியாவின் நட்சத்திர ரென்னிஸ் வீரர் மகேஷ் பூபதி கூறியுள்ளார்.

இது குறித்து பூபதி கூறுகையில், தனது ரென்னிஸ் வாழ்க்கையில், மார்ட்டினா ஹிங்கிஸ் முதல் வுட்பிரிட்ஜ் வரை பல்வேறு வீரர், வீராங்கனைகளுடன் இணைந்து விளையாடி உள்ளேன்.


தற்போது குடும்பத்தினருடன் வாழ்க்கையை கழிக்கும் நோக்கில் ஓய்வு பெற முடிவு செய்துள்ளேன் எனவும் கூறியுள்ளார்.

இந்தியாவின் மகேஷ் பூபதி, கிராண்ட்ஸ்லாம் போட்டியில் இரட்டையர் பிரிவில் 4 பட்டங்களையும், கலப்பு இரட்டையரில் 8 பட்டங்களையும் வென்றுள்ளார். (5)

# வென்றமை மகிழ்ச்சி

ஆஸ்திரேலியாவுக்கெதிரான தொடரைக் கைப்பற்றியமை குறித்து மகிழ்ச்சியடைவதாக தென்னாபிரிக்க அணியின் தலைவர் கிரேம் ஸ்மித் தெரிவித்துள்ளார். குறிப்பாக கடந்த காலங்களில் தென்னாபிரிக்க அணியானது ஆஸ்திரேலியாவில் தோல்விகளைச் சந்தித்திருந்த நிலையில் இந்த வெற்றி மகிழ்ச்சி தருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

கிரேம் ஸ்மித் தலைமையில் தென்னாபிரிக்க அணி ஆஸ்திரேலிய அணியை ஆஸ்திரேலியாவில் வைத்து இதுவரை 2 தடவைகள் டெஸ்ட் தொடர்களில் தோற்கடித்துள்ளது. 2005 ஆம் ஆண்டு முதன்முதலாக அணித்தலைவராக ஆஸ்திரேலியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்ட கிரேம் ஸ்மித், இவ்வாறான வெற்றிகள் கிடைக்கப்பெறும் என்று 2005 ஆம் ஆண்டில் எண்ணிப் பார்த்திருக்க முடியவில்லை எனத் தெரிவித்தார்.



தாங்கள் ஆஸ்திரேலியாவில் வைத்துச் சாதித்துள்ளவற்றையும், அவற்றைச் சாதித்த விதத்தையும் ஆஸ்திரேலியாவிலுள்ள மக்கள் மதிப்பார்கள் என்று எதிர்பார்ப்பதாகத் தெரிவித்த கிரேம் ஸ்மித், தங்களைப் பொறுத்தவரை இவ்வெற்றிகள் உலகத்தைப் போன்றது எனத் தெரிவித்தார்.

தென்னாபிரிக்கக் கிரிக்கெட்டோடு சம்பந்தப்பட்டவர்கள் பலர் முன்னைய காலங்களில் ஆஸ்திரேலியாவில் தோற்கடிக்கப்பட்டவர்கள் எனத் தெரிவித்த அவர், ஆஸ்திரேலியாவுக்குச் சென்று அங்கு வெற்றிகளைப் பெறுவதற்கு என்ன தேவையானது என்பதைத் தாங்கள் அறிவோம் எனத் தெரிவித்தார்.

தென்னாபிரிக்க அணியின் இந்த வெற்றி தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த ஆஸ்திரேலிய அணியின் தலைவர் மைக்கல் கிளார்க், முதலிடத்திற்குப் பொருத்தமான அணியாக தென்னாபிரிக்க அணி காணப்படுவதாகவும், ஆஸ்திரேலிய அணி மேலும் முன்னேற வேண்டிய தேவை காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளார். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிவந்து விட்டது

G. E.C - O/L 2012

பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான

குடியுரிமைக் கல்வியும் சமூக நிர்வாகமும்

கடந்த 04 வருட வினா - விடைகள் விலை - 125/

பூபாலசிங்கம், அன்னைபுத்தகசாலை - யாழ்ப்பாணம், துர்க்கா - கல்வாடம், கவிதா - வவுனியா, பொதிகை - புதுக்குடியிருப்பு, சிதம்பரப்பிள்ளை - நெல்லியடி.

உதயன் விளம்பரத் தொடர்புக்கு - advt@uthayan.com 0215671111

## BITSMANS

கல்வி நிறுவனம் மானிப்பாய்.

கல்வியாண்டு 2013

தரம் 3 முதல் O/L வரை சகல பாடங்களும்

ஆரம்பம் 09.12.2012 "No.1 SUPER GRADE ஆசிரியகுழு" ஞாயிறு காலை 9.00 (26465)(9)

யாழ். நல்லூர்

## றோயல் அக்கடமியின்

புதிய கிளை

## நியூநட்டன் அக்கடமி

(தாவடி பிள்ளையார் கோயில் அருகில்)

ஆரம்பம்: 10.12.2012

மு.ப 10.00 மணி

ஆசிரியர் விவரம் உள்ளே (26474)(9)

## Vinoth Curtains

யாழ். மண்ணில் அறிமுகமாகிறது

கேட்டின்ஸ் துறையில் நிபுணத்துவம் பெற்ற எம்மால் கேட்டின்ஸ், மெத்தைவிரிப்பு, றெயிலிங், போல்ஸ், குசன் கவர், வேற்றிக்கல் லைன்ஸ், வெனிசன் பிற்றிங், புளோர் காபற் வேலைகள் செய்து கொடுக்கப்படுகிறது.

தொடர்பு- மைக்கல்
0774906323,
0723995447
0779519144

இல-50/1, நாவலர் வீதி, (மனோகரா தியேட்டர் அருகில்) யாழ்ப்பாணம். (23933)(9.11)

நத்தார் பண்டிகையை முன்னிட்டு LATTOPகணினி மலிவு விற்பனை

sky இன் 14ஆவது வருட சேவையில்

HP, COMPAQ c43 D/core - 57500/=
(500GB, 2GB, 14" Display)
HP PAVIlion g6 i3 -71500/=
(320GB, 2GB, 15" Display)

3 YEARS SERVICE WARRANTY
FREE - DONGLE 7.2mb/ BAG/ HEAD-PHONE/ HP MOUSE/ 8GB PENDRIVE
162, Main Street, Jaffna. (சி/3031)(6.9)
0212224865, 0777271645

## கணினி மலிவு விற்பனை

D/core 3.4 GHz IBM Full Set
29750/= விலையில்
(160GB, 1GB, 16" LCD, DVD)

FREE

8GB PENDRIVE /HEAD PHONE/ WEBCAMARA

ஒருவருட உத்தரவாதம்
ST. ANTONY'S 187, kks Road Jaffna. (சி/3032)(6.9)
0212224865, 0750698608

## SHAMROCK ACADEMY
ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.

1988 - 2013

புதிய ஆண்டில் 25 வருட கல்வி சேவையில் பாலடி பதிக்கின்றது.

புதிய கல்வியாண்டு -2013

ஆரம்பம் 08.12.2012 8.00am

Gr. 1முதல் 11 வரை

English Medium Classes
Gr. 6 To 11

English Literature
Gr. 10 - 11

✱சிங்களம் & I.C.T

அனுமதிகள் வழங்கப்படுகின்றன. (26458)(6.9)

## 40 வது வருட கல்விச் சேவையில் தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்

## விக்ஸா கல்வி நிறுவனம்

52,ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம்.

புதிய கல்வியாண்டு 2013

EVENING CLASS

O/L தரம் 6தொடக்கம் தரம் 10 வரை

ஆரம்பம் 10.12.2012 மு.ப 10.00மணி

அனுமதிகளை இன்று முதல் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்

(ஆசிரியர் குழு விவரம் நாளைய உதயனில்) (C/3026)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக, விஞ்ஞானபீட பௌதிக விஞ்ஞான மாணவர்களுக்கான விசேட அறிவித்தல்

உலக வங்கியிடமிருந்து எமது மாணவர்களின் தொழில் வாய்ப்பினை மேம்படுத்தும் செயற்திட்டத்துக்கான நிதி உதவியினைப் பெறுவதற்கான அறிக்கையினைச் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் 02.01.2013 ஆகும்.

மேற்படி அறிக்கையினை தயாரிப்பதற்கு பௌதிக விஞ்ஞான மாணவர்களிடம் வினாக்கொத்துக்கள் கையளிக்கப்பட்டு மாணவர்களது அபிப்பிராயங்கள் பெறப்படல் வேண்டும். இதற்காக இன்று 06.12.2012 மு.ப 11.00 மணிக்கு பௌதிக விஞ்ஞான மாணவர்கள் அனைவரையும் கணித புள்ளிவிவரவியற் துறையின் 1M விரிவுரை மண்டபத்தில் கூடுமாறு விஞ்ஞான பீடாதிபதி கேட்டுக் கொள்கின்றார்.

பதிவாளர், (சி/3017)(6.9)
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## மரண அறிவித்தல்



## சின்னப்பா குணரட்ணம்

(ஓய்வுபெற்ற உபதபாலதிபர், கனகராயன்குளம்)

புளோப்பளை, பளையைப் பிறப்பிடமாகவும், புகையிரத நிலைய வீதி, பளையை வசிப்பிடமாகவும், 394, கண்டிவீதி, சாவகச்சேரியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சின்னப்பா- குணரட்ணம் நேற்று (05.12.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பா- தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கனகரட்ணம்-தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், கமலாம்பிகையின் (ஓய்வுபெற்ற உப தபாலதிபர், விடத்தற்பளை) அன்புக் கணவரும், திருமதி மலர்-மகாலிங்கத்தின் (ஓய்வுபெற்ற பிரதமலிகிதர், பிரதேச செயலகம், பளை) பாசமிகு சகோதரனும், குணரூபன்(பயிற்சி நிர்வாகி- Steps Institute, யாழ்ப்பாணம்), குணதர்சனா(ஜனா)- கர்ணன்(முகாமைத்துவ உதவியாளர், பிரதேச செயலகம், தென்மராட்சி), குணவித்தியா-முருகதாஸ்(மருந்தாளர், ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி), ஆகியோரின் பாசமிகு தந்தையும், மலர்விழி(ஆசிரியை, யா/மீசாலை வீரசிங்கம் ம.வி), கர்ணன்(சிரேஷ்ட சுகாதாரப் பரிசோதகர், கண்டாவளை), முருகதாஸ்(ஆய்வு கூடப் பரிசோதகர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனும், ஆதிகா, சிவாம்சா, சாந்தித்யன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற மகாலிங்கம்(முன்னாள் சிறாப்பர், சுங்கத்திணைக்களம், கொழும்பு) மற்றும் சிவபாக்கியம்(கனடா, முன்னாள் மருந்தாளர், தேசிய வைத்தியசாலை, கொழும்பு), தங்கேஸ்வரி(கனடா, முன்னாள் இறைவரி உத்தியோகத்தர், கொழும்பு), ஞானேஸ்வரி (இந்தியா, முன்னாள் லிகிதர், பரந்தன் இரசாயனக் கூட்டுத் தாபனம்), காலஞ்சென்ற சாந்தநாயகி(கால்நடை அபிவிருத்தி- போதனாசிரியர், யாழ்ப்பாணம்), மற்றும் சச்சிதானந்தசிவம் (சுவிஸ்), விஜயகுமாரி(கனடா, முன்னாள் ஆசிரியை, முழங்காவில் ம.வி), காசிநாதன் (இத்தாலி), ருக்மணி(கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.12.2012) வியாழக்கிழமை அன்னாரின் தற்போதைய வதிவிடத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப.ஒரு மணிக்கு சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

394, கண்டி வீதி, (சாவகச்சேரி வைத்தியசாலை முன்பாக) யாழ்ப்பாணம்.

தகவல்:
கு.குணரூபன்(மகன்)
க.கர்ணன், வி.முருகதாஸ் (மருமக்கள்)

## தரம் 5 புலமைப்பரிசில் கௌரவிப்பு விழா-2012
## கிளி/அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம்



தரம் -5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த
வி.கின்சிகா -162, யோ.திலக்ஷனா -156
த.டிலக்ஷா -152
ஆகியோரை வாழ்த்துவதுடன் 100 புள்ளிகளுக்கு மேல்பெற்ற மாணவர்கள் மற்றும் அதிபர், முன்னால் அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் (26110)(9)
கிளி/ அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம். பாடசாலை அபிவிருத்தி சங்கம்.

## வீடு விற்பனைக்கு

அச்சுவேலி-சந்நிதி வீதியில் சகல வசதிகளும் கொண்ட மாடி வீடு விற்பனைக்கு

தொடர்புகளுக்கு:0777242025 (26389)(6)

## ஞானோதயம் ஆசிரியர்களின் தரம் 5க்கான புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

காலம் -2013.01.10 திங்கள் பி.ப 4.15

இடம் - 18/4/1, சீனியர்வீதி, கலட்டி, யாழ்ப்பாணம் (கலட்டி அம்மன் கோயிலுக்கு அருகில்)

வகுப்பு நேர அட்டவணை

திங்கள், புதன்- பி.ப 4.15 - பி.ப 6.15வரை
சனி, ஞாயிறு- மு.ப 8.00 -மு.ப 10.00வரை
அலகு, மாதிரிப் பரீட்சைகள் பி.ப 4.00 - பி.ப 6.00 வரை

விடுமுறைக்கால விசேட வகுப்புக்களும் நடைபெறும்.

அனுமதிகளை மேற்குறிப்பிட்ட முகவரியில் உடன் பெற்றுக்கொள்ளவும். (26463)

தொடர்பு- S.திலக் 0774687930, S.வினோத்குமார் 0776121016

## போட்டிப்பரீட்சை விசேட கருத்தரங்கு

22 ஆம் திகதி நடைபெறவுள்ள அலுவலகப்பணியாளர்கள், சிற்றூழியர்கள் ஆகியோரை முகாமைத்துவ உதவியாளராக்கும் பரீட்சைக்கானது சனி ஞாயிறு காலை 9.00 தொடக்கம் 3.00மணி வரை யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புக்கள்பிரிவு யாழ்.ஆஸ்பத்திரிவீதி (கொமர்சல்வங்கியருகில்)

## கிராம சேவகர் மற்றும் ஏனைய பரீட்சைகளுக்கான விசேட வகுப்புக்கள்

வவுனியாவில் காமினிவித்தியாலயத்தில் ஞாயிறு (9/12)காலை 8.00மணி-12.00மணிவரை

மன்னாரில் N.L.H கல்விநிலையத்தில் ஞாயிறு (9/12)பி.ப1.30 மணி-6.00மணிவரை

வெள்ளவத்தையில் M.N.M கல்விநிலையத்தில் பூபாலசிங்கம் புத்தகசாலை அருகில் திங்கள் (10/12)காலை 9.00மணி-3.00மணிவரை

தொடர்புகளுக்கு: 0754164564

Merry Christmas & Happy New Year

## Quick Learning Course
## Spoken English With Grammar

உரையாடட் பயிற்சிகள், பேச்சுப் பயிற்சிகள், உச்சரிப்புப் பயிற்சிகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைய Audio & Video Visuals மூலமாக நடாத்தப்படுகிறது.

December, 2012 G.C.E. (O/L) பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு விசேட கட்டணக்கழிவு வழங்கப்படும்

## Diploma In English (2 Months)

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைக்கேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர், மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

திங்கள், செவ்வாய், வியாழன் ஆகிய நாட்களில் வகுப்புகள் நடைபெறும்

BCHS

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
No. 15 2/1, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna
ஆரியகுளத்துச் சந்திக்கருகில் கொசி Hotel மேல்
Tel: 021 2224550 Hotlines: 0777222422/0777585913/0714299935/0777730074
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vaiavarpulliam Kulam Vavuniya. Tel: 024 3245287

அனைத்து பிரிவுகளும் 2013, January 7 ம் 12 ம் திகதிகளில் ஆரம்பமாகின்றன.

அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் முன்கூட்டியே தங்கள் பதிவுகளை மேற்கொள்வதன் மூலம் ஏற்ற நேர அட்டவணையை தெரிவு செய்து வீண் விரயத்தை தவிர்க்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.12.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.